கல்கி

KALKI
10.6.2001
ரூ. 5.00











ஹாஸ்டலுக்குப் புதுசு!



4 வாரங்களில் அசல் முத்துக்களின் ஜொலித்திடும் சிவப்பழகு

இமாமி
நேசுரலி ஃபேர்

அசல் முத்துக்களுடன் கூடிய சிவப்பழகு க்ரீம்

உத்தரவாதமுள்ள அசல் முத்துக்கள் மற்றும் 11 அரிய மூலிகைகளின் அந்த அற்புத சிவப்பழகு சக்தியை இமாமி ஹெர்பல் ரிசர்ச் தனது நாசுரலி ஃபேர் பேர்ல்ஸ் ஃபேர்னெஸ் க்ரீம், டால்க் மற்றும் சோப்புகளில் கொண்டு வந்துள்ளது.

அசல் முத்துக்களின் ட்ரிப்பிள் ஆக்ஷன் ஃபேர்னெஸ்

மெலானின் சிதறல் : ப்ளீச் செய்வதில்லை - சருமத்தை கருக்கச் செய்யும் மெலானின்னை கட்டுப்படுத்துவதுடன் சருமத்திற்கு ஈரப்பசை அளிக்கிறது.

ஆக்ஸிஜெனேஷன் ஆக்ஷன் : கெடுதி விளைவிக்கும் UV கதிர்கள் மற்றும் சுற்றுப்புற சூழ்நிலை அசுத்தங்களிலிருந்தும் பாதுகாக்கிறது. சருமத்தை சுவாசிக்கச் செய்கிறது.

ஆன்ட்டி ஸ்ட்ரெஸ் ஆக்ஷன் : சாதாரண ஃபேர்னெஸ் க்ரீம்களில் உள்ள கடுமையான ரசாயனங்கள் சருமத்திற்கு தீங்கு விளைவிக்கிறது. அசல் முத்துக்களின் அபார சக்தி சருமத்தின் உள்ளிருந்து அதற்கு பாதுகாப்பு வேலியாக அமைகிறது.

பொலிவில்லாத மங்கலான ஜீவனற்ற நிறத்தை அளிக்கும் சாதாரண ஃபேர்னெஸ் க்ரீம்கள் போலின்றி நேசுரலி ஃபேர்ல்ஸ், முத்துக்களின் அந்த ஜொலித்திடும் பிங்க் நிற, களங்கமில்லாத சிவப்பழகை அளிக்கிறது.

இலவச மாஜிக் ஜெல்

நேசுரலி ஃபேர் பேர்ல்ஸ் க்ரீமுடன் பேர்ல் மாஜிக் ஜெல் இலவசம். அசல் முத்துக்கள் மற்றும் மூலிகைகளின் ஒரு புரட்சிகரமான அடர்ந்த சத்து சிவப்பாக்கும் வேலையை தீவிரமாக்குகிறது.



100 கிராமுக்கு ரூ. 33.00

25 கி.மிக்கு ரூ 30.00

75 கிராமுக்கு ரூ. 10.00

ASCENT/NFP/2001

'எல்லோருக்கும் பால் பாயசம்தான்!'


மாநிலத்தில் முதலிடம் பெற முயன்று, பள்ளியில் முதலிடம் பிடித்த சில பிளஸ் டூ மாணவ, மாணவிகளிடம், "உங்க மகிழ்ச்சியை எப்படிக் கொண்டாடினீங்க?" என்று கேட்டோம்.



தேன்மொழி : *(ராமகிருஷ்ணா மிஷன் சாரதா வித்யாலயா பெண்கள் மேனிலைப் பள்ளி - பனகல் பூங்கா)*

"எப்படியாவது ஸ்டேட் ஃபர்ஸ்ட் வாங்கி விட வேண்டும் என்றுதான் படித்தேன். மிகக் குறைந்த வாக்குகள் வித்தியாசம் மாதிரி, மிகக் குறைந்த மார்க்குகள் வித்தியாசத்தில், அதாவது பதிமூன்று மார்க்குகள் குறைவாக, ஆயிரத்து நூற்று அறுபத்து இரண்டு மதிப்பெண்கள் பெற்று முதலிடத்தை இழந்து விட்டேன். ஆனாலும் சென்னை மாவட்ட அளவில் தமிழில் முதலிடமும், பள்ளியில் முதலிடமும் கிடைத்த செய்தியைக் கேட்டதும், வீட்டில் சந்தோஷம் கரைபுரண்டு ஓடியது. அம்மா... அவசர அவசரமாகப் பால் பாயாசம் வைத்தார்கள். பிள்ளையாருக்குப் பால் பாயசம் வைத்து, நைவேத்தியம் செய்து விட்டு வந்தோம். அன்று வீட்டிற்கு வந்த எல்லோருக்கும் பால்பாயசம்தான் ஸ்வீட். தோழிகள் நேரில் வந்து முத்தம் கொடுத்து வாழ்த்தினார்கள். அன்று முழுவதும் வீடே திருவிழா மூடில் இருந்தது" என்று குதூகலித்த தேன்மொழி மருத்துவப் படிப்பிற்கான நுழைவுத் தேர்வில் தொண்ணூற்று இரண்டு

கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com ஈ மெயில் : kalkiweekly@vsnl.com



''கோல்டு செயின் வாட்ச்சோட காலையிலே வாக்கிங் போன என் கணவரைக் காணோம்!''

''அடையாளம் சொல்லுங்க!''

''புத்தம் புது செயின் - ஆறு பவுன்! சிடிசன் வாட்ச்! குதிரை ஸ்டிக்கர் ஒட்டி யிருக்கும்!''

— தஞ்சை தாமு

சதவிகித மதிப்பெண்கள் பெற்றிருக்கிறார்.

நிவேதிதா – (டி.ஏ.வி பெண்கள் மேனிலைப்பள்ளி, கோபாலபுரம்.)

“முடிவுகள் வெளியான அன்று வீடே சோகத்தில் மூழ்கி விட்டது. அம்மாவை விட அப்பாவுக்குத்தான் ரொம்ப வருத்தம். வருத் தத்திற்குக் காரணம், தமிழகத்தில் முதலிடம் பெற்ற சிவகாசி மாணவர் அருண், ஆயிரத்து நூற்று எழுபத்தைந்து மதிப்பெண்கள் பெற்றிருந்தார். நான் அவரைக்காட்டிலும் ஐந்து மதிப்பெண்கள் அதிகம். மொழிப் பிரிவில் அருண், தமிழை விருப்பப் பாடமாக எடுத்திருந்ததால் அவருக்கே முதலிடம் கொடுத்திருந்தார்கள். நான் சமஸ்கிருதத்தை விருப்பப் பாடமாக எடுத்திருந்ததால் ஐந்து மதிப்பெண்கள் அதிகம் பெற்றும் முதலிடம் எனக்குக் கிடைக்கவில்லை. எனது தந்தை மத்திய சுற்றுச்சூழல் துறையில் பணியாற்று கிறார். வெளிமாநிலத்திற்குப் பணி மாற்றலாகி விடும் சூழ்நிலையில்... அங்கே தமிழ் படிக்க வாய்ப்பு இருக்காது என்பதால்தான் சமஸ் கிருதம் எடுத்தேன். அரசாங்கமே மொழிப் பிரிவில் விருப்பப் பாடத்தைத் தேர்வு செய்து கொள்ள அனுமதி அளித்து விட்டு, இப்போது தமிழ்ப் படித்தவர்களை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்வது என்ன நியாயம்? அடுத்த வருடமாவது இந்த நிலை மாற வேண்டும்'' என்று கூறும் நிவேதிதா, மருத்துவப் படிப் பிற்கான நுழைவுத் தேர்வில் தொண்ணூற்று எட்டு சதவிகித மதிப்பெண்களைக் குவித்திருக் கிறார்.

மாதங்கி : (புனித அந்தோணியார் பெண்கள் மேனிலைப்பள்ளி, ராஜா அண்ணாமலைபுரம்.)

“கணிதம், இயற்பியல், வேதியல் மூன்று பாடத்திலும் சென்டம் வாங்க வேண்டும் என்பதுதான் லட்சியம். ஆனால் மூன்று பாடத்திலும், இரண்டிரண்டு மதிப்பெண்கள் குறைந்து விட்டன. மொத்தம் ஆயிரத்து நூற்று நாற்பத்தைந்து மதிப்பெண்கள் கிடைத்தது. பள்ளியில் முதலிடம் கிடைக்குமென்று வருடத் தொடக்கத்திலேயே வீட்டில் சொல்லி விட்டேன். அதனால் எனக்குச் சர்பிரைசாக இல்லை. ஆனால் மதர், சிஸ்டர்ஸ், ஃப்ரெண்ட்ஸ் எல்லோரும் போட்டி போட்டுக் கொண்டு வாழ்த்தினார்கள். எனது பெயரைப் பள்ளித் தகவல் பலகையில் எழுதிப் போட்டது சந்தோஷமாக இருந்தது. அப்பா வரும்போதே இரண்டு கிலோ சாக்லேட்டுடன் வந்தார். அபார்ட்மெண்ட் முழுக்க சாக்லேட் கொடுத்து அம்மா சந்தோஷப்பட்டார்'' என்கிறார் மாதங்கி.

மாரிமுத்து : (தியாகராயநகர் ஆண்கள் மேனிலைப் பள்ளி)

“அப்பா கூலி வேலைக்குப் போகிறார். மாதத்தில் பத்து நாளைக்கு வேலையே இருக் காது. பலநாள் சாப்பிடாமலேயே பள்ளிக்குப் போவேன். இவ்வளவு கஷ்டத்திலும் அப்பா என்னையும் தம்பிகளையும் படிக்க வைக்கிறாரே..! எப்படியாவது மாவட்ட அளவிலாவது முதலிடம் பிடிக்கணும் என்று படிச்சேன். ஆனால் பள்ளியில்தான் முதலிடம் வாங்க முடிந்தது. அப்பா, அம்மா, அக்கா, தம்பிகள் எல்லோருக்கும் சந்தோஷம் தாங்க முடியவில்லை.. போட்டி போட்டுக் கொண்டு எல்லோரும் சர்க்கரையை அள்ளி என் வாயில் கொட்டினார்கள். நாங்க குடி யிருப்பது குடிசைப் பகுதி என்று கூடப் பார்க் காமல், தலைமை ஆசிரியர், வீட்டுக்கே வந்து சாக்லேட் கொடுத்து வாழ்த்தியது ரொம்ப சந்தோஷமாக இருந்தது. என்ஜினீயரிங் படிக்கணும், வேலைக்குப் போகணும். அப்புறம் குடும்பப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு, என்னை மாதிரி கஷ்டப்படுற நான்கு மாணவர்களுக்காவது படிக்க உதவி செய்யணும்'' என்று சொல்லும் மாரிமுத்து, நந்தனம் சத்தியமூர்த்தி நகர் பகுதியில் உள்ள குடிசை மாற்று வாரிய குடியிருப்பு ஒன்றில் வாடகைக்கு வசித்து வருகிறார்.

— ஸ்ரீசக்கரம்

படங்கள் : ராஜன்

கடவுளுடன் பேச ஹாட்லைன்.



• சுதா • உன்னி • டி.வி.எஸ். • சேஷகோபாலன்

உன்னிகிருஷ்ணன், சேஷ கோபாலன், டி.வி. சங்கர நாராயணன், பெங்களூர் எம்.எஸ். ஷீலா கச்சேரிகள். ஆர். வேத வல்லியோட லெக்-டெம், சுதா ரகு நாதனின் கண்ட ஜாதி த்ரிபுட, கண்ட நடை பல்லவி, பட்டுப் புடைவை - பெர்ஃப்யூம் காம் பினேஷனில் மாமிகள் சொல்லச் சொல்ல கேட்காமல் சீட்டுகளில் கர்சீஃப் போட்டு ரிசர்வேஷன், அணைக்க மறந்த செல்ஃபோன்கள் தனியாவர்த்தனத்தின்போது வாக் அவுட், சுவாரஸ்யமான கான்டீன்... என்று சென்னையின் டிசம்பர் இசை விழாவுக்குரிய சர்வ லட்சணங்களோடு நடந்தேறியது அமெரிக்காவில் ஒரு மியூசிக் ஃபெஸ்டிவல்.

கர்னாடிக் மியூசிக் அசோசியேஷன் அஃப் நார்த் அமெரிக்கா (CMANA), எம்.எஸ், டி.கே. பட்டம்மாள் உள்பட கர்னாடக சங்கீத வித்வான்களை அமெரிக்கா அழைத்து வந்து கச்சேரி செய்ய வைத்த சீனியர் அமைப்பு. இந்த அமைப்பின் வெள்ளிவிழாவையொட்டிதான் நியூஜெர்சியில் இசைத் திருவிழா, மே மாத இறுதியில் தடபுடலாக நடந்தேறியது.

கூட்டமென்றால் அப்படியொரு கூட்டம்! உறுப்பினர் கட்டணம் நூறு டாலர் என்று வசூலித்துவிட்டு கச்சேரிகளுக்கு 'அனுமதி இலவசம்' என அறிவித்து விட்டார்கள்!

சென்னை விழாக்களைப் போலவே துவக்கவுரை - இந்திய கான்ஸல் ஜெனரல் சஷி த்ரிபாதி, 'கர்நாடிக் மியூசிக் இஸ் எ ஹாட் லைன் டு ரீச் காட்' என்று பேச, அரங்குக்குள் நுழையக் காத்திருந்த ரசிகர்களின் கியூ லைன் ஆர்ப்பரித்தது! கான்டீனிலும் வெளியேயும் சி.சி.டி.வி வைத்து நிகழ்ச்சிகளை ஒளிபரப்ப வேண்டியதாகி விட்டது.

லோக்கல் வித்வான் கீதா பென்னட், நாட்டிய தாரகை கமலா லக்ஷ்மண்; சென்னை ஹம்சத்வனி சபா செயலர் ராமசந்திரன் என்று நிறைய வி.ஐ.பிக்கள் கண்ணில் பட்டனர்.

சிமானாவில் முதல் கச்சேரி பாடியவர் டி.வி.சங்கரநாராயணன். வெள்ளிவிழாவின் முதல் கச்சேரியும் அவருடையதே!

ஏழரைக்கு ஆரம்பித்த சுதா ரகுநாதனின் கச்சேரி, இரவு பதினொன்றரைவரை நீடித்தது. 'பிருகாக்களை மறந்து போய் மெட்ராஸிலேயே விட்டு வந்துவிட்டாரோ!' என்று வியக்கிற அளவுக்கு அமைதியான பாட்டு! நட பைரவி, ஆஹிர் பைரவி, வஸந்த பைரவி, ஆனந்த பைரவி, சிந்து பைரவி என்று பல்லவியில் பைரவிகளை விரவியெடுத்தவர் இன்னொரு புதுமையும் செய்தார்:- 25 மலர்களடங்கிய ஒரு பூச்செண்டை அமைப்பாளர்களுக்கு வழங்கினார்! கூடுதலாக, காலஞ்சென்ற குரு எம்.எல்.வி சார்பாகவும் ஒரு மலர்ச்செண்டு!

என்.ஆர்.ஐ குழந்தைகள் வாலன்டியர்களாகச் செயலாற்றி வியர்வை சிந்த உழைத்தார்கள் இந்த விழாவுக்காக. கச்சேரிகளின்போது பெரும்பாலான பாடல்களை அவர்கள் பாடகர்களுடன் சேர்ந்து முணுமுணுப்பதையும் கேட்க முடிந்தது!

— நியூஜெர்சியிலிருந்து
சித்ரா

அறம்

மாலன்

ஆளுனர் அப்படி ஒரு முடிவு எடுப்பார் என்று அனந்தராமன் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

ஆளுனர் மிர்தாவின் அந்தரங்கச் செயலாளராக அனந்தராமன் பொறுப்பேற்றுக் கொண்டு ஆறு மாதங்கள்தான் ஆகிறது. ஆனால் அறம் அவர் கூடவே வந்தவன். பத்து வருடமாக பக்கத்திலேயே இருந்து வருகிறான். தில்லியில் பேராசிரியர், அலகாபாத்தில் துணைவேந்தர், அசாமில் கவர்னர் என்று இடம் மாறிப் போன போதெல்லாம் உடன் போன நிழல். கடைசியாக அவர் கங்கைக் கரையிலிருந்து இங்கே காலடி எடுத்து வைத்தபோது குடும்பம் என்று எதையும் பெரிதாய்க் கூட்டி வரவில்லை. அறம் மட்டும் அவர் கூட வந்தான். நம்பிக்கைக்குரிய உதவியாளன் என்று சொல்வது நாகரீகமாக இருக்கும். என்றாலும் எடுபிடி என்பதுதான் நிஜம். காலைக் குளியலுக்குத் தண்ணீர் விளாவி வைப்பதிலிருந்து இரவு கால் அமுக்கி விடுவது வரை அவருக்கு அறம்தான் செய்ய வேண்டும்.

அந்த அறம் விஷயத்தில் ஆளுனர் அப்படி ஒரு முடிவு எடுப்பார் என்று அனந்தராமன் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

பேராசிரியர் மிர்தா பெரிய படிப்பாளி. ஆனால் பெரும் சந்தேகி. எவரையும் எளிதில் நம்பிவிட மாட்டார். எதையும் இரண்டு மூன்று முறை கேட்டுத் தெரிந்து கொள்வார். கை ரேகைகள் கரைவு போகாமல் இருக்கின்றனவா என்று உள்ளங்கையைக் கூட அடிக்கடி உற்றுப் பார்த்துக் கொள்கிற மனிதர் என்று அவரது எதிரிகள் கிண்டல் அடிப்பதுண்டு. சந்தேகி மட்டுமல்ல, சரியான முன்கோபியும் கூட. கங்கைத் தண்ணீர் குடித்து வளர்ந்த கனமான சரீரம் அவருக்கு. சும்மா உட்கார்ந்திருந்தாலே ஊற்றுப் போல வேர்க்கும். கோபம் வந்தால் குரல் எகிறும். உடைத்துப் போட்ட தர்பூசணி போல் ரத்தச் சிவப்பில் முகம் ஒளிரும்.


அன்று அனந்தராமன் அவரது அறைக்குள் நுழைந்தபோது, கூரைக்கும் பூமிக்குமாகக் குதித்துக் கொண்டிருந்தார். அறத்தின் பனியனைப் பிடித்து உலுக்கிக் கொண்டிருந்தார். அப்படி ஒன்றும் தலைபோகிற விஷயம் அல்ல. அற்பமானதுதான். ஆனால் அவரைப் பொறுத்த வரை புனிதமானது.

தங்கத்தில் பூண் பிடித்த ருத்ராட்ச மாலை ஒன்று அணிந்திருப்பார் மிர்தா. நாலைந்து பவுன் இருக்கும். நல்ல கனம். நேபாளத்திலிருந்தோ, ஜாவாவிலிருந்தோ தருவிக்கப்பட்ட ஒற்றைக் கண் ருத்திராட்சம். அவரது ஆன்மீக குரு அவருக்கென்றே தருவித்து, அனுப்பி வைத்திருந்த மாலை அது. பெரும்பாலும் அது கழுத்திலேயே கிடக்கும். அதிகாலை ஐந்து மணிக்கு எழுந்து, பலகை போல் முதுகை நிமிர்த்தி, பத்மாசனத்தில் காலை மடக்கி, அவர் உட்காரும் போது, கழுத்தில் கிடக்கும் மாலை கைக்கு வந்து விடும். உருட்டிக் கொண்டே ஒரு மணி நேரம் ஜபம் நடக்கும்.

அதே போல மது அருந்தும் மாலைகளில் அவர் அதைக் கழற்றி வைத்து விடுவார். வைத்து விடுவார் என்றால் கண்ட இடத்தில் வைக்க மாட்டார். அதற்கென்றே ஒரு செப்புப் பெட்டகம் உண்டு. அதைக் கண்டவர் கையில் கொடுக்கவும் மாட்டார். அவரே பெட்டகத்தைத் திறந்து வைப்பார். அபூர்வமாக அறத்திடம் கொடுப்பதும் உண்டு. 'காற்று கருப்பு'களிடமிருந்தும், அரசியல்வாதிகளிடமிருந்தும் தன்னைக் காப்பாற்றி வரும் ரட்சை என்றே அதை அவர் நினைத்திருந்தார்.

அந்த ருத்ராட்ச மாலையைக் காணோம்.

கடைசியாக எப்போது கழற்றி வைத்தோம் என்று அவருக்கு ஞாபகம் இல்லை. நேற்று குளிக்கப் போகும் போது கழற்றிப் பெட்டகத்தில் வைத்தது நினைவிருக்கிறது. பூஜையின் போது உருட்டிக் கொண்டிருந்தது நினைவிருக்கிறது. மறுபடி எடுத்து அணிந்து கொண்டது ஞாபகம் இருக்கிறது. பின் எப்போது கழற்றி வைத்தோம்? எங்கே கழற்றி வைத்தோம்? அப்படி எங்கே வேண்டுமானாலும் கழற்றி வைக்கக் கூடிய பொருளா அது? இத்தனைக்கும் நேற்றிரவு ராஜ் பவனில் பார்ட்டி எதுவும் இல்லை. இரவு வெகு நேரம் வரை டெலிவிஷனில் எலக்ஷன் முடிவுகளைப் பார்த்துக் கொண்டிருந்தவர், 'கடவுளே, கடைசியில் என்னைப் போய் சோதிக்கிறாயே' என்று சொல்லிக் கொண்டே எழுந்து கனமான சட்டப் புத்தகத்தைக் கையில்



"பத்து நிமிடத்தில் எல்லாம் முடிந்து விட்டது. பரஸ்பரம் பூட்டு சால்வைகள், பூங்கொத்துக்கள். பதவி ஏற்க வரும்படி ஆளுனர் அழைப்பு விடுத்தார். மதிய ஓய்விற்கு மாடிக்குச் சென்று படுக்கையில் சாய்ந்தபோது தலையணை உறுத்தியது. கையை விட்டுத் துழாவினார். முரட்டு ருத்ராட்சம் கையை உறுத்தியது."



திடீர்ப் பரிசுப் போட்டி — 10

சென்னையில் தண்ணீர்க் கஷ்டம் தலைவிரித்தாடுகிறது. இதற்கு ஆறுதல் சொல்வது மாதிரி நாலு வரியில் 'நறுக்' வாசகங்களை எழுதுங்களேன். சிறந்த வாசகத்திற்கு ரூ. 100 பரிசு உண்டு. ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

எடுத்துக் கொண்டு தூங்கப் போனது ஞாபகம் இருக்கிறது... ஒரு நிமிஷம்... அப்போது... அப்போது... அறம் பால் எடுத்துக் கொண்டு வந்தது நினைவிருக்கிறது. அப்போது அவனிடம் கழற்றிக் கொடுத்தோமோ? ம்... அவனிடம் கொடுத்த மாதிரித்தான் தோன்றுகிறது... இல்லை கொடுக்கவில்லையோ?... இல்லை, இல்லை அவனிடம்தான் கொடுத்திருக்க வேண்டும்.

கோபத்தில் குரல் பிசிற, கேள்வி மேல் கேள்வியாகப் போட்டு அறத்தை உலுக்கினார் மிர்தா. தெரியாது, தெரியாது என்றே திருப்பித் திருப்பிச் சொன்னான் அறம். சொல்லும்போதே அவன் குரல் நடுங்கியது. இத்தனை நாள் விசுவாசமாக உழைத்த என்னைச் சந்தேகிக்கிறீர்களே என்று மனசு ஒடிந்து போனதால் ஏற்பட்ட நடுக்கம் அது. அவன் பொய் சொல்கிறான் என்று சந்தேகப்பட்ட ஆளுனர் அவனை அறைவதற்குப் பாய்ந்தார். அனந்த் குறுக்கே புகுந்து தடுத்தான். ஏடிசி ஓடி வந்தார். "ராஜ்பவனிலேயே திருட்டா? என்ன கேவலம்!" என்று காக்கிச் சட்டையைப் பார்த்ததும் உறுமினார்.

"அறம்தான் திருடியிருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்களா சார்?" பணிவாகக் கேட்டான் அனந்த்.

"அது என் சந்தேகம். கண்டுபிடிக்க வேண்டியது உங்கள் வேலை. இன்று சாயங்காலத்திற்குள் எனக்கு உண்மை தெரிந்தாக வேண்டும்" என்று ஆணையிட்டார். "உதைக்கிற விதமா உதைச்சா உண்மையைச் சொல்வான்" என்றார் அறத்தைப் பார்த்துக் கொண்டே.

அவன் கண்ணின் விளிம்பில் நீர் துளித்திருந்தது.

சிவனின் கண்ணில் நீர் துளித்தது. எரிந்து சாம்பலாகிக் கிடந்த திரிபுரத்தை ஒருதரம் திரும்பிப் பார்த்தான் சிவன். எப்பேர்ப்பட்ட ஊர். மனிதனின் உழைப்பும் கனவும் கலந்து உருவான ஊர். தொழில்நுட்பம் சமைத்த ஒரு புது உலகம். எதிர்காலத்திற்குக் கட்டியம் கூறும் நிகழ்கால வசீகரங்கள். எல்லாம் எரிந்து கிடந்தன. எங்கேயோ நடந்த தவறு எல்லாவற்றையும் எரித்து சாம்பலாக்கியிருந்தது. தவறா? தன்னலமா? நகரம் எக்கேடு கெட்டால் என்ன, நான் நன்றாய் இருந்தால் போதும் என்ற சுயநலம் எல்லாவற்றையும் எரித்து சாம்பலாக்கியிருந்தது. எரிந்து கிடந்த நகரைத் திரும்பிப் பார்த்தான் சிவன். அவன் கண்ணில் நீர் துளித்தது. ருத்ரன் கண்ணில் துளித்த நீர் உதிர்ந்து ருத்ராட்சமாய் இறுகி உலர்ந்தது.

- அதற்கு மேல் படிக்க முடியவில்லை. அனந்த் புத்தகத்தை மூடி வைத்தான். 'கார்டன் ஆப் லைப்' என்ற தலைப்பு கண்ணை ஈர்த்தது. வாழ்க்கைத் தோட்டமா? வனமா?

யோசிக்க நேரமில்லை. ஓய்வில்லாமல் தொலைபேசி ஒலித்துக் கொண்டே இருந்தது. எடுத்தான்.

"பி.ஆர்.கே. ஆளுனரைப் பார்க்க விரும்புகிறார். அப்பாயின்ட்மென்ட் வேண்டும். இன்றே கிடைத்தால் நல்லது."

தேர்தலில் நேற்று ஜெயித்த கட்சியின் தலைவர் பி.ஆர்.கே. நாடறிந்த அரசியல்வாதி. ஆனால் நாடு அவரை அறிந்து கொண்டது அவரது நல்ல செயல்கள் மூலம் அல்ல. ஒன்றுக்கு மேற்பட்ட கிரிமினல் வழக்குகளில் குற்றவாளி என்று தீர்ப்பாகியிருந்ததன் காரணமாகத் தேர்தலில் போட்டியிடும் தகுதியை இழந்திருந்தார். அவர் விஷயத்தில் ஆளுனர் என்ன முடிவு எடுக்கப் போகிறார் என்று அறிந்து கொள்ள நாடே ஆவலாகக் காத்திருந்தது.

"நான் மதிய ஓய்வுக்குப் போகும் முன் எப்போது வேண்டுமானாலும் வரச் சொல்லுங்கள்."

"அவர் உங்களைச் சந்தித்து ஆட்சி அமைக்கும் உரிமை கோர விரும்புகிறார் என்று நினைக்கிறேன். எம்.எல்.ஏக்கள் கூட்டம் நடந்து முடிந்திருக்கிறது."

"ஆம். நானும் கேள்விப்பட்டேன். எனக்கும் தகவல் வந்தது."

"என்ன முடிவு எடுக்கப் போகிறீர்கள்?"

"என்ன முடிவு எடுக்கலாம்?"

"வழக்கு முடியும் வரை அவர் சற்று ஒதுங்கி இருக்கட்டும். அவர்கள் கட்சிக்குள் வேறு யாரையேனும் ஒருவரை தலைவராகத் தேர்ந்தெடுத்துக் கொண்டு வரும்படி அறிவுரை சொல்லலாம்."

"அது ஏற்றுக் கொள்ளப்படும் என்று எனக்கு நம்பிக்கை இல்லை. அது அவர்களது உரிமையில் நாம் தலையிடுவதாகக் கூட அர்த்தம் செய்து கொள்ளப்படலாம்."

"ஆட்சி அமைக்கக் கோருவது அவர்கள்

உரிமை. அதை மறுப்பது நமது கடமை."

ஆளுனர் அவனை நிமிர்ந்து பார்த்தார். அவர் கண்ணில் ஒரு கேள்வி இருந்தது.

"கடமை?"

"இப்போது பி.ஆர்.கே. பொறுப்பேற்றால் அவர் மீதிருக்கும் மற்ற வழக்குகள் என்ன ஆகும்? தவறு செய்தவர்கள் அரசியலைப் பயன் படுத்தித் தண்டனைகள் பெறுவதிலிருந்து தப்பி விட்டால், மக்களுக்குச் சட்டத்தின் ஆட்சி என்பதில் நம்பிக்கை போய்விடும். இளைய தலைமுறைக்கு அறவுணர்வுகள் மீது நம்பிக்கை போய்விடும். நாம் அரசியல்வாதிகளுக்கல்ல. எதிர்காலத் தலைமுறைக்கு அதிகம் கடமைப் பட்டிருக்கிறோம்."

"நான் நிர்வாகச் சிக்கல் எதையும் ஏற்படுத்த விரும்பவில்லை."

"குற்றவாளிகள் அதிகாரம் பெறும் நிலை ஏற்படுமானால், அதிகாரிகளும், நீதிபதிகளும், காவலர்களும் தயக்கமின்றிப் பணி செய்வதில் தடை ஏற்படும். அதுதான் பெரிய சிக்கல்."

"அதிகம் வாதிட விரும்பவில்லை. ஆனால் வன்முறை வெடித்துவிடக்கூடாதே என்பதே என் கவலை" என்றார் ஆளுனர். அவர் கண் ணில், எங்கேயும் பஸ் எரிந்து விடக்கூடாதே என்ற பயம் தெரிந்தது.

"வன்முறைக்குப் பயந்து நிர்வாகம் வளைந்து கொடுக்குமானால், தடிகளே இங்கு தலை எடுக் கும். அரிவாள்களே இங்கு ஆட்சி செய்யும்."

மிர்தா அவனைப் பார்த்து முறுவலித்தார். "மக்கள் தீர்ப்பளித்திருக்கிறார்கள்" என்றார்.

"நமது அரசியல், உணர்ச்சிகள் சார்ந்தது. சட்டம், அறிவு சார்ந்தது. ஒரு சமூகத்தை வழி நடத்த வேண்டியது உணர்ச்சிகளா? அறிவா?"


ஆளுனர் பதில் சொல்லவில்லை. அவர் சாதாரண மனிதனின் கேள்விகளுக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டவர் அல்ல.

பத்து நிமிடத்தில் எல்லாம் முடிந்து விட் டது. பரஸ்பரம் பட்டு சால்வைகள், பூங் கொத்துக்கள், பதவி ஏற்க வரும்படி ஆளுனர் அழைப்பு விடுத்தார். மதிய ஓய்விற்கு மாடிக்குச் சென்று படுக்கையில் சாய்ந்த போது தலை யணை உறுத்தியது. கையை விட்டுத் துழா வினார். முரட்டு ருத்ராட்சம் கையை உறுத்தி யது.

மாலை நடக்கவிருந்த விழாவிற்காக ஆளு னர் மாளிகை வளாகத்தில் ஒரு துணிப்பந்தல் தயாராகிக் கொண்டிருந்தது. பாதுகாப்பு ஏற்பாடு களைப் பார்வையிட வந்த அனந்தின் கண்ணில் ஒரு மரத்தினடியில் அறம் அமர்ந்திருப்பது பட் டது. விழா மும்முரத்தில் அறத்தை எல்லோரும் மறந்து போனார்கள். "அறம்!" என்று கூப்பிட் டான் அனந்த். தலைநிமிர்ந்து பார்த்து, 'சடக்'கென்று எழுந்து நின்றான் அவன். காலை அவன் அழுத கண்ணீர் கண்ணோரம் காய்ந்து கிடந்தது.

அவன் கண்களைப் பார்த்த அந்த நிமிடம், 'சட்'டென்று அந்தக் கேள்விக்கு விடை தோன்றி மறைந்தது. அன்று காலை அவன் ஆளுனரிடம் கேட்ட கேள்வி : ஒரு சமூகத்தை வழி நடத்த வேண்டியது உணர்ச்சிகளா? அறிவா? உணர்ச்சித் தீவிரமோ, உலர்ந்த அறிவோ அல்ல, ஒரு சமூகத்தை வழி நடத்த வேண்டியது அறம். ஆனால் நம் சமூகத்திலோ சாதாரண மக்கள் என்றால் வெறும் சந்தேகத்தின் பேரில் கூட தண்டனை. அரசியல்வாதிகளுக்கோ குற்றவாளி கள் என்றாலும் கூடப் பரிசு. என்ன விசித்திரம் இது? அடிப்படையில் கோளாறா? அல்லது அடிப்படையே கோளாறா?

மனத்தில் கேள்விகள் மொய்க்க, அந்த அரசாங்கக் கட்டிடத்தை நிமிர்ந்து பார்த்தான் அனந்த். அங்கே அலங்காரங்கள் ஆரம்பமாகி யிருந்தன. அறத்தைக் காணவில்லை. ○



"அந்த லிஃப்ட் ஆபரேட்டர் அடிபட்டு ஆஸ்பத்திரியிலே இருந்தாரே. இப்போ எப்படி இருக்கார்?"

" 'படிப்படியா' முன்னேறிட்டு இருக்கார்!"

– ஆர். குட்டி பிரசன்னா


Singapore
Grand



சிங்கப்பூர்

சிந்து என்று ஒரு சின்னப் பெண். வயது நாலு. அப்பா மோகன்ராஜு. ஜகார்த்தாவில் வேலை பார்க்கும் தமிழர். அம்மா ரமா. அக்கா உத்ரா. இந்த நால்வர் அணி டிசம்பர் 99ல் சிங்கப்பூருக்கு வந்து போனார்கள்.

சிங்கப்பூர் சுற்றுலா வளர்ச்சிக் கழகம், 1999 ஜூன் முதல் ஆகஸ்ட் 31, 2000 வரை 15 மாதங்களில் சிங்கப்பூருக்கு வந்து போகும் பயணிகளிடம் ஒரு விண்ணப் பத்தைக் கொடுத்தது. 'சும்மா ஃபில்அப் பண்ணிக் கொடுங்க. குலுக்கல் பிரைஸ் வந்தா, உங்களுக்கு மறுபடி சிங்கப்பூருக்கு வந்து போக இலவச டிக்கட் தரோம்!'' என்றது.





இந்த 458 நாள் 'மில்லேனியமேனியா' ப்ரமோஷன் காம்பெய்னில், சிங்கப்பூருக்கு வந்து போனவர்கள் 93,32,017 பேர். (500 நாள் வச்சிருந்தா நிச்சயம் ஒரு கோடி டூரிஸ்ட்டுங்க வந்திருப்பாங்க!) இந்தப் போட்டிக்கு 'ஒன்ஸ் இன் எ மில்லேனியம்'(OIM) என்று பெயர் வைத்தார்கள். 30 மில்லியன் சிங்கப்பூர் டாலர் இதற்காகச் செலவழிப்பது என்று



இறு நாள் அட்டகாசம்!

பட்ஜெட் போட்டுவிட்டார்கள்.

வாரா வாரம் குலுக்கலில் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிக்குச் சிங்கப்பூர் வந்து மூன்று நாள் தங்கி விட்டுப் போக இலவச விமான டிக்கட், ஹோட்டல் ஏற்பாடு என்று உச்சி குளிர வைத்து விட்டு, மீதி இருந்த விண்ணப்பங் களைக் குலுக்கிப் போட்டு மெகா அதிர்ஷ்டசாலி ஒருவரை 'மில்லேனிய கிராண்ட் பிரைசு'க்குத்



உ

SREE ANNAPOORANI ANNADHANA CHARITABLE TRUST (REGD.1998),
1/B, First Floor, CLC Works Road, Chromepet,
Chennai - 44. Phone: 044-236 5235

Chatram:- 26, South Street, Trirunallar.

ஸ்ரீ அன்னபூரணி அன்னதான அறக்கட்டளை

திருநள்ளாறில்

ஸ்ரீ சனீஸ்வர நவாக்ஷரி மந்த்ர லட்ச ஜப ஹோமம்
ஸ்ரீ லட்சுமி, குபேர, அன்ன பூரணி ஹோமங்கள்

இடம்: ஸ்ரீ அன்னபூரணி சத்திரம், தெற்கு வீதி, திருநள்ளாறு
காலம்: 29.06.2001. காலை 5 மணி முதல் இரவு 7 மணி வரை.

30 வருடத்திற்கு ஒருமுறை ரோகிணி நட்சத்திரத்திற்கு பிரவேசிக்கும் ஸ்ரீ சனீஸ்வர பகவான் இப்பொழுது ஆனி மாதம் 15-ம் தேதி வெள்ளிக்கிழமை 29.06.2001. மாலை 5.59க்கு பிரவேசிக்கிறார்.

இந்த நேரத்தில், ஸ்ரீ சனீஸ்வர ப்ரீதிக்காக ஸ்ரீசனீஸ்வர நவாக்ஷரி மந்த்ர லட்ச ஹோமமும், லட்சுமி குபேர ஹோமமும், ஸ்ரீ அன்ன பூரணி ஹோமமும் செய்யப்படஉள்ளது. ஸ்ரீ சனீஸ்வர ப்ரீதிக்காக நமது சத்திரத்தில் நித்திய அன்னதானம் செய்யப்படுகின்றது. இப்படி நித்திய அன்னதானம் செய்யுமிடத்தில் இந்த விஷேசமான ஹோமங்கள் நடைபெறுவது மிகவும் விஷேசம். இந்த ஹோமங்களில் அனைவரும் கலந்துகொள்ளும்படி பிரார்த்திக்கின்றோம்.

ரோகிணி நட்சத்திரக்காரர்கள் மேஷம், ரிஷபம், மிதுனம், துலாம், கும்பம் ஆகிய ராசிக்காரர்கள் அனைவரும், சனி தெசையும், மற்ற தெசைகளில் சனியின் புக்தியும் நடந்து கொண்டிருக்கும் அனைவரும் இந்த ஹோமத்தில் கலந்து கொள்வது அவசியம்.

இந்த ஹோமங்களில் கலந்து கொள்ள ரூ.200 மட்டும் MO/DD/Cheque "Sree Annapoorani Annadhana Charitable Trust" என்ற பெயரில், Sree Annapoorani Annadhana Charitable Trust (Regd 1998), 1/B, First Floor, CLC Works Road, Chromepet, Chennai - 600 044. என்ற முகவரிக்கு அனுப்பவும்.

பிரசாதமாக கீழ்க்கண்டவைகள் அனுப்பப்படும்.
1. விபூதி, 2. குங்குமம், 3. ஹோம பஸ்பம் 4.ஹோமரட்சை, 5.ஒரு வெள்ளி டாலர், 6. பணம் அனுப்பியவரின் ஜாதகத்தை அனுப்பி, 5 கேள்விகள் கேட்கலாம். இந்த 5 கேள்விகளுக்கும் விரிவான பலனும், தேவைப்பட்டால் பரிகாரங்களும் இல்வசமாக வேறு எந்த கட்டணமும் இல்லாமல் எழுதி அனுப்பப்படும்.

என்றும் ஈஸ்வர அன்னதான சேவையில்,
குருஜி. கல்யாணராம அய்யர், M.A., M.Com., மேனேஜிங் டிரஸ்டி (ஜோஸ்யம், ஆருடம் பரம்பரை புரோகிதம், விசேஷ பூஜைகள், ஹோமங்கள் etc).

**** Advt

தேர்ந்தெடுத்தார்கள்.

அடுத்தது பரிசு சின்னப் பெண் சிந்துவுக்கு! அப்புறமென்ன ஆறுநாள் அட்டகாசம்தான்.

"நாங்க மூணு நாள் சிங்கப்பூரில் சுத்திப் பாத்துட்டு டிசம்பர் 31ஆம் தேதி ஜகார்த்தாவுக்குப் புறப்பட்டோம். நான் அந்த ஃபாரத்தை வாங்கி அசிரத்தையா வச்சிட்டேன். மூத்த மகள் உத்ராதான் 'பூர்த்தி பண்ணுங் கப்பா'ன்னு இன்ஸிஸ்ட் பண்ணா. சரின்னு விண்ணப்பத்தை ஃபில்அப் பண்ணி, சின்ன மகள் சிந்துவோட பேரைப் போட்டுக் கொடுத்துட்டேன். அதுக்கப்புறம் அதப்பத்தி நினைச்சே பார்க்கலே!" என்றார் மோகன்ராஜு.

"செப்டெம்பர் 8ஆம் தேதி சிந்துவுக்கு மில்லேனியப் பரிசு கிடைச்சிருக்குன்னு சொன்னாங்க. சிங்கப்பூர் டூரிஸம் டைரக்டர் மிஸ் மக்தலீன் லீ நேர்ல வந்து லெட்டரைக் கொடுத்து, கன்கிராட்ஸ் சொன்னார். உங்க குடும்பம் பூரா சிங்கப்பூருக்கு வந்து எங்க கெஸ்ட்டா இருக்கலாம். சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் டிக்கட் தருவாங்க. ஃபைவ் ஸ்டார் ஓட்டல் ஹயாத்துல இலவசமா தங்கலாம். சிங்கப்பூர்ல பார்க்க வேண்டிய இடங்களுக்கு நாங்களே அழைச்சுட்டுப் போவோம். போனஸா, 'சூப்பர் ஸ்டார் விர்கோ'ங்கற லக்ஷரி கப்பல்ல மூணு நாள் ஹாயா பயணம் செய்யலாம். பெரிய பெரிய ஸ்டார் ஹோட்டல்லதான் உங்களுக்கு லஞ்ச், டின்னர் எல்லாம். ஆர் யூ ஹாப்பி?" என்றார் லீ.

மோகன்ராஜுவின் குடும்பம், தாத்தா பாட்டி, அத்தை, தங்கை, கணவன்மார்கள், குழந்தைகள் என்று 21 பேர் லிஸ்ட்டில் சேர்ந்தார்கள். கொசுறு, இரண்டு நண்பர்கள் குடும்பம். அத்தனை பேருக்கும் ஓகே சொல்லிவிட்டது சிங்கப்பூர் டூரிஸம்!

சிந்து யு.கே.ஜி படிக்கிற குட்டிப் பெண். சிங்கப்பூரில் அவர் குடும்பத்தாரை வரவேற்க ஒரு டான்ஸ் ஏற்பாடு பண்ணியிருந்தது டூரிஸம் போர்டு. முதலில் போட்டோவுக்குப் போஸ் கொடுக்க ரொம்பவே பிகு பண்ணிக் கொண்ட சிந்து, ரெண்டே நாளில் படு காஷுவலாகி, 'ஹே' ஸ்டைலில் கையை அசைக்கிற அளவுக்கு வந்துவிட்டதுதான் ஆச்சரியம்!

"இந்தியாவிலிருந்து மட்டும் வருஷத்துக்கு சுமார் மூன்றரை லட்சம் பயணிகள் இங்கு வந்து போகிறார்கள்!" என்கிறார் சிங்கப்பூர் டூரிஸம் சீனியர் டைரக்டர் ஆசாத் ஷிராஜ். "மற்ற நாட்டுக்காரர்கள் எல்லாம் சராசரியாக இரண்டு நாள் தங்கி



திடீர்ப் பரிசுப் போட்டி முடிவு – 7

ஜெயலலிதாவின் ஆதரவாளராக சோ திடீரென்று மாறியது ஏன்? என்று தராக கேட்டிருந்தார். ஆளாளுக்குப் புதுப் புதுக் கதைகளை எழுதியிருந்தார்கள். (கற்பனை வளம் ஜாஸ்திங்க) அதில் பரிசுக்குரியதாக தராக தேர்வு செய்தது கோவை வாசகர் என். குப்புசாமி எழுதியதைத்தான்.

ரூ. 100 பரிசு பெறும் பதில்:

"அரசாங்கச் செலவை குறைக்கத்தான்... ஒரு ரூபாய் மட்டுமே சம்பளமாகப் பெற்றுக் கொண்டு சிக்கனமாகவும் சிறப்பாகவும் ஆட்சி செய்ய யாரால் முடியும்?"



என். குப்புசாமி,
2/188, வெங்கிட்டாபுரம்,
வெங்கிட்டாபுரம் போஸ்ட்,
கோவை – 641 014

னால், இந்திய டூரிஸ்ட்டுகள் ஐந்து நாள் தங்குகிறார்கள். மற்ற நாட்டுக்காரர்களைவிட அதிகமாக செலவழிக்கவும் செய்கிறார்கள்!''

முதல் நாள் பிற்பகல் சாப்பாடு முடிந்தவுடன் மாஸ்கோ சர்க்கஸில் சிந்துவை வரவேற்று, பிறகே ஷோவை ஆரம்பித்தார்கள். பிரமிக்க வைக்கும் சாகஸம், சிரிக்க வைக்கும் கோமாளிக்கூத்து என்று சுமார் மூன்று மணி நேரம் போவது தெரியாமல் கட்டிப் போட்டு விட்டார்கள்.

இரவு, மிகப் பிரும்மாண்டமான, 150 வருடத்திய பாரம்பரியம் கொண்ட ராஃபின்ஸ் ஹோட்டலில் டின்னர். எலிசபெத் டெய்லர், கிளிண்டன் போன்றவர்கள் தங்கிய ஹோட்டல் என்றார்கள். இங்கே சிந்துவையும் அவரைச் சேர்ந்த குழந்தைகளையும் சிரிக்க வைக்க என்றே ஒரு மாஜிக் விளையாட்டு நிபுணர் வந்து குட்டிக் குட்டிப் பரிசுகள் வழங்கினார். (தூங்கிக் கொண்டிருந்த குழந்தைகளுக்குக் கூடப் பரிசு!)

மறுநாள் தாய்லாந்து ரெஸ்ட்டாரன்ட்டில் லஞ்ச். பிறகு கேபிள் கூண்டுக் காரில் சென்டோஸா தீவுக்குப் பயணம். (கீழே பார்த்தால் கடலும், வானுயரக் கட்டடங்களும், சோம்பேறித்தனமாக நீந்திக் கொண்டிருக்கும் சின்னச் சின்னக் கப்பல்களும்!)

செந்தோசாவில், கடல் வாழ் உயிரினங்களின் வாழ்க்கையை கடல் மட்டத்திலேயே பார்த்து ரசித்து, துள்ளிக் குதித்து உணவைக் கவ்வும் டால்ஃபின் ஷோவையும் ரசிக்கலாம்.

இரவு அரை மணி நேர மியூசிக் ஃபவுன்டன், லேசர் ஷோ இரண்டும் அசத்தி விடும் உங்களை!

மறுநாள் சிம்பன்ஸியுடனும், உராங் உடானுடனும் ஒரு கை குலுக்கல், ஜுவலாஜிகல் பூங்காவில். "ரொம்ப சின்டாதீர்கள். இவை பழக்கப்பட்டவை என்றாலும், மிருகங்கள் என்பது நினைவு இருக்கட்டும்!'' என்றார் ட்ரெயினர். ஆனால் எல்லாருடனும் மடியில் (கனமாக) உட்கார்ந்து போட்டோ எடுத்துக் கொள்ள இரண்டுமே ஒத்துழைத்தன. சிந்து முதலில் பயந்தாலும் பிறகு ஜாலியாகக் கைகுலுக்கினாள்!

'ரெயின் ஃபாரெஸ்ட்' என்றொரு ரெஸ்டாரன்ட். பிற்பகல் உணவு அங்கே தான். ஒரு சின்ன காடு மாதிரியே இருக்கிறது. இடி, மின்னல் எல்லாம் கூட உண்டு. மழை கிடையாது. (வெஜிடேரியன்களுக்கு அரிசிச் சாதமும், ஃப்ரெஞ்ச் ஃப்ரையும் தாராளமாகக் கிடைக்கும்!) உபசரிப்புக் கலையில் இவர்களை மிஞ்ச முடியாது என்று ஸ்டாம்ப் பேப்பரில் எழுதிக் கையெழுத்துப் போடலாம்!

ஜுராங் பறவைகள் பார்க் ஆரம்பித்து 30 வருடங்கள் ஆகின்றன. ஆனாலும் இந்த 20 ஹெக்டேர் பரப்பளவு பார்க்கில் கூடும் டூரிஸ்ட்டுகள் கும்பலுக்குக் குறைச்சலில்லை. 8000 பறவைகள். பேசும் கிளிகள், நாரைகள், கொக்குகள், பழக்கப்பட்ட பல வண்ணப் பறவைகள் எல்லாம் சேர்ந்து அடிக்கும் கூத்துக்கு அசாத்திய வரவேற்பு, கைதட்டல்.

ஒரு குட்டிப் பெலிகனுக்குப் பெயர் சூட்டச் சொன்னார்கள் சிந்துவிடம். சிந்து வைத்த பெயர்: சிந்து!

இதோடு விட்டு விடாமல், மாலை ஐந்து மணிக்குச் 'சூப்பர் ஸ்டார் விர்கோ' கப்பலில், பாஸ்போர்ட்டை வாங்கிக் கொண்டு, ஒரு ஆக்ஸஸ் கார்டு கொடுத்தார்கள், நம்முடைய கிரெடிட் கார்டு மாதிரி. உள்ளே நுழைந்தால் இது கப்பலா, மிதக்கும் நகரமா என்று பிரமிக்க வைத்தது. பதிமூன்று டெக்குகள். அத்தனைக்கும் போக வர கண்ணாடிக் கூண்டு



லிஃப்ட்டுகள். ஜாகிங் ட்ராக், பாஸ்கெட் பால் கோர்ட், லைப்ரரி - இன்டர்நெட், பார், ஸ்விம்மிங்பூல் என்று ஏக அமர்க்களம். பால்கனி அறைகள் ஒவ்வொன்றும் ஹோட்டல் ரூம் மாதிரி அத்தனை வசதிகள்!

மறுநாள் பிற்பகல், கோலாலம்பூரின் துறைமுகமான க்ளாங் நகரில் நங்கூரம் பாய்ச்சியதும், வெளியே காத்திருந்த ஏர்கண்டிஷன்ட் பஸ்ஸில் நகருக்குள் அழைத்துப் போனார் 'கைடு' கண்ணன்.

24000 பேர் அமரக்கூடிய நீல மசூதி, சீனக் கோயில் டியான் ஹூால் என்று காண்பித்துவிட்டு, "இரண்டு மணி நேரம் ஷாப்பிங் செய்து கொள் ளுங்கள்" என்றார் கண்ணன். "ஆனால் அதற்கு முன்னால் மெனாரா கோலாலம்பூர் டவர் பார்த்து விடுங்கள்" என்றார். மெனாரா கோலாலம்பூர் டவரில் ஒரு சுழலும் ரெஸ்டாரன்ட் இருக்கிறது. மொத்தம் 421 மீட்டர் உயரம். ஆனால் 276 மீட்டர் உயரத்தில் லிஃப்ட்டை நிறுத்தி, நகரத்தையே ஒரு 'பறவைப் பார்வை' பார்க்க அனுமதித்தார்கள். (இதுக்கும் டிக்கட் உண்டுங்க!)


பிறகு மறுபடி கப்பலில் கொண்டு சேர்த்தார் 'கைடு' கண்ணன். "உங்க எல்லார்கிட்டயும் இன்னிக்கு முழுக்க முழுக்க தமிழ்லயே பேசறதுக்கு எனக்கு வாய்ப்புக் கிடச்சதுல ரொம்ப சந்தோஷம்!" என்றார் கண்ணன். மனைவி சரஸ்வதி, மலேசியத் தமிழ் எழுத்தாளர்.

ஆடாது அசங்காது சூப்பர் ஸ்டார் விர்கோவில் பயணம் செய்து சிங்கப்பூர் கப்பல் தளத்தை அடைந்தபோது பிற்பகல் ஆகிவிட்டது. ஏர்போர்ட் எத்தனை கவர்ச்சியாக இருக்கிறதோ அதே அளவுக்கு இருக்கிறது கப்பல் தளமும்! சிங்கப்பூருக்குப் போகிறவர்கள், கட்டாயம் இந்த சூப்பர் ஸ்டார் விர்கோவில் பயணம் செய்து பார்க்க வேண்டும்.

மீடியா சார்பாக 'கல்கி'யிலிருந்து ஆறுநாள் அட்டகாசப் பயணத்துக்கு நாம் போக முக்கியக் காரணம் சிந்து என்ற தமிழ்ப் பெண்ணுக்கு மில் லேனியப் பரிசு கிடைத்ததுதான். விஜய் டீவியிலிருந்து பிரதீப், மணி, ப்ரியா பிள்ளை, காமிராமேன் ராஜு என்ற நால்வர் குழு வந்திருந்தது. (ஓர் இடம் விட்டு வைக்காமல் சிங்கப்பூரை அப்படியே காமிராவில் சுருட்டிக் கொண்டு வந்து விட்டார்கள்!) நம்முடன் வந்த புகைப்படக் கலைஞர் யோகா மட்டுமென்ன! ரோல் ரோலாக அவர் காமிரா விழுங் கியதைத்தான் இங்கே வண்ணப் படங்களாகப் பார்க்கிறீர்கள்.

நாங்கள் தங்கியிருந்த கிராண்ட் காப்தோர்ன் வாட்டர் ஃப்ரன்ட் ஓட்டலும் சரி, மெரிடஸ் நெகாராவும் சரி, உபசரிப்புக் கலையின் உச்சத்துக்கே எடுத்துக்காட்டுக்கள். சிங்கப்பூர் டூரிஸ அதிகாரிகள் பூன்ஹீயும், கண்ணன்மேனனும் நிழல் மாதிரி எங்களைத் தொடர்ந்து கொண்டே இருந்தார்கள். இவர்களுக்கு நன்றி சொல்லவில்லை என்றால் நன்றாயிருக்குமோ?

கட்டுரை: **சாருகேசி**
படங்கள்: **யோகா**





2001 ஜூன் 10
விஷு வைகாசி 27
மலர் : 59
இதழ் : 45

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



வரவேற்கிறார் வாஜ்பாய்; சீண்டுகிறார் ஜஸ்வந்த்!

பாக், அதிபர் பர்வேஸ் முஷரஃப் கார்கில் கொடுமையின் காரணகர்த்தாவாக இருக்கலாம். எனினும், அவரைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்த பின் இந்தியா பழசை மறந்துவிட்டுச் செயல்படுவதுதான் நியாயம்; நல்லதும்கூட.

ஆனால், இந்தோ-பாக் உறவுகள் குறித்து பத்திரிகையாளர்களால் துளைத்தெடுக்கப்பட்ட அயலுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்த் சிங், காஷ்மீர் விஷயத்தில் இந்தியா அணுவளவும் விட்டுக் கொடுக்காது என்று மட்டுமே பதில் கூறியிருக்கிறார்.


மாறாக, பேச்சுவார்த்தைக்கான அழைப்பை முஷரஃப், உடனே ஏற்றதுடன், அப் பேச்சுவார்த்தைகளை நம்பிக்கையுடன் எதிர்நோக்குவதாகத் தெரிவித்துள்ளார். இந்தியப் பிரதமரின் பரந்த மனத்தையும் தீர்க்கதரிசனத்தையும் வரவேற்றுப் பாராட்டியிருக்கிறார்.

இந்தியத் தரப்பிலிருந்து அழைப்பு சென்றதேயொழிய, ஆக்கப்பூர்வமான அறிக்கைகள் எதுவும் வெளிப்படவில்லை. மாறாக,

"நிச்சயமாக காஷ்மீர் குறித்துப் பேச மாட்டோம். இதர விஷயங்களை விவாதிக்கலாம்."

"முஷரஃப் இங்கு வரும்போது ஹுரியத் தலைவர்கள் அவரைப் போய் நேரடியாகச் சந்தித்துப் பேசக்கூடாது."

"பாக், அதிபர் இந்தியா வருவது ஒரு விருந்தாளியாகத்தான்; அவர் விருந்தாளிபோல் நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்ப்பார்க்கிறோம்..."



இந்தியாவுடனும் உலகின் இதர நாடுகளுடனும் பாகிஸ்தான் எத்தகைய உறவை விழைகிறது என்பதை முதலில் நிச்சயித்துக் கொள்ளட்டும். அப்புறம் பேச்சு வார்த்தைக்கு வரட்டும்..."

இவ்வாறு விதம் விதமான எதிர்ப்புணர்வு அறிக்கைகள் மூலம் பாகிஸ்தானைச் சீண்டிப் பார்த்துக் கொண்டிருக்கிறார் இந்திய அயலுறவுத்துறை அமைச்சர்.

பாகிஸ்தான் அயலுறவுத் துறை அமைச்சர் அப்துல் சத்தார் பேசிய வார்த்தைகளே ஜஸ்வந்த் சிங்கைத் தூண்டிவிட்டதாகத் தெரிகிறது.

"காஷ்மீரில் வாக்கெடுப்பு நடத்தி அதன் மூலம் மக்கள் கருத்தை அறியவேண்டும்." என்று பேசியதுதான் சத்தார் செய்த 'குற்றம்'.


'காஷ்மீரில் வாக்கெடுப்பு நடத்துவது குறித்துப் பேச அவருக்கு யாதொரு உரிமையும் இல்லை. காஷ்மீர் இந்தியாவின் ஓர் அங்கம். இந்நிலையில் எந்த மாற்றமும் இருக்க முடியாது; இருக்கக் கூடாது...' என்பது இந்தியத் தரப்பு வாதம்.

இந்த வாதத்தில் நியாயம் இருக்கலாம். ஆனால், அண்டை நாட்டு அதிபரைப் பேச்சு வார்த்தைக்கு அழைத்துவிட்டு எல்லா விஷயங்களையும் வீம்புப் பிடிவாதத்துடனும் சந்தேகக் கண்ணுடனும் அணுகுவது ஆரோக்கியமானதல்ல.

காஷ்மீரத்தில் பயங்கரவாதத்துக்கு எதிராகப் போர் நிறுத்த அறிவிப்புச் செய்திருந்தது இந்திய அரசு. அந்தப் போர் நிறுத்த அறிவிப்பு இப்போது ரத்தாகிவிட்டது. அதாவது, பல்வேறு போராளி அமைப்புகளுக்கு எதிரான ராணுவ நடவடிக்கை இனி தொடரும். போராளிகளை காஷ்மீரத்தில் ஊடுருவ ஊக்குவிப்பதே பாகிஸ்தான்தான் என்று நாம் குற்றம்சாட்டி வந்திருக்கிறோம். ஆன போதிலும் பாக். அதிபர் பேச்சு வார்த்தைக்கு ஒப்புக் கொண்டிருக்கிறார்.

போர் நிறுத்தம் ரத்தான சூழலில் பாக். அதிபர் நமது அழைப்பை ஏற்றதும் ஒத்திசைவுடன் பேசியிருப்பதும் இந்தியாவுக்குப் பெரிய ஆதாயம்.

அந்த ஆதாயத்தைக் காத்து, பெருக்கிக் கொள்ள சில எளிமையான வழிமுறைகளைக் கடைப்பிடித்தாலே போதும்.



முதல் படியாக முஷாரஃப் விஜயத்தின்போது காஷ்மீர் குறித்துப் பேச ஒப்புக் கொள்ள வேண்டும். அவர் கருத்துகள் எல்லாவற்றையுமே ஏற்க வேண்டுமென்பதில்லை; ஆனால் பேசுவதில் என்ன தவறு...?

அதே நேரத்தில் எல்லைப் பகுதியில் ராணுவத்தின் கண்காணிப்பும் ஓசைப்படாமல் பலப்படுத்தப்பட வேண்டும்.

பாக். அதிபருடன் பேச்சு வார்த்தைகள் நடத்தும்போது, காஷ்மீரை மட்டும் விட்டுவிட்டு, இதர பல விஷயங்களைப் பேசி ஒப்பந்தங்களைச் செய்து கொள்வதில் யாதொரு பயனும் இராது.

தொழில் - வர்த்தக ஒப்பந்தங்களோ கலாசார பரிமாற்றங்களோ, பாகிஸ்தான் வழியே இந்தியாவுக்குள் ஈரானிய எண்ணெய்க் குழாய்களைக் கொண்டு வருவதோ... எதுவாயினும் சரி, காஷ்மீர்ப் பிரச்னை தீராத வரையில் எந்த வகையான அர்த்தமும் பெறப் போவதில்லை.

காஷ்மீர் பகுதியில் வேரூன்றியுள்ள தீவிரவாதமும் அப்பகுதியின் பூகோள அமைப்புமாகச் சேர்த்து, அப்பகுதியின் பாதுகாப்புச் செலவை மிகவும் அதிகமாக்கியுள்ளன.

பாகிஸ்தானுடனான புதிய ஒப்பந்தங்கள் மூலம் பெறக்கூடிய லாபங்களை காஷ்மீரின் பாதுகாப்புக்காகச் செலவிடும் கோடிகள் விழுங்கிக் கொண்டேயிருக்கும். மேலும், காஷ்மீரில் அமைதி நிலவாதவரை பாகிஸ்தானுடன் சுமுக உறவும் தொழில் வர்த்தக உறவும் சாத்தியமே இல்லை.

எனவே, முஷாரஃப் வருகைக்குள் காஷ்மீர் தீவிரவாதக் குழுக்களுடன் பேசி முடிப்பதும் அவர்கள் நிலையை நன்கு தெரிந்துகொண்டு பாக். அதிபருடனான பேச்சு வார்த்தையை அணுகி, காஷ்மீர்ப் பிரச்னையை விவாதிப்பதும் முக்கியத்துவம் பெறுகின்றன.

காஷ்மீர்ப் பிரச்னையை மட்டும் தீர்த்துக் கொள்ளமுடியுமானால் இந்தியாவும் பாகிஸ்தானும் ஒத்திசைவுடன் இயங்கி, ஆசியாவின் மிகப்பெரிய சக்தியாகிவிட முடியும். வல்லரசு நாடுகளின் மரியாதையையும் நேசக் கரத்தையும் மிகச் சுலபத்தில் பெற முடியும்.

அணு ஆயுத உற்பத்தித் திட்டங்களை உதறும் உறுதி இரு நாடுகளுக்கும் வேண்டும். எல்லாவற்றுக்கும் முதல் படி, நிபந்தனைகள், முட்டுக்கட்டைகள் போடாமல் விசால மனத்துடன் முஷாரஃப்பை வரவேற்பது! ○

நிஜத்தில் ஒரு சினிமா

கொடூர ஆயுதங்களோடு கூட்டமாக வந்து தாக்கிக் கொள்ளையடிப்பதும், கொலை செய்ய முயல்வதும் இந்திய சினிமாவில் இடம் பெறும் காட்சிகள்தான். அதுவே கண் முன்னால் நிகழ்ந்து, அதை அனுபவித்தால் எப்படியிருக்கும்...?

"நாங்கள் யாரும் உயிரோடு திரும்புவோம் என்று கனவிலும் நம்பவில்லை. இன்னும்கூட என்னைக் கிள்ளிப் பார்த்துக் கொள்கிறேன்" என்று அதிர்ச்சி விலகாத முகத்துடன் தழுதழுக்கிறார் இயக்குனர் கே.எஸ். ரவிக்குமார்.

"அவுட்டோர் படப்பிடிப்பில் வேடிக்கைப் பார்க்க வருபவர்களில் ஒரு சிலர், சினிமாக்காரர்களைக் குரோதமாக பார்ப்பார்கள். நாங்கள் மகிழ்ச்சியில் மிதப்பதாக அவர்களது எண்ணம். இதனால் நடிகர், நடிகைகளை மொழி தெரியாது என்ற தைரியத்தில் கேவலமான வார்த்தைகளால் கிண்டல் செய்வார்கள். கர்நாடகாவிலும் அதுதான் நடந்தது.

"ஒரு உதவி இயக்குனர் உட்பட நமது யூனிட்டிலேயே பல கன்னட நண்பர்கள் இருந்தார்கள். அவர்களுக்கே



• கே.எஸ். ரவிக்குமார்

தெரியும். முதலில் அவர்கள்தான் தாக்கத் தொடங்கினார்கள். ஒரு ஆள் ஓடிச் சென்று, கன்னடர்களை, தமிழர்கள் தாக்குவதாக அல்லது கொலை செய்துவிட்டதாகச் சொல்லியிருக்க வேண்டும். கொஞ்ச நேரத்தில் வீச்சரிவாள், இரும்பு கம்பி, உருட்டுக்கட்டை, ஈட்டி என்று கொடூர ஆயுதங்களோடு தாக்கத் தொடங்கி விட்டார்கள்.

"கொலை வெறியோடு வந்த கூட்டம், கொஞ்ச நேரத்தில் கொள்ளைக் கூட்டமாக மாறியது... யூனிட்டில் இருந்த நூற்று ஐம்பது பேரிடமும், தங்கச் சங்கிலி, பிரேஸ்லெட், வாட்ச் என்று எல்லாவற்றையும் தாக்கியே பறித்தார்கள். கேஷ்பாக்சில் இருந்த நாலரை லட்சம் ரூபாயைக் கட்டுக்கட்டாக எடுத்துக் கொண்டு ஓடினார்கள். சிலர் லாப்டாப் கம்ப்யூட்டரையும், மேக்கப்பாக்சையும் கூட விடவில்லை. இறுதியில் எல்லாவற்றுக்கும் தீ வைத்துக் கொளுத்தினார்கள். நாங்கள் பறி கொடுத்த பொருட்கள்தான் எங்களை காப்பாற்றின" என்று கண்கலங்கியவர், "கர்நாடகத்திற்குப் படப்பிடிப்பிற்காக இனி நான் ஒரு போதும் போகப் போவது இல்லை. மற்ற நண்பர்களையும் போக வேண்டாம் என்றுதான் தடுப்பேன்" என்கிறார்.

"ரஜினி படங்களைத் தொடர்ந்து இயக்கி வரும் நிலையில், அவர் கர்நாடகத்தில்தானே படப்பிடிப்பு நடத்த வற்புறுத்துவார்" என்றால் "அங்கு உயிருக்கும், உடமைக்கும், ஏன் கற்புக்கும்கூட பாதுகாப்பு இல்லை என்பதை அவரே உணர்வார்... அவரே மறுத்து விடுவார். என்னால் மனச்சலனத்தோடு அங்கு பணியாற்ற முடியாது" என்றபடி "மலர் மருத்துவமனைக்குப் புறப்படுகிறேன். தாக்குதலில் முதுகெலும்பும், கை, காலும் முறிந்த பல தொழில் நுட்பக் கலைஞர்களைச் சேர்த்திருக்கிறோம்... முதலில் அவர்களைக் காப்பாற்ற வேண்டும்' என்று கைகுவித்து கும்பிடக்கூட கஷ்டப் பட்டார் ரவிகுமார். தாக்குதலில் இருந்து இவரும் தப்பிக்கவில்லை.

— ஜெயந்த்

படம்: ராஜன்

வட்டமேஜை

✉ பொன்னியின் செல்வனில், 'பல்லக்கின் அழகைப் புகழ்வதா? குதிரைகள் நிற்கும் பாணியை வியப்பதா? மகுடாபிஷேக அணிகலன்களைக் கண்டு மகிழ்வதா? அன்னை 'அறம் வளர்த்த நாயகி'யின் அழகை (வடித்த அருமையை) வியப்பதா? ஓலைச் சுவடியால் அடிபட்டுத் தப்பியோடும் பூனையின் (பின்புறத்) தோற்றத்தை (வரைந்திருக்கும் நேர்த்தியை) வியப்பதா? கூண்டே ஆடும்படி பரிதவிக்கும் கிளியின் பதற்றத்தைக் கண்டு வருந்துவதா?- எல்லாவற்றையும் பத்மவாசனின் தூரிகை பதித்திருப்பதைக் கண்டு மகிழ்கிறோம்.

கோவை-1, எஸ். ஆர். சீதாலக்ஷ்மி.

✉ தலையங்கம் வழக்கமான ஜெ. வசை புராணம். மக்கள் தீர்மானம் கல்கி கணக்குக்கு எதிராக இருக்கிறது. வோட்டு போட்டவர்களுக்கு மதிப்பு கொடுங்கள். இனியாவது கல்கி நடுநிலை எடுக்கட்டும்.

திருவான்மியூர், கே.ஆர். ராமன்.

அண்ணனா? தம்பியா?

✉ 'ஃபீபர்தின் தூனே க்யா கியா'வில் குறிப்பிட்டு உள்ளது போல் பெரோஸ்கான் சஞ்சய்கானின் தம்பி இல்லை. அண்ணன். மும்பையில் இருப்பவருக்கு இது தெரியாதது அதிசயம் தான்.

சென்னை - 47, எஸ். ராமச்சந்திரன்.

✉ ஒற்றைக் குழந்தை குடும்பம் என்பது பொருளாதார ரீதியாக வரவேற்கக் கூடிய ஒன்றாக இருந்தாலும் குழந்தையின் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, பகிர்ந்து வாழும் குணம் ஆகியன விட்டுப் போகும் அபாயம் இருக்கிறது!

திருவானைக்காவல், எஸ். கௌரிலக்ஷ்மி

✉ ஆளுநரால் நியமனம் செய்யப்படும் முதலமைச்சர், அப்பொறுப்பை ஏற்றதுமே ஓர் அரசாங்க ஊழியராகி விடுகிறார். (இந்திய அரசியல் சாசன 164வது ஷரத்து). ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ், ஓர் அரசு ஊழியர் பேரில் குற்றப் பத்திரிகைத் தாக்கல் செய்யப்பட்டு, அவர் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்படுமானால் உடனேயே தமது வேலையை இழக்கிறார் அவ்வூழியர்.

ஆனால், தமிழ்நாட்டிலோ, தண்டனை பெற்ற ஒருவர் அரசு ஊழியராகியிருக்கிறார்- முதல்வராகியிருக்கிறார்!

இதனால், 'சட்டத்தின் பார்வையில் அனைவரும் சமம்' என்கிற கோட்பாடு தகர்ந்து போயிருக்கிறது.



ஜெயலலிதா பேரில் வழக்குத் தொடர்வதற்குப் போதுமான ஆதாரங்கள் உள்ளன; என்று ஆராய்ந்து கூறி வழக்குத் தொடர அனுமதி அளித்த ஆளுநரே இப்போது அவரை முதல்வராகப் பதவிப் பிரமாணம் செய்வித்திருப்பது பெரிய முரண்பாடு. வழக்குத் தொடர்பான ஆதாரங்களும் ஆவணங்களும் குற்றம் சாட்டப் பெற்ற நபரின் கைக்கெட்டும் தூரத்துக்கு வந்துவிட்டன. இந்நிலையில் நீதி நிலை நாட்டப்படும் என்று எவ்வாறு எதிர் பார்ப்பது?

மக்கள் தீர்ப்புக்கு ஆளுனர் மதிப்பு தர வேண்டும் என்று கூறுவதை ஏற்க முடியாது. ஏனெனில், சட்ட அமைப்பு பெரும்பான்மையின் விருப்பத்துக்குக் கட்டுப்படத் தேவையில்லை. மக்களின் மகத்தான தீர்ப்பு என இத் தேர்தல் முடிவை வர்ணிப்பதும் சரியில்லை. மொத்தமே 58 சதவிகித வாக்குப் பதிவு தான் நிகழ்ந்துள்ளது. இதில் வெற்றி பெற்ற கூட்டணியின் பங்கைக் கணக்கிட்டால் தமிழக வாக்காளர்களுள் 25 சதவிகிதமே இருக்கும்.

சென்னை - 45,

ஆர். கோபாலகிருஷ்ணன்

● எஸ்.பால்சாமி, கணக்கன்பட்டி

? ஜெயலலிதா முதல்வர். இனி தனி நீதிமன்றங்களில் உள்ள வழக்குகள் என்னவாகும்? அரசு வழக்குரைஞர்கள் ராஜினாமா செய்துள்ளனர். உயர்நீதி மன்றத்தில் உள்ள மேல் முறையீடு வழக்குகள் என்னவாகும்?

! என்ன மிஸ்டர் பால்சாமி... இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமா என்பது போலக் கேட்கிறீர்களே... 'தனி நீதிமன்றங்கள் சட்டபூர்வமாக அமைந்தவை அல்ல' என்பதாக திருவாளர் தம்பிதுரை அடி எடுத்துக் கொடுத்துவிட்டாரே! தனி நீதிமன்றங்களே சட்டபூர்வமாக அமைந்தவை இல்லை என்றால் அவற்றின் தீர்ப்புக்கு வலு ஏது..? இனி 'ஜெ'தான் சூப்பர் உச்சநீதிமன்றம்!

● சச்சின் சக்திவேல், மயிலாடுதுறை ★

? கலைஞர் கருணாநிதிக்கு நீங்கள் சொல்ல விரும்பும் மேலான அட்வைஸ் என்ன..?

! சத்தியசோதனை படிக்கவும், படித்திருந்தால் திரும்பவும் படிக்கவும். அராஜகம் கட்டவிழ்த்து விடப்படும்போது மெய்யான காந்தியம் மட்டுமே துணை நிற்கும்.

● எம். அசோக் ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி

? தமிழக சட்டசபை இந்தியாவிலேயே முன் மாதிரியான சட்டசபையாக இருக்க வேண்டும் என்கிற 'ஜெ'யின் ஆசை எப்படி...?

! மோசமான முன்னுதாரணங்களுக்கு ஏற்கெனவே முன் மாதிரியான சட்டசபையாகத்தானே இருக்கிறது. சட்டபூர்வமாக முதல்வர் பதவியே கேள்விக் குறியாகியுள்ள நிலையில் உலகில் எந்த சட்டசபையாவது நடக்கிறதா என்ன..?

● ப. இராம் முருகன், சிவகங்கை.

? 'தமிழகத்தின் நிரந்தர முதல்வரே!' என்று மீண்டும் போஸ்டர்கள் முளைத்துள்ளது குறித்து...?

! போஸ்டர்கள் மட்டுமா..? செய்தித் தாள்களில் தொண்டர்கள் விளம்பரத்தோடு தொழிலக விளம்பரங்களும் அல்லவா துதி பாடுகின்றன ஜெயலலிதாவை. சரணாகதி தத்துவத்தை அழகாகத்தான் புரிந்து கொண்டிருக்கின்றனர்; ஹய்யோ பாவம்!

● கே.வி.ராமன், சென்னை - 73

? தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகிக்கும் சமதா கட்சியை பி.ஜே.பி. மணிப்பூர் மாநிலத்தில் ஆட்சியிலிருந்து வீழ்த்தியது. எந்த விதத்தில் நியாயம்?

! எண்ணிக்கை அல்லது நம்பர் நியாயம் இருக்கலாம். ஆனால், எல்லாருமே 'ஆயாராம் கயாராம்' எம்.எல்.ஏ.க்கள் என்பதால் தார்மிக நியாயம் எதிலும் இல்லை.

● ஆர். வேலம்மாள், மதுரை - 16

? முந்தைய அரசின் உழவர் சந்தை செயல்படாத சந்தை என்று தற்போதைய அரசு 'மூடுவிழா' நடத்தப்போவது சரி தானா?

! விவசாயிகளின் எதிர்ப்பைக் கண்டு தயங்கி, 'சரியாக இயங்காதவற்றை மட்டும்தான் மூடப் போகிறோம்' என்று மாற்று அறிவிப்பும் விட்டு, கூடவே சந்தைக்குச் செல்ல வழங்கி வந்த இலவச போக்குவரத்து வசதியையும் ரத்து பண்ணியாச்சு... இனி எந்த சந்தை தான் ஒழுங்காக இயங்கும்? எல்லாவற்றையுமே இழுத்து மூடலாம்!



• சூப்பர் உச்சநீதி மன்றம்

● ஜோ. பன்னீர்செல்வம், சென்னை - 84.

? காங்கிரஸ் தலைவர் சோனியா தமது இத்தாலி நாட்டுக் குடியுரிமையை இன்னும் கைவிடாததால் அவரின் இந்தியக் குடியுரிமையைப்



• அவசர அறிவுரை



• சத்திய சோதனை



• அரசியல்...

கருணாநிதிக்கு உங்கள் அட்வைஸ் என்ன?

பறிக்க வேண்டும் என்று அத்வானிக்கு ஜனதா கட்சித் தலைவர் சு. சுவாமி கடிதம் எழுதியுள்ளாரே..?

! ப்ரியங்கா, ராகுலின் இந்தியக் குடியுரிமையைப் பறிக்க முடியாதே! அவர்கள் அரசியலுக்கு வருவது அவர்களுடைய இஷ்டம் என்று சோனியா சொல்லியிருப்பதைக் கவனியுங்கள்..!

● ஓ. காளீஸ்வரிதிலீபன், வத்திராயிருப்பு

? ஊழல் தடுப்புத் துறையை முதல்வர் வைத்திருப்பது பற்றித் தங்கள் கருத்து..?

! பருத்திப் புடைவையாய்க் காய்த்தது என்றால் வசதிதானே! அராஜக தர்பார் ஆரம்பமாகி சூடுபிடித்திருக்கிறதே..!

● வீ. முத்தையா, திருநெல்வேலி டவுன்

? ஓர் அரசு கொண்டு வந்த திட்டத்தை அடுத்துவரும் அரசு செயல்படுத்தாமல் கிடப்பில் போடுவது நமது நாட்டில் தொடர்கதையாகி விட்டது... இதனால் நாட்டுக்கு ஏற்படும் இழப்பு மற்றும் நஷ்டம் பற்றி ஏன் எந்த அரசியல் கட்சியும் நினைத்துப் பார்ப்பதில்லை...?

! நாட்டுக்கு நஷ்டம் என்பதற்காகப் பழைய திட்டங்களைத் தொடர்வதால் என்ன லாபம்? புதிய திட்டங்கள், புதிய காண்ட்ராக்டுகள், புதிய மாமூல் என்று சங்கிலித் தொடர் அமைத்தால் தானே லாபம்!

● கே.கே. வேங்கடேசன், சென்னை.

? ஆட்சி கைமாறிவிட்ட நிலையில் எல்லா பத்திரிகைகளும் தங்கள் நிலையை மாற்றிக் கொண்டு விட்டன. ஆனால் கல்கி மட்டும் தன் பழைய நிலையிலேயே நீடிக்கிறதே...?

! அதுதாங்க கல்கி. அது எப்போதுமே நியாயத்தின் பக்கம்தான்.

● வி. பரமசிவம், மதுரை

? காலில் விழும் கலாசாரம் மீண்டும் தமிழகத்தில் பரவ ஆரம்பித்துவிட்டது பற்றி..?

❑ ரூ. 50 பரிசு பெறுபவர் :
கே. ஆர். தேவேந்திரன்,
பிள்ளையார் கோயில் தெரு,
கொணவட்டம், வேலூர் - 832 013.

★ ரூ. 25 பரிசு பெறுபவர் :
சச்சின் சக்திவேல்,
22டி, செட்டிக்குளத் தெரு,
மயிலாடுதுறை - 809 001.

! காலில் விழுவது பழசு; கன்னத்தில் போட்டுக் கொள்வது புதுசு; தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடுவது பிராண்ட் நியூ!

● பஞ்சவண்ணமகன், கருப்பம்புலம்

? ஒரு ரூபாய் சம்பளம் மட்டும் போதும் என இப்போது 'ஜெ' அறிவிக்காதது ஏன்...?

! ஒரு ரூபாய் சம்பளமே பல கோடிகளை உருவாக்க முடியுமானால், சில ஆயிரங்களைச் சம்பளமாக வாங்கினால் எத்தனைக் கோடிகள் உருவாகும் என்று கணக்குப் போட்டுப் பார்க்கிறாரோ என்னவோ...?

● பொன்னாபுரம் பி. சிவக்குமார் பிரபு, திருப்பூர்.

? மூப்பனார் இப்போது எப்படி இருக்கிறார்..?

! மனச்சாட்சி உள்ளவரானால் வருத்தப்பட்டுக் கொண்டிருப்பார்!



• புதுசு...

•... அவரவர்...

• ... இஷ்டம்..!

• ... புத்தம் புதுசு'

● கே.ஆர். தேவேந்திரன், வேலூர் - 13 ❑

? சட்டசபையில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஏற்காமல் கலைஞர் நழுவியது நியாயமா? இது ஒரு தற்காப்பு நடவடிக்கை என்று எண்ணிடத்தோன்றுகிறதே...?

! கருணாநிதியை நேருக்கு நேர் சந்திக்காத போதே இவ்வளவு ஆத்திரப்பட்டு அராஜக நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிக்கும் முதல்வர், அவரை தினந்தோறும் சட்டமன்றத்தில் பார்க்க நேர்ந்தால் என்னதான் நடக்காது! கலைஞர் 'தூர விலகி' நிற்பதே இப்போதைக்கு எல்லோருக்கும் நல்லது.

வளசரவாக்கம் காமகோடி நகரிலுள்ள நடிகர் நாசரின் அலுவலகம் மாய(ன்)ப் பரபரப்பில் இருக்கிறது. அடுத்த நாள் ஷூட்டிங்கிற்கான ஆயத்தம், டப்பிங், பாடல் கம்போசிங், விசிட்டர்ஸ், ஃபோன் கால்கள் என்று ஏகப் பட்ட பிஸியில்



இருந்த நாசரை சின்ன இடைவெளியில் சந்தித்தோம்.

'அயோத்திதாசர் சிந்தனைகள்' என்ற புத்தகம் பாதி விரிந்து கிடக்க, அதை மூடி வைத்து கொண்டு, 'கிடைக்கிற நேரத்துல வாசிக்கலாம்னு எடுத்தேன்' என்று சிரித்தவாறே "சொல்லுங்க" என்கிறார்.

'நீங்க தயாரிக்க இயக்குகிற இந்த மாயன் யார்?' என்றதும், 'மாயன்...' என இரண்டு முறை மனதுக்குள்ளேயே முனகிக் கொண்டு, "அவன் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் போராடுகிற ஒரு போராளி. உண்மைக் கதைகளின் சில சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு திரைக்கதை அமைக்கப் பட்டிருக்கு. இப்போதைக்கு இது போதுமே."

"பொதுவாகவே நாசர் படம் இயக்கினால் அது கலைப்படமாகத்தான் இருக்கும் என்று பேச்சு உலாவுகிறது... மாயன்...?"

முடிப்பதற்குள்ளாகவே ஆரம்பிக்கிறார்:

"என்னைப் பொறுத்தவரைக் கலைப் படம் வேறு; கமர்ஷியல் படம் வேறுங்கறதெல்லாம் இல்லை. 'டைட்டானிக்' படத்தை எடுத்துக்கோங்க. அழகான அழகியல் ரீதியாக எடுக்கப்பட்டிருக்கிற இனிமையான கலைப் படம். அது கமர்ஷியலா சக்ஸஸ் ஆகலையா? 'ஷோலே', 'தேவர் மகன்' மாதிரியான படங்கள் கூட கலைப்படங்கள்தான். அவை வெற்றி பெறலையா? ஒரு படத்தின் கதைக்குத் தேவையான அனைத்து விஷயங்களும் - கதையிலிருந்து உடை வரை - யதார்த்தமா இருந்தா அது கலைப்படம்தானே...!

"வியாபாரப் படம்னு தனிப்பிரிவு இருக்க முடியாது. வியாபாரம் என்பது என்ன? பத்து ரூபாய் பொருளைப் பதினோரு ரூபாய்க்கு விற்றால் ஒரு ரூபாய் லாபம். அதைத்தான் எல்லா படங்களும் எதிர்பார்க்கின்றன. அதை விட்டுட்டு கமர்ஷியல் படம்; கலைப்படம் என்று தரம்பிரிச்சுப் பார்க்கிறது முட்டாள்தனம். இன்னிக்குத் தமிழ் சினிமாவுல வியாபார ரீதியா நிராகரிக்கப்பட்டப் படங்கள்தான் நிறைய சக்ஸஸ் ஆகியிருக்கு. எடுத்துக்காட்டா ஒரு தலை ராகத்திலிருந்து இப்போதைய 'சேது'வரை

நிறைய சொல்லலாம்."

"சரி, இன்றைக்கு மக்களை இழுத்துப் பிடித்திருக்கிற டீ.வி. மெகா சீரியல்களைத் தவிர்த்து, அவர்களைத் தியேட்டருக்குக் கொண்டு வருவதற்கான அம்சங்கள் மாயனில் உண்டா...? என்றதும் சிறிது நேரம் கண்களை மூடி மௌனமானார்.

"சமீபத்துல என்னோட ஃபேமிலி டாக்டரைப் பார்க்கப் போயிருந்தேன். அவரிடம் சிகிச்சை எடுத்துக் கொள்ள வருகிற ஒரு பெண்மணி, குறிப்பிட்ட ஒரு மெகா தொடர் வரும் சமயத்துல சிகிச்சை வேண்டாம்; வேற டயம் சொல்லுங்கன்னு சொன்னாராம்! எந்த அளவுக்கு சீரியல்கள் பாதித்திருக்குப் பார்த்தீங்களா? இந்தப் பிரச்னை இங்கு மட்டுமில்லை. ஹாலிவுட்லயும்தான். அதனால்தான் மக்களைத் தியேட்டர் பக்கம் இழுக்க 'ஜுராஸிக் பார்க்', 'காட்ஸில்லா' மாதிரியானப் படங்களையும் புதிய புதிய சவுண்ட் சிஸ்டங்களையும் அவர்கள் கொண்டு வர ஆரம்பித்தார்கள்.

"எந்த மீடியாவும் மற்றொரு மீடியாவை அழிச்சதாக வரலாறு இல்லை. இருந்தாலும் சினிமாவைச் சினிமாவா எடுத்தா மக்கள் தியேட்டர் பக்கம் நிச்சயம் வருவாங்க. அது மாதிரியான விஷயங்கள் மாயனில் நிறைய இருக்கு."

"அப்பப்ப இலக்கியம் பக்கம் வர்றீங்க. ஏதாவது எழுதற, புத்தகம் வெளியிடுகிற யோசனை இருக்கிறதா?"- கேட்டதும் வேகமாகத் தலையை ஆட்டி மறுத்தார்.

"நான் சினிமாவில் இருக்கேன். நிறைய விஷயங்களைப் படித்து உள்வாங்க வேண்டியிருக்கிறது. என்னைப் பலப்படுத்திக் கொள்வதற்காக நான் படிக்கிறேன். அவ்வளவுதான்" என்றவரை தொலைபேசி அழைக்க, நாம் புறப்பட்டோம்.

நாசரின் மாயன்



— அப்பு

படங்கள்: ஜரிஸ்

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி – 2001



படைப்பாளிகளே, வாசக எழுத்தாளர்களே! நீங்கள் அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சிறுகதைப் போட்டி வந்தே விட்டது!

முதல் பரிசு – ரூ. 5000
இரண்டாம் பரிசு – ரூ. 3000
மூன்றாம் பரிசு – ரூ. 2000

தவிர, பிரசுரத்துக்குத் தேர்வாகும் ஒவ்வொரு கதையும் ரூ. 500 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர் எனில், வழக்கம் போல் போனஸ் உண்டு!

விதிமுறைகள் :

- சரித்திரம், சமூகம், மர்மம், நகைச்சுவை என எப்படிப்பட்ட கதையாகவும் இருக்கலாம். கதை உங்கள் சொந்தக் கற்பனையாக இருக்க வேண்டும்; அவ்வளவுதான்!
- கல்கியில் 4 பக்கங்களுக்கு மிகாமல் இருப்பது நல்லது.
- சொந்தக் கற்பனைதான் என்பதற்கு உறுதிமொழிக் கடிதம் வேண்டும். அது இல்லாத கதைகள் பரிசீலிக்கப்பட மாட்டா.
- அறிமுக எழுத்தாளர் எனில், இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லையென்றும் போட்டி முடிவு வெளியாகும் வரை எழுதுவதில்லை என்றும் உறுதி மொழி தர வேண்டும்.
- முழு வெள்ளைத் தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும்.
- தேர்வாகாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால் தலைகள் ஒட்டிய அஞ்சல் உறை இணைக்கப்பட வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- ஒருவரே எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- பரிசுக்குரிய கதைகளை நடுவர்குழு பரிசீலித்துத் தேர்ந்தெடுக்கும். சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே இறுதி.
- முடிவு வெளியாகும் வரை, எவ்வித கடிதப் போக்குவரத்தோ, தொலைபேசி விசாரிப்புகளோ கூடாது.
- 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி – 2001' என்று உறையின் மேல் தவறாமல் குறிப்பிட்டு, அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், கல்கி, 47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

- கதைகள் வந்து சேரக் கடைசித் தேதி : **ஜூன் 15.**
- போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் ஆகஸ்ட் 5 ஆண்டு மலரில் வெளியாகும்.

படைப்பாளிகள், வாசக எழுத்தாளர்கள் அனைவரும் உற்சாகத்துடன் கலந்து கொண்டு சிறப்பிக்க அழைக்கிறோம்.

— ஆசிரியர்

நடுத்தர வருவாய் உள்ள அன்பர்களுக்கும் இல்லத்தரசிகளுக்கும் ஓர் அரிய வரப்பிரசாதம்

SWETHA walker

HEALTH FITNESS MACHINE

இந்த நவீன கம்ப்யூட்டர் காலத்தில் உடற்பயிற்சி செய்வதற்கு சிறிதும் நேரம் கிடைப்பதில்லை. அலுவலகம் செல்லும் சகோதர, சகோதரிகள் தினமும் 8 மணி நேரமும் நாற்காலியில் உட்கார்ந்து வேலை செய்வதால் உடல் தசைகளுக்கு வேலை இல்லாமல் எடை கூடவோ, பருமனாகவோ வாய்ப்புகள் அதிகம். நிறைய பேருக்கு காலையில் walking போக நேரம் கிடைப்பதில்லை. அப்படியே நேரம் கிடைத்தாலும் சென்னை போன்ற பெரு நகரங்களில் எந்தவித இடையூறும் இல்லாமல் நடந்து போகக் கூட சாலைகளில் இடமில்லை. எனவே இதை நாங்கள் மனதில் கொண்டு உங்களுடைய வீட்டில், தோட்டத்தில், முக்கியமாக அடுக்கு மாடி குடியிருப்புகளில், மாடியில் எங்கு வேண்டுமானாலும் ரிலாக்ஸ்டாக எந்த தொந்தரவும் இல்லாமல் ஹாயாக நடப்பதற்கு ஒரு புதிய இயந்திரத்தைச் சாதாரண நடுத்தர மக்கள் வாங்கும் விலையில் உருவாக்கியுள்ளோம். இதில் காலை (அ) மாலை சுமார் 10 நிமிடம் பயிற்சி செய்தால் சுமார் 3 கிலோ மீட்டர் தூரம் நடந்த பலன் கிடைக்கும். தினம் தொடர்ந்து செய்து வந்தால் உடல் எடை நிச்சயம் குறையும். இதை உபயோகிப்பது மிகவும் சுலபம். பயிற்சி முடிந்த பின் இயந்திரத்தை மடித்து வீட்டில் எங்கும் வைத்துக் கொள்ளலாம். இந்த இயந்திரத்தை நாங்கள் தயாரிப்பு விலைக்கே கொடுப்பதோடு ஒரு வருடம் உத்தரவாதம் தருகிறோம்.





நடுத்தர மக்களின் வசதிக்கேற்ப இந்த இயந்திரம் ரூ. 1900 மற்றும் ரூ 2700/- ஆகிய விலைகளில் கிடைக்கும். (வரிகள் உட்பட).

சென்னை நகருக்குள் இலவச டெலிவரி.

தொடர்பு கொள்ள தொலைபேசி 4847701

(காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை)

CONTACT

ASIAN ENTERPRISES

Mfrs of: Health Fitness Machine &
Office Filing Systems

25 (Old, #16), Perumal Koil South 1st Cross Lane,
Vadapalani, Chennai - 600 026. Ph: 484 7701

மஹரிஷிகள் சொன்ன விஷயத்தை ஆழ்வார் அழகாகக் காட்டுகிறார் என்றேன். அண்ட குலத்துக்கு அதிபதி பரமாத்மா என்கிறார்.

அண்டம் என்றால் மேலே ஏழு லோகங்களும் கீழே ஏழு லோகங்களுமாகப் பதினான்கு உலகங்கள் சேர்ந்தது. அண்டம் என்றால் முட்டை-முட்டை வடிவில் இருக்கின்றன இந்த பதினான்கு லோகங்களும் சேர்ந்த அமைப்பு. அதற்கு வெளியிலே ஆவரண ஜலம் என்று இருக்கிறது.

கர்ப்பத்திலே இருக்கிறது ஒரு குழந்தை. அதைச் சுற்றி ஜலம் இருக்கிறது-திரவம். திரவத்திலே அந்த சிசு இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு எந்த அடியும் படாமல் திரவம் காக்கிறது-ஜாக்கிரதையாக. அதே மாதிரிதான், அண்டம் அனர்த்தப்படாமல் இருக்க அண்டத்துக்கு வெளியே ஜலம் இருக்கிறது. அதற்கு ஆவரண ஜலம் என்று பெயர்.

பகவான் திரிவிக்கிரமனாக அவதாரம் பண்ணிய போது இந்த அண்டத்தையெல்லாம் தாண்டி, சத்திய லோகத்தையும் தாண்டி, அந்த ஆவரண ஜலத்தைப் போய் அவன் திருவடி கிழித்தது. அதிலேயிருந்து அவன் திருவடியில் ஜலம் விழுந்தது என்றால், எவ்வளவு தூரம் அவன் திருவடியானது போயிற்று என்பதை நாம் உணர முடியும்.

இது ஓர் அண்டம்தான். இதோடு சரியாகப் போய்விடவில்லை... இந்த மாதிரி எத்தனையோ அண்ட கடாகங்கள்! -பிரும்மாண்டம் என்று பெயர். அதிலே ஒன்று அல்ல; பலப்பல இருக்கின்றன. பதினான்கு புவன காண்டம் ஓர் அண்டம் என்றால் இது மாதிரி இன்னும் பல உள்ளன.

'அண்டர் குலத்துக்கு அதிபதி ஆகி...' என்று அத்தனைக்கும் அதிபதி அவன்தான்!

சமஸ்தத்தையும் காக்க அந்த துஷ்ட பிரபத்திகளை நிரஹஸித்தவன்.

'அண்டக் குலத்தில் உள்ளீர்...!'

– அவன் திருவடியைத் தொழும்படியான அண்டக் குலத்திலே இருக்கக் கூடியவர்களே! இங்கே வாருங்கள். ஆயிரம் நாமம் சொல்லி- அந்த எம்பெருமானிடத்திலே அடிபணிந்து மறுபடியும் பிறவியில்லாத உயர்ந்த நிலையை அடையுங்கள்- அவனுக்குப் பல்லாண்டு பாடுங்கள்.

பல்லாண்டினுடைய தாத்பர்யம் என்ன..?

அதைப் பெரியவாச்சான் பிள்ளை சொல்கிறார்:

பகவானுடைய திருநாமங்களை அவனெதிரிலே சொல்லி பல்லாண்டு பாடுதல்- பல்லாண்டு பாடுதல் என்றாலே திருநாமம் சொல்வது என்றுதான் அர்த்தம். அவன் திருநாமத்தை அவன் உகக்கும்படியாக அவன் எதிரிலே நல்ல உற்சாகத்தோடு சொல்வதுதான் அவனுக்குப் பல்லாண்டு. 'நீ வாழ்க' என்று அவனை வாழ்த்துவது. அவனிடத்திலே இருக்கும்படியான அனந்தம் என்றும் குறையாதது. அதை நாம் உணரும் வகையில் அவன் எதிரிலே நின்று திருநாமம் உரைத்து ஸ்தோத்திரம் செய்ய வேண்டும். அதைத்தான் – 'ஆயிரம் திருநாமம் சொல்லி' என்றார்.

ஆயிரம் நாமம் என்பது யாரைக் குறிக்கிறது...? விச்வம், விஷ்ணு என்று

15 குறையொன்று

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

சொல்லிக் கொண்டே வந்தோமானால் நரசிம்ஹனிடத்திலேதான் எல்லாமே போய் முடியும்.

அதனால்தான் அடுத்த பாசுரத்தி லேயே பெரியாழ்வார் 'அந்தியம்போதில் அரிவுருவாகி...' என்று பாடுகிறார்:

எந்தை தந்தை தந்தை தந்தை தம்
மூத்தப்பன்
ஏழ்படிகால் தொடங்கி
வந்து வழிவழி ஆட்செய்கின்
றோம்; திரு
வோணத் திருவிழவில்



ரில்லை

அந்தியம் போதில் அரியுரு வாகி
அரியை அழித்தவனை
பந்தனை தீரப் பல்லாண்டு பல்லாயிரத்
தாண்டென்று பாடுதுமே.

'விஷ்ணோர்முகம் வீர்யாணி' என்று ஆரம்பிக்கும் ஒரு மந்திரம் இருக்கிறது. அதிலே பதினான்கு விஷ்ணு சப்தம் வரு கிறது. ஈரேழு பதினான்கு லோகத்துக்கும் அதிபதி அவன் என்பதை இது காட்டுகிறது. அது மட்டுமில்லை... பதினான்கு வித்யா

ஸ்தானங்களும் இவனிடத்திலே அடங்கி நிற்கிறது என்பதையும் காட்டுகிறது. பல உத்தமமான அம்சங்கள் விஷ்ணுவினிடத்திலே அடங்கியிருப்பதையும் காட்டுகிறது.

சர்வநியம்க்ருத்வம் முதலான அவனது குணங்களைச் சாந்தோக்ய உபநிஷத்தானது நமக்கு எடுத்துக் காட்டுகிறது. சாம வேத உபநிஷத் இது. 'சந்தோகானம்'- என்றால் ஸாம வேதம் என்று அர்த்தம். ஸாம வேதம் ஓதுபவர்கள் சந்தஸ்ஸை (ஒலி அமைப்பு) கானம் பண்ணுகிறார்கள். மற்றவர்கள் அதை மந்திரமாக 'ரிக்'காகச் சொல்கிறார்கள். கானமாகப் பாடுகிற ஸாமவேதிகளுக்கு 'சந்தோகா' என்று பெயர்.

அதனால்தான் பராசர மஹரிஷி விஷ்ணு புராணத்திலே சொல்கிறபோது 'சந்தோகா மாணவகா யுவ' என்றொரு உவமானத்தை உபயோகிக்கிறார்.

ஜடபரதருடைய சரித்திரத்திலே, மான் குட்டி ஒன்று அவர் ஆச்ரமத்தின்கிட்டே போய் புல்லையெல்லாம் மேய்ந்துவிடும். அங்கே வளர்ந்த புல் மொத்தம் மொட்டை மொட்டையாகி இருக்கும்.

அடியேனைச் சொல்லச் சொன்னால் மான்குட்டியானது அதையெல்லாம் மேய்ந்துவிட்டது. அதனால் 'புல் மொத்தமும் மொட்டை மொட்டையாக நிற்கிறது' என்பேன்.

ஆனால் பராசர மஹரிஷி அதிலேயும் ஒரு விஷயத்தை மனசிலே படும்படியாகச் சொல்கிறார்:

அந்தப் புல்லையெல்லாம் பார்த்தால் எப்படி இருக்கிறதாம்..? உபநயன காலத்திலே சாமத்தை அத்யயனம் பண்ணக்கூடிய பிரும்மசாரி எப்படி இருப்பானோ அப்படி இருக்கிறதாம்! புல்லைப் பார்த்தால் ஸாம வேத வித்யார்த்தியின் ஞாபகம் வருகிறதே பராசர பட்டருக்கு! யாரால் சொல்ல முடியும் இந்த மாதிரி..?

ஒரு விஷயத்தை, இன்னொரு நல்ல விஷயத்தைச் சொல்லித்தான் தெரிவிக்க வேண்டுமேயொழிய, அதற்கு நீசோபமானம் சொல்லக் கூடாது. ஒரு சாமான்ய விஷயத்தைக் கொண்டுபோய் அதற்கும் இதற்கும் சமன்வயம் பண்ணினோமானால் பெரிய விஷயத்தினுடைய பெருமை கெட்டுப் போய்விடும். ஆகவே, மகான்களுடைய உபமான உபமேயங்களைப் பார்த்தால் உயர்ந்ததாக இருக்கும்.

'சந்தோகா மாணவகா யுவ' என்று மனசிலே ஸ்புரிக்க வேண்டுமானால் அது எவ்வளவு உயர்ந்த தபஸ் இருந்தால் ஸ்புரிக்கும்!

சாமான்யமாக நாம் மொட்டை என்று சொல்கிறோம். உயர்ந்த ரீதியில், ஸாம வேதிகள் மொட்டை அடித்துக் கொள்ள வேண்டும் என்றொரு விஷயம் பராசர மஹரிஷியின் உபமானம் மூலமாகத்தானே தெரிகிறது! இப்படிப் பல விஷயங்களை மகான்கள் வாக்கு நமக்குக் கற்றுத் தரும்.

ஸாம வேதத்துக்குத் திரும்புவோம். அதிலே, விசேஷமான சந்தோகானம் பண்ணுகிறபோது- சாந்தோக்ய உபநிஷத்தில், பகவானின் குணமாக சத்யகாமத்வம் என்பது சொல்லப்படுகிறது.

சத்யகாமத்வம் என்றால் அவனுடைய காமம்- எண்ணம் - பழுதுபடுவதேயில்லை என்று அர்த்தம். அவன் எதை நினைக்கிறானோ அதை நடத்தியே தீருவான்.

சத்யகாமா! சத்யசங்கல்ப! என்று ஆரம்பித்து எம்பெருமானார் ராமானுஜர் சரணா

அருள்வாக்கு

நமஸ்காரம் பண்ணுபவன் நமஸ்கரிப்பவரைப் பார்த்துச் சொல்லும் வாசகமே 'அபிவாதனம்' என்பது. மொத்தத்தில் தான் யார், என்ன பெயர், எந்தப் பாரம்பர்யத்தில் வந்தவன் என்று தெரிவித்துக் கொள்வதே அபிவாதனம். 'தன்னைவிட வயஸில் பெரிய ஒருவர் வருகிறபோது ஒருத்தனுடைய பிராணன் மேலே கிளம்பி வெளியில்போகப் பார்க்கும். அப்போது அவன் எழுந்து அவரை மரியாதையாக வரவேற்று அபிவாதனம் பண்ணுவதால், கிளம்பின பிராணன் அவனிடமே மறுபடி புகுந்து நிலைப்படுகிறது' என்று மநு சொல்கிறார்.

முதலில் நமஸ்காரம். அப்புறம் எழுந்து, குனிந்து நின்றுகொண்டு இரண்டு காதையும் இரண்டு கையால் தொட்டுக் கொண்டு- வலது காதை வலது கையாலும், இடது காதை இடது கையாலும் தொட்டுக் கொண்டு- தான் இன்னார் என்று நமஸ்காரம்

கதி கத்யத்திலே சொல்கிறார். உபநிஷத் சொல்வதைத்தான் அவர் அப்படியே சொல்கிறார். பகவானுடைய எண்ணம் நாளும் பழுதுபடுவதில்லை.

அர்ஜுனனைப் பார்த்து ஒரு வார்த்தை சொன்னான் பகவான்: "அரக்கு மாளிகை கட்டி அதில் உங்களையெல்லாம் வைத்து, உங்களை அழிக்க வேண்டும் என்று துரியோதனாதிகள் நினைத்தார்கள். அவர்களுடைய சங்கல்பம் அது. ஆனால் நான் சங்கல்பிக்கவில்லையே! நீங்கள் அழிய வேண்டும் என்று நான் சங்கல்பிக்கவில்லை; என்னுடைய சங்கல்பத்தினால் உங்களை நான் காப்பாற்றி விட்டேன். ஹே அர்ஜுனா! இப்போது யுத்தம் பண்ண மாட்டேன் என்கிறாய். ஆனால் மொத்த பேரையும் அழிக்க வேண்டும் என்று நான் சங்கல்பம் பண்ணியிருக்கிறேன். நீ பண்ணாது போனால், யுத்தம் பண்ண மாட்டேன் என்று சொன்னால் என் சங்கல்பம் நிற்குமா?" என்று கேட்டான் பகவான்!

'என்னுடைய சங்கல்பம்தான் முக்கியம்' என்று திருடமாக, நிச்சயமாகச் சொல்லியிருக்கிறான் பரமாத்மா. இதற்கு மேல் நமக்குப் பிரமாணம் வேறு என்ன வேண்டும்?

எந்த காரியத்தை நாம் எடுத்துக் கொண்டாலும் பகவதோ பலேனா, பகவதோ வீர்யேன...

பகவத் வீர்யத்தினால்தான் அது நடக்கிறது. அவனுடைய ப்ரீதிக்காக இந்த ஆத்மாவைக் கொண்டு இந்த காரியத்தை அவனே நடத்திக் கொள்ளுவான்.

கர்மாவும் அவனே; அதை நடத்துபவனும் அவனே; அதனால் ஏற்படக்கூடிய பயனும் அவனுக்கே என்று பலத் தியாகம் பரத் தியாகம் எல்லாவற்றையும் அவன் திருவடியிலே நாம் பண்ண வேண்டும். பண்ணினால் பகவான் ரொம்ப சந்தோஷப்படுவான்.

(வளரும்)

பண்ணப்படுகிறவருக்கு சாஸ்த்ரோக்தமாக அறிமுகம் செய்து கொள்வதான அபிவாதனவாசகத்தைச் சொல்லணும். காதை ஏன் தொட்டுக் கொள்ள வேண்டுமென்றால் அதுதான் பஞ்சபூதங்களில் உசந்த ஆகாசத்துக்குரியதான சப்தத்தை க்ரஹிப்பது.




அபிவாதனம் சொன்ன அப்புறம் இரண்டு கையையும் காதிலிருந்து எடுத்து, தன்னுடைய முழங்காலிலிருந்து பாதக் கட்டைவிரல் முடியத் தொட்டுக் கொள்ள வேண்டும்.

குனிந்து நிற்பது பணிவைக் காட்டுவது. விழுந்து நமஸ்கரித்தவன் எழுந்து நின்ற பின்னும் விறைப்பாக நிற்காமல் உடம்பை வளைத்துக் குனிவது அதே விநயத்தை 'அன்டர்லைன்' பண்ணி இன்னொருவிதத்தில் காட்டுகிறதுதான். காதிலிருந்து கையை எடுத்து கால் முடியத் தொடுவது தன்னை அப்படியே முழுக்கவும் நமஸ்காரம் பண்ணப்படுகிறவருக்கு அர்ப்பணம் பண்ணிக் கொள்வதற்கு அடையாளம். காது சிரஸிலிருப்பதால் காதிலிருந்து பாதம் தொடுவதே தலையிலிருந்து கால் வரையில் அர்ப்பித்துக் கொள்கிற மாதிரிதான். ஏன் தலையைத் தொடாமல் காதைத் தொடணுமென்றால், காதின் முக்யத்வம் முன்னமேயே சொன்னேனே! அதுதான் ஆகாச பூதத்துக்கு உரித்தான சப்தத்தை க்ரஹிப்பது, என்றேனே? உபதேசம் கேட்டுக் கொள்வதும் காதுதான். நமஸ்கரிக்கப்படுபவரின் ஆசீர்வாதத்தைக் கேட்டுக் கொள்ளப் போவதும் அதுதானே?

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.

நலம், கவனி, வெற்றிகொள்!



"காலையில் ஜாகிங் போகிறவர்களைச் சுட்டிக்காட்டி என் நண்பர் ஒருவர் கேட்டார்– 'இவர்கள் எல்லாம் எங்கே போகிறார்கள் தெரியுமா?' ஒன்றும் புரியாமல் நான் விழிக்க, 'மரணத்தை நோக்கி!' என்றார். திடுக்கிட்டேன். 'ஐம்பது வயது வரை சும்மா இருந்துவிட்டு, திடீரென்று உடம்பை இப்படிச் சிரமப்படுத்தினால், சீக்கிரமே போய்ச் சேர வேண்டியதுதான்!' என்றாரே பார்க்கலாம்"– இதைப் போன்ற திடுக்கிடும் தகவல்கள்– அனைத்தும் உடல்நலத்தைப் பற்றிய தகவல்கள், உடம்பைப் பேணிக் காக்கும் சூட்சுமங்கள், 144 தடை உத்தரவு போட வேண்டிய விஷயங்கள், லேட்டஸ்ட் மருத்துவ ரிப்போர்ட்டுகள் என்று அமளிதுமளிப்பட்டது, கல்கி–ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் இணைந்து வழங்கிய 'நலம்வாழ எந்நாளும்...' என்ற ஐந்தாவது இளைஞர் திருவிழா.

சென்னை வாணி மஹால் அரங்கில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், அப்போலோ மருத்துவமனையின் டாக்டர். ஸ்ரீதர் தலைமை உரையாற்ற, தமிழக காவல் துறை உயர் அதிகாரி ரவி ஆறுமுகம் சிறப்புரையாற்ற, சின்னத்திரையின் சமையல் நிகழ்ச்சிப் புகழ் மல்லிகா பத்ரிநாத் ஸ்பெஷல் தாளிப்பு நடத்தினார்.

நிகழ்ச்சியின் தொகுப்பு இதோ....



• ரவி ஆறுமுகம்

• தீபாவளி சமயத்தில், முதலில் தீபாவளி மருந்து சாப்பிட்டு விட்டு அதன்பின் இனிப்பு சாப்பிடுவது போல, 'அருமருந்து' என்ற முத்துத்தாண்டவர் பாடலை, சகோதரிகள் அனுராதா, சுப்ரஜா இறைவணக்கமாகப் பாட, தொடர்ந்து வரவேற்புரையாற்ற வந்தார் மைசூர்பா விற்பன்னர் ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் முரளி!

அனுராதா, சுப்ரஜா





• மல்லிகா

• "பொதுவாக நாம் படிப்புக்கும், வியாபாரத்துக்கும் கொடுக்கிற முக்கியத்துவத்தை உடல்நலம் காப்பதற்குத் தருவதில்லை. உடல் நலம் பேணுகிறவர்கள் அறிவு நலன் பற்றிக் கவலைப் படுவதில்லை; அறிவு நலம் உடையவர்கள், உடல்நலம் பற்றி அக்கறை கொள்வதில்லை. ஆனால் அறிவும், உடல்நலமும் ஒன்றோடொன்று பின்னிப்



• ஸ்ரீதர்

ஃபிக்சட் டெபாசிட் வேண்டாமே!

பிணைந்தவை; பாத்திரம் சுத்தமாக இருந்தால்தான், பண்டம் நன்றாக இருக்கும். பண்டம் அற்புதமாக இருந்து, பாத்திரம் அழுக்காக இருந்தால், பண்டம் கெட்டுப் போய் விடும். பிறவி எடுத்திருப்பது வாழ்வதற்காக; ஆரோக்கிய மான சிந்தனைகளுக்காக; என்பதைப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம்' என்று தக்து வரவேற்புரையில் குறிப்பிட்டார் முரளி.

- "ஆண்டவன் பாட்டுக்கு, மனிதனுக்கு ஒரு நாக்கைப் படைத்துவிட்டான்; அதிலே சுவை அரும்புகளையும் படைத்துவிட்டான். இது போதாது என்று நப்பாசை பிடித்த மனத்தையும் கொடுத்து விட்டான். அதனால் என்ன ஆகிறது? பள்ளிக்கூட பௌதிக ஆசிரியர் சொல்லிக் கொடுத்தது ஞாபகமிருக்குமே! மைசூர்பாவைப் பார்த்தவுடன், மனம் ஆலாய்ப் பறக்கிறது. திட உருவில் உள்ள மைசூர்பாவை எடுத்து வாயில் போட்டால் அது அப்படியே கரைந்து, திரவ மாகிவிடுகிறது. வீட்டில் இருக்கிறவர்கள் பற்றிய நினைப்பே இல்லாமல், கால் கிலோ மைசூர் பாவை நாமே தின்று விட்டு வீட்டுக்குப் போய் இரை தின்ற பாம்புபோல படுத்துக்கிடக்கிற போது, அந்த திரவநிலை, வாயுவாக மாறி, வயிற்றை சங்கடப்படுத்து கிறது. இதற்கு யார் கார ணம்? நாமேதான்! கையைக் காலை அசைத்து, உடற் பயிற்சிச் செய்யாமல் இருந்தால், தவணைமுறையில் தொல்லைகள் வந்து கொண்டே இருக்கும்" என்று 'இனிப்பாக' ஆரம்பித்த



• முரளி



டாக்டர் ஸ்ரீதர் மேலும் தொடர்ந்தார் அதே விறுவிறுப்புடன்.

● திருக்குறளில் மருந்து என்று ஒரு அதிகாரம் இருக்கிறது. அதில் மருந்தைப் பற்றி, மருந்துக்கு ஒரே ஒரு குறள்தான் இருக்கிறது. ஏழு குறள் சாப்பாட்டைப் பற்றியது. இரண்டு, டாக்டர்கள் பற்றியது. இதிலிருந்தே தெரிகிறது நாம் நம் உடல் நலமாக இருக்க வேண்டு மானால், மருந்துக்கு மிகக் குறைந்த முக்கியத் துவம் கொடுத்தாலே போதும். அதிகபட்ச முக்கியத்துவம் தர வேண்டியது சாப்பாட்டுக் குத்தான்.

● ஒருவருக்கு எது ஒத்துக் கொள்ளு கிறதோ அதைச் சாப்பிட வேண்டும்; ஒத்துக் கொள்ளாதவற்றைத் தவிர்த்துவிட வேண்டும். அப்படிச் சாப்பிட்டால் மருந்துக்கு அவசியமே இல்லை என்கிறார் திருவள்ளுவர். அப்படி எல் லோரும் இருந்துவிட்டால் என்னைப் போன்ற டாக்டர்கள் பிழைப்பில் மண் என்பது வேறு விஷயம்!

● இவங்க (மல்லிகா பத்ரிநாத்) வேறு, அவ்வப்போது டி.வி.யில் வந்து ரவையை அப்படியே கிளறி, ரெண்டு டேபிள் ஸ்பூன் நெய்யை விட்டு, அரை ஆழாக்குச் சர்க்கரை, பிரௌனாக வறுத்த முந்திரிப்பருப்பு, சூடாக இறக்கி, முடிந்தால் பிஸ்தாவை நறுக்கி அதன் மேல் தூவி...ன்னு, புதுப்புது ஐட்டங்கள் சொல்லிக் கொடுக்கிறாங்க. நாமும் சப்பு கொட்டிக் கொண்டு சாப்பிட்டு விடுகிறோம். அப்புறம் அவஸ்தைப்படுவது யார்? நாம் தானே?

● சாப்பிட வேண்டுமே என்று சாப் பிடாதே! ருசிக்காக சாப்பிடாதே! பசிக்காக சாப்பிடு; உயிர் வாழச் சாப்பிடு! சாப்பிடு வதற்கென்றே உயிர் வாழாதே என்ற வள்ளு வரின் அட்வைஸை யாரும் கேட்கிறதில்லை! அதனால்தான் அத்தனை ஆஸ்பத்திரிகளிலும் கியூவில் பேஷண்ட்கள்!

● சாப்பாடு, கட்டுப்பாடு இல்லாமல் உள்ளே போகிறபோது, கொழுப்புச்சத்து சேரு கிறது; இதனால் ரத்தக் குழாயில் அடைப்பு; ஹைப்பர் டென்ஷன் என்று ஒரு பக்கம். இன் னொரு பக்கம் உடல் எடை கூடிக் கொண்டே போக, இதயம், நுரையீரல் என்று எல்லாம் அதிகம் கஷ்டப்படுகின்றன. உடலின் எடை அழுத்தத்தினால், மூட்டுகளில் வலி. எடை அதிகமானவர்களுக்கு, எந்த சர்ஜரி என்றா லும், ரொம்ப ரிஸ்க். இதெல்லாம் தேவையா?

● அப்படியென்றால், எதைத்தான் சாப் பிடுவது? இயற்கையோடு ஒன்றிய உணவு. எண் ணெயில் பொறித்து எடுத்தவை, சீஸ் போன்ற வைகளைத் தவிர்த்து விடுங்கள். அதிகமான நார்ச்சத்து கொண்ட உணவு வகைகளைச் சாப்பிடுங்கள். பச்சைக் காய்கறிகளை, நன்கு கழுவி, சுத்தம் செய்து சாப்பிடுங்கள்.

● தினமும் காலை உணவில் பழம் சாப் பிடுங்கள். குறைந்தபட்சம் வாழைப்பழம். அதில் பலவித சத்துக்கள் உள்ளன. முன்பெல் லாம், டென்னிஸ் வீரர்கள் ஒரு செட் ஆட்டம் முடிந்ததும் உரித்து வைக்கப்பட்ட வாழைப் பழத்திலிருந்து ஒரு துண்டு கடித்துச் சாப்பிடு வார்கள்.

ஆனால் சர்க்கரை வியாதி உள்ள வர்கள் வாழைப்பழம் சாப்பிட வேண்டாம். காலையில் இல்லாவிட் டால் இரவிலாவது ஒரு வாழைப் பழம் சாப்பிடலாம். மலச்சிக்கலுக்கு வாழைப்பழம் ஒரு நல்ல தீர்வு. இரவில் நடந்து போய் கடையில் வாழைப்பழம் வாங்கிச் சாப்பிட் டால் ரொம்பவே நல்லது.

● நம்முடைய சேமிப்புக் கணக்கில், எப்போதும் கொஞ்சம்



''என்ன ஐயா சௌக்யமா இருக்கீங்களா?''

''நல்ல சௌக்யம்... ஆமா... நீங்க யாருன்னு தெரியலையே!''

''காலைல முதல்பந்தியில் உங்களுக்கு நாலு தடவையில பன்னிரண்டு இட்லி வச்சவனை அதுக்குள்ள மறந்திட்டீங்களே!''

– புளியறை கணேசன்

பணம்தான் இருக்க வேண்டும் என்றால் நாம் என்ன பண்ண வேண்டும்? ஒன்று குறைச்சலாகப் பணம் போட வேண்டும்; இல்லையெனில் அதிகமாக செலவழிக்க வேண்டும். நம் உடம்பும் சேவிங்ஸ் பேங்க் கணக்குபோல இருக்க வேண்டுமென்றால், ஒன்று, குறைவாக சாப்பிடவேண்டும்; இல்லை, நிறைய உடற்பயிற்சி செய்து, கலோரிகளைச் செலவழிக்க வேண்டும். ஆனால், இன்று பலர், ஃபிக்சட் டெபாசிட்போல, எடையை அதிகரித்துக் கொண்டே போகிறார்களேயொழிய, எக்சர்சைஸ் செய்து, செலவழிப்பது இல்லை.

- ஒரு மனிதனின் உடம்பு நாள் முழுக்க, செய்ய வேண்டிய காரியங்களை, தங்கு தடையின்றி ஒழுங்காகச் செய்து கொண்டிருந்தால், அதுவே ஆரோக்கியம்.

- முன்பு, வீட்டு வேலைகள் அனைத்தும், நாமே செய்து கொண்டிருந்தோம். அதுவே நல்ல உடற்பயிற்சியாக இருந்தது. ஆனால் இன்று வீட்டு வேலை எல்லாவற்றுக்கும் மிஷின்களைப் பயன்படுத்துகிறோம். அதனால், உடற் பயிற்சிக்கும் மிஷின்களைப் பயன்படுத்துகிறோம். பக்கத்தில் இருக்கும் இடத்துக்குக் கூட நடந்து போகிற பழக்கம் இல்லாமல் போய்விட்டது. ஆபீசில், இரண்டாவது மாடிக்குப் போகக் கூட லிஃப்ட்! கீழே இறங்கவும் லிஃப்ட்!

- லேட்டஸ்ட் மருத்துவ ரிப்போர்ட்களின்படி, நடப்பதுதான் மிகச் சிறந்த உடற்பயிற்சி. அடுத்தபடியாய் யோகா. முறைப்படி, ஆசிரியர் மூலமே யோகா கற்க வேண்டும். புத்தகம் படித்தும், டி.வி. பார்த்தும் யோகா பண்ணினால் இடுப்பு வலிதான் வரும்.

- டி.வி. நிகழ்ச்சிகளின் காட்சிகளின் ஒளிக்கு ஏற்ப நம் கண்களில் உள்ள 'பாப்பா' சுருங்கி விரிகிறது. தொடர்ந்து டி.வி. பார்த்தால், பல தடவைகள் இப்படிச் சுருங்கி, விரிந்து, கண்கள் சோர்வடைந்து விடும். கிட்டே இருந்து டி.வி. பார்க்கிறபோது கண்கள் இமைக்க மறந்து போகிறோம். இதனால் கண்கள் உலர்ந்து போய், தலைவலி, கண் எரிச்சல் வருகிறது. அப்படியானால் எப்படி டி.வி. பார்க்க வேண்டும். நாம் டி.வி. பார்க்கிற அறையில், ஜன்னல், நம் முதுகு பக்கமாக இருக்க வேண்டும். டி.வியில் கான்ட்டிராஸ்டைக் குறைவாக வைக்க வேண்டும். குறைந்த பட்சம் ஆறு அடி தள்ளி அமர்ந்து டி.வி. பார்க்க வேண்டும்.

- 'இதுதான் சிண்ட்ரோம்' என்று ஒரு புது வியாதி இப்போது பரவியுள்ளது. மருத்துவ புத்தகங்கள், பத்திரிகைகள், இன்டர்நெட் மூலமாக, பலவித நோய்கள் பற்றியும் தெரிந்து

அருள்மிகு ஸ்ரீ அருணாசலேஸ்வரர் துணை

ஸ்ரீ குருப்பெயர்ச்சி மஹாயாகம்

இடம்: ஸ்ரீதண்ட பாணி ஆஸ்ரமம்,
மலை ஏறும் வழி, முலைப்பால் தீர்த்தம்,
திருவண்ணாமலை.

அன்பார்ந்த ஆன்மீக அன்பர்களே! வணக்கம்!!

அனைத்து வளம் தரும் திரு அண்ணாமலையில் வைகாசி 30ம் நாள் (13.6.2001) புதன்கிழமை குருப்பெயர்ச்சி மஹாயாகம் நடைபெறுகிறது. ஸ்ரீ குருபகவான் மாலை 6.06 மணிக்கு ரிஷப ராசியிலிருந்து மிதுன ராசிக்கு சஞ்சாரம் செய்ய தொடங்குகிறார். திருமணம், கல்வி, தொழில், வேலைவாய்ப்பு, புத்திரம், ஆரோக்கியம், வழக்கு, குடும்பம், பதவி ஆகியவற்றில் தடைகளையும் கிரக தோஷத்தால் துன்பம் அனுபவிப்பவர்களின் குறைநீக்கி நிம்மதி பெற யாகத்தில் அர்ச்சனையும், யந்திரத்தை சக்தியூட்டியும் வழங்கப்படும். அர்ச்சனை செய்யும் அனைவருக்கும் ஸ்ரீ சுதர்சன யந்திரம் இலவசமாக பிரசாதத்துடன் வழங்கப்படும். அர்ச்சனை கட்டணம் ரூ. 101/- ஸ்ரீ குருயந்திரம் ரூ. 301/- ஸ்ரீமஹா ம்ருத்யுஞ்சய யந்திரம் ரூ. 301/- ஸ்ரீ குபேர தனாகர்ஷன யந்திரம் ரூ. 301/- தெய்வீக ரசமணி ரூ. 501/- அன்னதானம் செய்வோர் ரூ. 1000/- (விருப்பம் தொகையும்) அர்ச்சனை, அன்னதானம் செய்வோர், யந்திரம் தேவைப்படுவோர், தங்களது பெயர், நட்சத்திரம் ராசி மற்றும் முகவரியினை நேரிலோ (அ) தபாலிலோ பதிவு செய்து கொள்ளவும்.

தபாலில் பதிவு செய்வோர் "SRI DHANDAPANI ASHRAMA VALAI SIDDAR TRUST, TIRUVANNAMALAI என்கிற பெயரில் DD/ MO/ CHEQUE எடுக்கவும்.

கடிதங்கள் நிர்வாக அலுவலக முகவரிக்கு அனுப்பவும்:

பி.எல். இலட்சுமிநாராயணன்,
ஸ்ரீதண்டபாணி ஆஸ்ரம வாலைசித்தர் அறக்கட்டளை (PRO)
எண். 30, வீரகுட்டைத் தெரு,
திருவண்ணாமலை– 606 603.
போன்: 240 85, 360 85.
STD CODE: 04175
email: siddartvm@vsnl.net

குறிப்பு: குறுகிய காலமே உள்ள நிலையில் தொலைபேசியில் உங்கள் பெயர், ராசியை பதிவு செய்யலாம்.

யாகப் பிரசாதங்கள், யந்திரங்கள் தபாலில் அனுப்பிவைக்கப்படும்.

கொண்டு, அதில் குறிப்பிட்டுள்ள அறிகுறிகளில் ஒன்றிரண்டு இருந்தால், உடனே எனக்கு இந்த வியாதி என்று முடிவு செய்து விடுவது. டாக்டரிடம் போனதும், தனக்கு எல்லாம் தெரியும் என்பதாகப் பேசுவது. இந்த வியாதி இப்போது அதிகமாகவே காணப்படுகிறது.

● இரவில் நெடுநேரம் கண்விழித்து டீ.வி. பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, லேட்டாக தூங்கப் போய், காலையில் லேட்டாக எழுந்து அதன்பின் அவசரம் அவசரமாகக் குழந்தைகளை எழுப்பி, பல் தேய்க்க வைத்து, பால், குளியல் இன்னபிறவற்றை முடித்து ஸ்கூலுக்கு ரெடிபண்ணி ஸ்கூட்டரில் அள்ளிப்போட்டுக் கொண்டு புறப்பட்டால் வழியில் ஊர்வலம்; டிராபிக் ஜாம். டென்ஷன்! இதனால் தப்பாமல் வருவது ஹைப்பர் டென்ஷன்! படபடப்பு, பதைபதைப்பு. இதுவே வாழ்க்கையாகிப் போய்விட்ட அலங்கோலத்தைப் பார்க்கிறோம்!



''அரசே நாட்டில் லஞ்சம் தலைவிரித்து ஆடுகிறது.''
''ரப்பர் பேண்டு வாங்கித் தந்து தலையை முடியச் சொல்லுங்க..''
— தஞ்சை தாமு

● எனக்கு மருந்து, மாத்திரைகள் பற்றித் தெரியும் என்றோ, டாக்டரிடம் போனால் செலவு என்றோ, நீங்களே உங்களுக்கு டாக்டராகி விடாதீர்கள். ஏதோ தலைவலி, ஜலதோஷம் என்றால் ஓ.கே. மற்றபடி, ஆன்டிபயாடிக் மாத்திரைகள் போட்டுக் கொள்ளுவது பற்றி நீங்களே முடிவு பண்ணாதீர்கள். நாளடைவில், அதனால் பெரும் சிக்கல்கள் ஏற்பட்டுவிடும் அபாயமும் உண்டு.

● இன்று எந்த பிரச்னையானாலும் நேரடியாக ஸ்பெஷலிஸ்ட் டாக்டர்களிடம் போய்விடுகிற பழக்கம் அதிகரித்து வருகிறது. தயவுசெய்து, உடம்பு சரியில்லை என்றால் முதலில் பொது மருத்துவரிடம் போங்கள். அவர் உங்களைப் பரிசோதித்து, ஸ்பெஷலிஸ்டிடம் அனுப்பி வைக்கட்டும். பழைய காலம் போல குடும்ப மருத்துவர் என்று ஒருவரை வைத்துக் கொள்ளுங்கள். டாக்டரிடம் ஒரு நோயாளியை அழைத்துக் கொண்டு போகிற போது, டாக்டர் கேட்கும் கேள்விகளுக்கு, நோயாளியையே பதில் சொல்ல விடுங்கள். என்ன பிரச்னை என்பதை அவருக்குப் பதிலாக நீங்கள் பேசாதீர்கள். நோய், மருந்து பற்றி உங்களுக்கு என்ன சந்தேகம் என்றாலும் தயங்காமல் டாக்டரிடம் கேட்டு, தெளிவு படுத்திக் கொள்ளுங்கள். நீங்களாகவே இது இப்படித்தான் இருக்கும் என்று தீர்மானித்துக் கொண்டு விடாதீர்கள்.

● குடித்து விட்டு வண்டியோட்டுவது, ஹெல்மெட் இல்லாமல் இரண்டு சக்கர வாகனம் ஓட்டுவது இரண்டும் கூடவே கூடாது. இதுகுறித்து 'எனக்கு ஒண்ணும் ஆகாது' என்ற எண்ணம் பலரிடம் மேலோங்கியுள்ளது. ஹெல்மெட் தலையை – உயிரைக் காக்கும் என்பது உலகளாவிய நிரூபணம் உள்ள ஒரு விஷயம். இன்று ஹார்ட் அட்டாக்கில் இறப்பவர்களின் எண்ணிக்கையை விட, சாலை விபத்துக்களில் சாகிறவர்கள் அதிகம் என்பது வேதனை தரும் உண்மை. வீட்டுக்கு வெளியில் இப்படி என்றால், வீட்டுக்குள்ளே சமையலறையில் ஏற்படும் விபத்துக்களும் ஏராளம். தாய்மார்களே! காட்டன் உடைகளையே அணிந்து, சமையல் செய்யுங்கள்! சிந்தெடிக் வேண்டாம். தீ விபத்து ஏற்பட்டால், பெட்ஷீட்டில் சுற்றி உருட்ட வேண்டாம். தண்ணீர் ஊற்றித் தீயை அணையுங்கள்.

● நாற்பது வயதாகி விட்டால், முழுமையாக ஒரு மெடிகல் செக்-அப் செய்து கொள்ளுங்கள்.

● உங்களுடைய பிரார்த்தனை இப்படி இருக்கட்டும். ஆண்டவனே! நல்ல விஷயங்களைக் கேட்க நல்ல காதைக் கொடு; நல்ல விஷயங்களைப் பார்க்க நல்ல கண்களைக் கொடு, நல்ல காரியங்களைச் செய்ய திடமான கை, கால்களைக் கொடு!

கண், காது, கை, கால்கள் நன்றாக, திடமாக இருந்தால், நீங்கள் ஆரோக்கியமாக இருக்கிறீர்கள் என்று அர்த்தம்!

அவையினரை, மேல் நோக்கி அழைத்துச் சென்ற ரவி ஆறுமுகத்தின் சிறப்புரை, மல்லிகா பத்ரிநாத்தின் தானிப்பு உரை, அதைத் தொடர்ந்த கேள்வி-பதில் இவற்றின் தொகுப்பு அடுத்த வாரம்.

தொகுப்பு: **எஸ். சந்திரமௌலி**
படங்கள்: **யோகா**


மனத்திரையில் கற்பனை!

ஒரு பொருளையோ தகவலையோ பசுமையாக நினைவில் கொள்ள வான் நியூமேன் தமது வலது பக்க மூளையையும் உபயோகித்தார் என்று சொன்னோம் அல்லவா? இப்போது அதை எப்படிச் சாத்தியமாக்குவது என்பதைப் பார்ப்போம்.

ஒரு பொருளைப் பற்றி நினைக்கும் பொழுது அந்தப் பொருளை அப்படியே நமது கற்பனைத்திரையில் கொண்டு வந்து, நமது மனக்கண் முன் அதைப் 'பார்க்க' வேண்டும்.


உதாரணமாக, நம்முடைய வீட்டில், அலுவலகத்திலிருந்து வீடு திரும்பும் பொழுது ஆப்பிள் பழம் ஒன்றை வாங்கி வருமாறு சொல்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அதை வெறுமே காதால் வாங்கிக் கொண்டு அல்லது ஒரு காகிதத்தில் எழுதிக் கொண்டு நமது கண் பார்வைக்குப் படும் இடத்தில் வைத்தோ செயல்படலாம். இது நமது இடது பக்க மூளையை மட்டும் பயன்படுத்துவதாகும்.

அதே சமயத்தில் ஆப்பிள் பழம் என்று சொல்லும்போதே அதை நன்றாக மனத்திரையில் பெரியதாகக் கற்பனை செய்து கொள்ள வேண்டும். ஆப்பிளின் சாதாரண சைஸ்(பருமன்) நமக்குத் தெரியும். ஆனால் ஒரு ஆப்பிள் இருநூறு அடி உயரமாக இராட்சஸ ஆப்பிளாக இருப்பதைப் போல நமது மனக்கண் முன் பார்க்க வேண்டும். அடுத்து, ஆப்பிள் நிறத்தை மனத்தில் கொண்டுவர வேண்டும். அது மட்டுமல்லாமல், ஆப்பிள் பழத்தைச் சாப்பிட்டால் ஏற்படும் சுவையைக் கற்பனை செய்து பார்க்க வேண்டும். அதோடு, வீடு திரும்பும் பொழுது ஒரு பெரிய ஆப்பிள் தோட்டம் வழியாக வருவது போல கற்பனை செய்து பார்க்க வேண்டும். ஒரு சில நிமிடங்களைச் செலவழித்து



மாண்புமிகு மெமரி – 5

திருவள்ளூர் என்.சி. ஸ்ரீதரன்



''அம்மா... நான் ஒரு பெண்ணை லவ் பண்றேன்... அவளையே எனக்கு கல்யாணம் செய்து வைங்க அம்மா!...''

''முடியவே முடியாது... பக்கத்துத் தெருவில் ஒரு பெண்ணுடன் ஒரு வருஷமா சண்டை போட்டு, என் மருமகளா தயார் செய்து வெச்சிருக்கேன்... அவதான் உனக்கு மனைவி...''

- வீமராஜன்

இப்படி எல்லாம் கற்பனை செய்து பார்த்து விட்டால், ஆப்பிள் வாங்கிவரவேண்டும் என்ற விஷயம் மறக்கவே மறக்காது.

ஆக, ஒரு பொருளைப் பற்றி கற்பனையில் நினைத்துப் பார்க்க வேண்டுமென்றால் கீழ்க்கண்ட அம்சங்களை நினையுங்கள்.

எத்தனை வண்ணங்களை நமது எண்ணங்களில் கொண்டுவர முடியுமோ, அத்தனைக்கு அந்தப் பொருள் நமது நினைவில் பசுமையாக இடம் பெற வாய்ப்புண்டு. ஒரு பொருளை வண்ணங்களால் பார்ப்பதால் மட்டும் நமது நினைவு ஐம்பது சதவிகிதம் அதிகரிப்பதாக மனோதத்துவ நிபுணர்கள் சொல்கிறார்கள்.

அடுத்து, ஒரு பொருளை, அதன் சாதாரண அளவிலிருந்து பல மடங்கு மிகையாகவோ அல்லது பல மடங்கு சிறிதாகவோ கற்பனை செய்து பார்க்க வேண்டும். அவ்வாறு செய்யும் பொழுது முட்டாள்தனமாகத் தோன்றினால் கூட பரவாயில்லை. இன்னும் சொல்லப் போனால், முட்டாள்தனமாகக் கற்பனை செய்து பார்க்கும் பொழுதுதான் அந்தப் பொருள் நமது நினைவில் நிற்கிறது.

அசையாமல் நிற்கும் ஒரு பொருளைவிட அசையும் பொருள் நமது நினைவில் நன்றாக நிற்கும். உதாரணமாக, ஒரு ரயிலை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டுமென்றால், ஒரே இடத்தில் நிற்கும் ரயிலைவிட ஒரு ரயில் வேகமாக ஓடுவதைப் போல கற்பனை செய்ய வேண்டும்.

ஒரு பொருளையோ, தகவலையோ மனத்தில் கொள்ள, அதை நமது கண், மூக்கு செவி, வாய், தோல் என்ற ஐம்புலன்களால் எந்த அளவிற்கு உணர்கிறோமோ, அந்த அளவிற்கு அது நம்முடைய நினைவில் நிற்கும்.

ஒரு உதாரணம்.

இந்த உலகம், நிலம், நீர், நெருப்பு, ஆகாயம், காற்று என்ற பஞ்சபூதங்களால் ஆனது என்று குழந்தைக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று வைத்துக் கொள்ளுங் கள்.

ஒரு வேடன் ஒரு ஆற்றில் இடுப் பளவு தண்ணீரில் நின்று கொண்டு ஆகாயத்தில் பறந்து செல்லும் ஒரு பறவையை நோக்கித் துப் பாக்கியால் சுடும் ஒரு காட்சியை அதன் மனத்தில் கொண்டு வரும்படிச் சொல்லுங்கள்.

அவனுடைய பாதத்திற்கு அடியில் இருக்கும் கூழாங்கற்கள் அவனுடைய பாதத்தை நெருடுகின்றன. பூமியின் ஸ்திரத்தை அவனால் உணர முடிகின்றது...

இடுப்புவரை சூழ்ந்திருக்கும் நீர் அவனுடைய தேகத்திற்குக் குளிர்ச்சியைக் கொடுக்கிறது. இது அவனுக்கு இதமாக இருக்கிறது...

அவனுடைய கண்கள் ஆகாயத்தை நோக்கி அங்கு இருக்கும் நீல வானில் அழகாக வட்டமிடும் பறவையைக் குறி வைக்கின்றன.

வானத்தில் இருக்கும் பறவை அங்கு அடிக்கும் காற்றில் அழகாகப் பறந்து கொண்டிருப்பதை அவனால் பார்க்க முடிகிறது.

பறவையைக் குறிவைத்து அவன், துப்பாக்கியின் விசையை இழுக்க, உள்ளே இருக்கும் குண்டு, துப்பாக்கியின் குழல் வழியாக வெளியே பாய, இந்த நெருப்பின் பலனாக துப்பாக்கியின் குழல் சூடாகிறது.

இந்த கற்பனை நிகழ்ச்சியை மனத்திரையில் கொண்டு வந்து, அதன் மூலம் பஞ்ச பூதங்களின் பெயர்களை அந்தக் குழந்தையின் மனத்தில் பசுமையாகப் பதிய வைப்பது மிகவும் சுலபம்.

முயன்றுதான் பாருங்களேன், இந்த அணுகுமுறை எவ்வளவு எளிமையாகவும் சுவாரசியமாகவும் இருக்கிறது என்று.

(தொடரும்)

வெள்ளி விழா ஆண்டு

கவிதா பப்ளிகேஷன் வழங்கும்



ஜெயகாந்தன் சிறுகதைகள்

முழுத்தொகுப்பு – இரண்டு தொகுதிகள்

முன் வெளியீட்டுத் திட்டம்

ஜெயகாந்தன்– இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் படைப்புலகின் பிரதான சிருஷ்டி கர்த்தாக்களில் ஒருவர். தமிழ்ச் சிறுகதைகள் என்றவுடன் நினைவுக்கு வரும் இரு இலக்கிய பிரம்மாக்களில் ஒருவர். சுயமானதும், மரபார்ந்ததும், மரபில் இருந்து கிளைத்ததுமான நவீன சிந்தனைகளின் சொந்தக்காரர். வியக்கத்தக்க வீச்சுள்ள அவர்தம் அனுபவக் குவியலிலிருந்து முகிழ்த்தெழும் பாத்திரப் பிரிகை. ரத்தமும் சதையுமாக, மனிதக் கவிச்சியோடு, எழிலார்ந்த கலை அழகுடன் களனை அலங்கரிக்கும் பாத்திர நர்த்தனம். இவற்றினூடே பொற்சரடு போல் வியாபித்திருக்கும் ஆழ்ந்த நம்பிக்கை, விழுமிய மனிதநேயம். 'எழுத்து எனது ஜீவன்; ஜீவனமல்ல' எனப் பிரகடனம் செய்யவல்ல ஆளுமை. அறிவு ஜீவிதம், ஆன்மத் தூய்மை.

ஜே.கே.யின் சிறுகதை உலகம் – நாற்பதாண்டுப் பரப்பில் 135 முத்தான கதைகள். இவை மானுட குலத்தின், தமிழ்ச் சமூகத்தின், வளர்ச்சியின் பரிணாமங்களின் சாசனங்கள். இவர் சிறுகதை உலகின் சிறப்பியல்புகள் சுருள் சுருளாய் விரியும்.

● பிரம்மாண்டமான வீச்சும் ஆழமும் ● பல்வகைப் பிரச்சினைகளின் படப்பிடிப்பு ● பல்வேறு சமூக மட்டங்களின் பாத்திரப் பிரதிநிதித்துவம் ● தமிழிலக்கியம் தொடக் கூசிய புலங்களின் பிரவேசம் ● பன்முகப்பட்ட கதைமாந்தர் பண்புகள் ● பாத்திரங்களின் இயல்புக்கேற்ற சொல்லாட்சி ● பிராம்மணத் தமிழும் சரி, சேரித் தமிழும் சரி, அவரிடம் கைகட்டிச் சேவகம் புரியும் அற்புதம் ● ஆழ்மனதின் மெல்லதிர்வுகளை ஊடுறுவும் லேசர் பார்வை ● பல கூறுகளாய்ச் சிதிலப் பட்டுப் போகும் நவீன மாந்தர்பால் புரிதல் கமழும் பரிவு ● அவரது வீரியமுள்ள கருத்துலகின் அக்கினிக் குஞ்சுகள் பரிணமிக்கும் புதுமையான கட்டமைப்பு உத்திகள்.

முழுத் தொகுப்பு

ஜெயகாந்தனின் இப் பன்முக ஆளுமையின் அனைத்துச் சிறுகதைப் படைப்புகளையும் கவினுறத் தொகுத்து, நவபாரதியின் விரிவான முன்னுரையுடன் உயர்ந்த தரமுள்ள பதிப்பாக இருபெரும் தொகுதிகளாக **கவிதா பப்ளிகேஷன்** வெளியிடுகிறது. இத்தொகுப்பு ஓர் அரிய இலக்கியப் பொக்கிஷம்.

- 1954 முதல் 1990 வரை ஜெயகாந்தன் எழுதிய அனைத்து சிறுகதைகள் அடங்கிய முழுத் தொகுப்பு. ஓவியர் ஆதிமூலத்தின் முகப்பு ஓவியம்.
- 1744 பக்கங்கள் கொண்ட இரண்டு தொகுதிகள் டெம்மி– உயர்ரக மேப்லித்தோ பேப்பரில் அச்சாகிறது. செய் நேர்த்தியான கட்டமைப்பு.
- இரண்டு தொகுதிகளும் சேர்த்து விலை ரூ.800/–முன் வெளியீட்டு விலை ரூ 600/– மட்டும்.
- M.O. அல்லது D.D. **KAVITHA PUBLICATION** என்ற பெயருக்கு அனுப்பவும்.
- புத்தகங்களை அனுப்ப (இரண்டு தொகுதிகள்) முன்பதிவு செய்வோருக்கு மட்டும் பதிவுத் தபால் செலவை பதிப்பகமே ஏற்றுக் கொள்கிறது. தாங்கள் அனுப்ப வேண்டிய தொகை ரூ. 600/– மட்டுமே.
- பதிவு செய்வதற்கான கடைசி நாள் : 30.6.2001
- 30.7.2001 தேதி முதல் M.O., D.D. அனுப்பியவர்களுக்குப் பணம் பெற்ற வரிசைப்படி நூல்கள் அனுப்பப்படும். தங்கள் தெளிவான முகவரியுடன் தொடர்பு கொள்க:

கவிதா பப்ளிகேஷன்

8, மாசிலாமணி தெரு, பாண்டி பஜார்,
த. பெ. எண் : 6123, பிரில்லியண்ட் டூடோரியல் அருகில்
தியாகராய நகர், சென்னை – 600017
தொலைபேசி : 4322177, 4364243 டெலிபேக்ஸ்: 044–4364243
ஈ–மெயில் : kavitha_publication@yahoo.com

தங்கச்சி கல்யாணம்

சிவகலைச் சந்திப்பதைத் தவிர்த்துக் கொண்டிருக்கிறான் ஸ்ரீதர். நேர்முகத் தேர்வு முடிந்து கிராமத்துக்குத் திரும்பிய கையோடு சிவகலைப் போய்ப் பார்க்க வேண்டும் என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தான் அவன்...

''சிவகலோட தங்கச்சி கல்யாணம் நின்னுடுச்சு...'' ஸ்ரீதர் வீட்டுக்குள் நுழைவதற்கு முன்பாகவே, அவன் அம்மா அறிவித்தாள்.

முற்றிலுமாக நிலைகுலைந்து போனான் ஸ்ரீதர்.

''என்னம்மா சொல்றே...?'' நம்ப முடியாமல் பதறினான். ''நான்...நான் போய் சிவகலைப் பாத்துட்டு வந்துர்றேன்...'' கழற்றிப் போட்டச் செருப்பை மறுபடியும் காலில் மாட்டிக் கொண்டு அவசரமாகப் புறப்பட்டான்.

''கடவுளே, என்ன நடந்துருக்கும்? ஏன், ராதா கல்யாணம் நின்னுடுச்சு?'' யோசனைகளும் தவிப்புமாக ஸ்ரீதர் பரபரத்துப் படியிறங்குகையில், ''வந்துட்டியா ஸ்ரீதர்? இன்டர்வியூவெல்லாம் எப்படி செஞ்சுருக்கே...?'' எதிர்ப்பட்டார் அவன் மாமா.

மாமா வெகு சாதாரணமாகக் கேட்டாலும், ஏதோ ஒரு அதிமுக்கியமான விஷயத்தைப் பற்றி ஸ்ரீதரிடம் பேச வேண்டும் என்கிற தீவிர முனைப்புடன் தெரிந்தார்.

அதைப் புறக்கணித்தான் ஸ்ரீதர். தன் நடையை நிறுத்தாமலே, ''அவசர வேலையாப் போறேன் மாமா. நான்



உங்களை அப்புறமா பார்க்கறேன்..."

"இப்படி ரெக்கைக் கட்டிக்கிட்டு எங்கே போறாப்ல? சிவகுவைப் பார்க்கவா...?"

சிவகுவின் பெயர் ஸ்ரீதரை நிறுத்தியது.

"ஆமாம் மாமா. அவன் தங்கச்சி கல்யாணம் நின்னுடுச்சாம்ல... மனசு பகீர்ங்குது...

வர்ஷா

உடைஞ்சிருப்பான் சிவகு. போய் விசாரிச்சாதான் நிம்மதியாகும்..."

"அந்த சமாசாரத்தைப் பற்றிதான் உங்கிட்டே பேசணும். அந்த சிவகு உன்னைப் பத்தி ஊருக்குள்ளே என்ன சொல்லிக்கிட்டுத் திரியறான் தெரியுமா...?"

அன்றைக்கு மாமா கேட்ட அந்தக் கேள்வியில் சிவகுவைப் பார்க்கப் போகாமல் நின்றவன்தான்... தொடர்ந்து அவர் தெரிவித்த விவரங்களால், இதோ இரண்டு நாளாகிறது. இன்னமும் சிவகுவைப் பார்க்கவில்லை ஸ்ரீதர்.

முளைக்காத மீசையை முளைக்க வைப்பதற்காகச் சிவகுவின் அக்கா கணவரின் ரேசரைத் திருடி, முகம் முழுக்க நுரையோடு, ஒன்றாக அடியும் உதையும் வாங்கிக் கட்டிக்



கொண்ட காலத்திலிருந்து ஸ்ரீதரும் சிவசுவும் நண்பர்கள்.

இருவரது நெருக்கமான தோழமை அந்தப் பிரதேசம் முழுவதும் மிகப் பிரசித்தம்.

சிவசுவின் தங்கை ராதாவின் கல்யாணம் பொருட்டு சிவசுவின் இல்லம் முழுக்கத் தோரணங்கள் கட்டியவனே ஸ்ரீதர்தான்.

"ஏய் ஸ்ரீதர், நாளைக்கு இன்டர்வியூன்னு சொன்னே. இன்னும் என்ன இங்கியே சுத்திக்கிட்டு இருக்க நீ...?"

"ஏண்டா என்னைக் கல்யாணத்துக்கு இருக்க்வுடாம விரட்டுறதிலியே இருக்கே? ஆயிரம் இன்டர்வியூ... அதுல இது ஒண்ணு: போவியா..."

"பேசுறதைப் பாத்தா இன்டர்வியூவுக்குப் போகாம ஜூட் வுட்ருவ மாதிரியில்ல தெரியுது. முதல்ல கிளம்புடா..கிளம்புடாங் கறேன்..."

சிவசு விரட்டிய விரட்டலில்தான் அன்று ஸ்ரீதர் புறப்பட்டுப் போனான். திரும்பி வந்தவன் நெஞ்சத்தைச் சிதறடித்து, உலுக்கிப் போட்டது, ராதாவின் திருமணம் நின்று போய்விட்டிருந்த செய்தி.

தடைபட்டுப் போன தங்கையின் திருமணத்தால் நலிந்து போயிருக்கும் சிவசுவுக்கு ஆறுதல் சொல்ல வேண்டும் என்று ஸ்ரீதரின் நட்பு மனசு பதறித் துடிக்கையில், அவனைப் பின்னே இழுத்தது, அவன் மாமா தெரிவித்தவை!

உண்மையாக இருக்குமா? சிவசுவா அப்படிப் பேசியிருப்பான்?

"உன் தங்கச்சி கல்யாணம் எப்படி நடக்குதுன்னு பாத்துர்றேன்'னு மாப்பிள்ளை வீட்டுக்காரங்க சிவசுவை மிரட்டியிருக் காங்க. தங்க மாட்டம் மாப்பிள்ளை எங்கையில் இருக்கான். இன்னும் ஒருவாரத்துல என் தங்கச்சி கல்யாணத்தை மறுபடி நடத்திக் காட்றேன்னு சவால் வுட்ருக்கானாம் சிவசு. மாப்பிள்ளை யார் தெரியுமா ஸ்ரீதரா? நீதான்..."

மனசுக்குள் எதிரொலித்த மாமாவின் குரல் ஸ்ரீதரை ஒரேயடியாகப் புரட்டிப் போட்டது.

இந்த சிவசுவுக்கு இப்படி ஒரு யோசனை ஏன் தோன்றித் தொலைக்க வேண்டும்?

ஸ்ரீதரின் எண்ணங்களில் சங்கடமும், சஞ்சலமும் கலவையாகப் பிரவகித்து அவனை மூழ்கடித்துத் திணறச் செய்தன.

"உன் தங்கச்சியை என்னால் கல்யாணம் பண்ணிக்க முடியாது." சிவசுவிடம் எப்படி மறுப்பேன்?

'கல்யாணம் நின்று போன பொண்ணுன்னுதான என் தங்கச்சிய கட்டிக்க மாட்டேங்கற?' நேரடியாகவே கேட்டு வதைப்பானே? எப்படி சமாளிப்பது?

சிந்தனைகள் விளைவித்த தர்ம சங்கடத்தால், சிவசுவின் கண்களிலேயே படாமல் தப்பித்துக் கொண்டிருக்கிறான் ஸ்ரீதர்.

சிவசுவைக் கடைத்தெருப்பக்கம் பார்த்ததாக யாராவது பேசிக் கொண்டால், ஸ்ரீதர் சினிமா தியேட்டருக்குள் போய் ஒளிந்து கொண்டான்.

சிவசு, ஸ்ரீதரைத் தேடிக் கொண்டு வீட்டுக்கு வந்தபோது, பின்கட்டில் பதுங்கிக் கொண்டு, "ஸ்ரீதர் வீட்டில் இல்லை. டவுனுக்குப் போயிருக்கான்" என்று அம்மாவை விட்டுச் சொல்லச் சொன்னான்.

ஒருமுறை உண்மையாகவே டவுனுக்குப் போய்விட்டான் ஸ்ரீதர்.

"ஏய் ஸ்ரீதர், எங்கேடா போய்த்



"என்னங்க... சென்னை-பெங்களூர் நெடுஞ்சாலையில் மூன்று கிலோமீட்டர் தொலைவில் வீட்டுமனை இருக்குன்னு சொல்லிட்டு இவ்வளவு தூரம் கூட்டிட்டு வந்திருக்கீங்க!"

தொலைஞ்சே?'' வங்கியின் வாசலில், கைனடிக்கினுள் சாவியை நுழைத்துக் கொண்டிருந்த ஸ்ரீதரின் குனிந்த முதுகில் விழுந்தது சிவசுவின் கரம்.

''உன்னைத் தேடிக்கிட்டு இன்னும் செவ்வாய்க் கிரகத்துக்குத்தான் போகலை நான். சரி, வண்டியை எடு... வீட்டுக்குப் போய்ப் பேசிக்கலாம்.'' இயல்பாகப் பேசியபடி, உரிமையோடு பில்லியனில் தொற்றிக் கொண்டான் சிவசு.

''பேசுனபடி நகை சீரெல்லாம் சரியாத் தாண்டா செஞ்சிருந்தோம். மாப்பிள்ளை வீட்டுக்காரங்க எதையும் சரியா கவனிக்காம... அஞ்சு பவுனு குறையுதுன்னு ஒரே கலாட்டா. நகையைக் கொண்டா... இல்லை பணத்தைக் கொண்டா... அப்பதான் உன் தங்கச்சிக் கழுத்துல தாலியைக் கட்டுவேன்னு மாப்பிள்ளையே காட்டுக் கத்தல் கத்துனான். நகை சரியாத்தான் இருக்குன்னு தெரிஞ்சதும் 'ஹி...ஹி... முகூர்த்தம் நெருங்கிடுச்சி'ன்னு வழிஞ்சானுங்க அந்தப் பரதேசிப் பசங்க. இந்தப் பணப் பிசாசுங்க வீட்டுக்கு மருமகளாப் போனா என் தங்கச்சி எப்படி சந்தோஷமா வாழுவான்னு நான் தான் கல்யாணத்தை நிப்பாட்டிட்டேன்...'' வழிமுழுக்கப் பேசிக் கொண்டே வந்தான் சிவசு.

இருவரும் சிவசுவின் வீட்டுக்குள் நுழைந்தார்கள்.

வீடு முழுக்க மனிதர்கள் இருந்தார்கள். கல்யாணத்துக்கென்று வந்த உறவினர் கூட்டம் முழுவதுமாகக் கலையவில்லை போல...

எதையோ தைத்துக் கொண்டிருந்தாள் சிவசுவின் தங்கை ராதா. உணர்ச்சிகள் துடைக்கப்பட்டிருந்த அவளின் வெளுத்த முகம், தீர்ந்து விட்ட கண்ணீரையும் சோர்ந்து கிடந்த அவள் உள்ளத்தையும் சொன்னது.

''ராதா கல்யாணத்தன்னைக்கு உனக்கு இன்டர்வியூ வந்து தொலைச்சுதேன்னு நீ நொந்தியே... அது நல்லதுக்குத்தாண்டா. அன்னைக்கு மட்டும் நீ இருந்திருந்தே... அந்த பரதேசிப் பசங்க பேசுன பேச்சுக்கு அவங்களை வெட்டியே போட்டுருப்ப. அவனுங்க உன் தங்கச்சிக்கு எப்படிக் கல்யாணம் பண்ணிடுவே பாக்கறோம்னு சவால் வுடுறானுங்கடா... என் தங்கச்சி... அவ...'' சாதாரணமாக ஒலித்துக் கொண்டிருந்த சிவசுவின் குரல், இறுதியில் அதிகமாக நெகிழ்ந்து, கரகரத்துக் கரைந்தது.

இதோ வீசப் போகிறது எதிர்பார்த்த புயல். எதைத் தவிர்க்க சிவசுவிடமிருந்து தப்பித்துக் கொண்டிருந்தோமோ, அந்த வெடிகுண்டு இதோ வெடித்துச் சிதறப் போகிறது. என்ன செய்வது?

'ராதாவைக் கட்டிக்கடா...' சிவசு சொல்லிவிட்டால் என்ன சொல்லி, எப்படிச் சொல்லி தவிர்ப்பது? தான் பார்க்க வளர்ந்த குழந்தை அல்லவா அவள்...! ஸ்ரீதருக்குள் அச்சங்கள்... தடுமாற்றங்கள்...

''உன்னைப் பாக்கணும், ராதா விஷயமா உங்கிட்டே பேசணும்னு நான் தவிச்சுக்கிட்டிருக்கேன்'' சிவசு பேசினான்.

மறுபடி சிவசு தன் பேச்சைத் தொடரும் முன், ''மாமா...'' சிவசுவின் மேல் ஓடிவந்து விழுந்தான் ஒரு பொடியன். ''இதாரு...?'' ஸ்ரீதரைக் காட்டிக் கேட்டான்.

''டேய், போடா... பெரியவங்க பேசறப்ப தொந்தரவு பண்ணாதே...'' அவனை விரட்டினான் சிவசு.


''அவங்களும் உன் மாமாதாண்டா. உனக்கு இன்னொரு மாமா. சிவசு மாமா மாதிரியே...''

சத்தம் குறைவாக, மெதுவாக, ஆனால் வெகு அழுத்தமாக ஒலித்தது ராதாவின் குரல். அவளின் பார்வை ஸ்ரீதர் மேல், ஒரு மென்மையானப் புரிதலோடு படர்ந்தது. அந்தப் பார்வையில் இலேசான ஈரம்; அந்தக் கனிவு!

அதிகாலை தூயக்காற்றைப் போல அருமையான ஏதோ ஒன்று, இதயம் முழுக்க நிரம்புவதைப் போல உணர்ந்தான் அவன். ○

''நாங்க சொன்னது பெங்களூரிலிருந்து 3 கிலோ மீட்டருங்க!''

– புளியரை கணேசன்



"5 வருட இடுப்பு வலியிலிருந்து ஆப்ரேஷன் இன்றி குணமடைந்தேன்!!!"



Lakshmi Iyer

ஸ்ரீமதி. லஷ்மிஐயர்,
மேட்டூர்டேம் R.S.,
சேலம் மாவட்டம்,
தமிழ்நாடு.

கடந்த ஐந்து வருடங்களாக இடுப்பில் வலி இருந்து வந்தது. இதனால் குனிந்து நிமிரும் பொழுதும், சிறிது தூரம் நடக்கும் பொழுதும், உட்கார்ந்து எழுந்திருக்கும் பொழுதும், மாடிப்படி ஏறி இறங்கும்பொழுதும் , பிடிப்புடன் கூடிய வலி இருந்தது. ஆங்கில மருத்துவரிடம் சென்று **C.T. Scan** எடுத்துப் பார்த்த போது, இடுப்பில் கடைசி இரண்டு எலும்புகள் விலகி இருப்பதாக கூறினார்கள் **(L4, L5, DISC PROLAPSE)**இதற்கு சில மருந்துகளையும், இடுப்பில் போட்டு கொள்வதற்கு **Belt**-ம் எழுதிக் கொடுத்தார்கள். இருப்பினும் வலி நிற்கவில்லை. பின்பு ஆப்ரேஷன் **(Operation)** செய்தால் குணமடையும் என்று கூறினார்கள் அப்பொழுது **"MARC HERBAL CARE(P)LTD."** நிறுவனத்தின் விளம்பரத்தை செய்தித்தாள்களில் கண்டு நானும் எனது கணவரும் அங்கு சென்றோம். டாக்டரின் ஆலோசனைபடி அவர்கள் கொடுத்த மூலிகை பவுல்டிசை (Poultice) வெளிப்பிரயோகமாக தினமும் தவறாமல் தடவி வந்தேன். 9 வார தொடர்ச்சியான சிகிச்சைக்குப் பிறகு தற்பொழுது எனது வலிகள் அனைத்தும் நீங்கி பரிபூரண நிவாரணம் அடைந்தேன். நன்றி.

★ காலம் காலமாக வேதமகரிஷிகள் சித்தர்கள் கண்டுபிடித்து பரிசோதித்து அனுபவப்பட்டு வெற்றிகண்ட ஆயுர்வேத மூலிகை மருத்துவமுறைப்படி எங்களது நிறுவனம் ஒரு வெளிப்பிரயோக மூலிகை பவுல்டிசை (Poultice) கொண்டு ஆர்த்திரைட்டீஸ், ஸ்பாண்டிலைட்டீஸ், தோள்பட்டை வலி, முதுகுவலி, குதிக்கால்வலி, கைகால் மூட்டுவலி ஆகியவைகளுக்கு தகுதிவாய்ந்த அனுபவம் மிக்க ஆயுர்வேத, சித்தா மற்றும் அலோபதி மருத்துவர்களின் மேற்பார்வைகளின் கீழ் சிகிச்சை அளித்து வருகிறோம்.

★ ஒரு வரைப்போல் மற்றொருவரது உடல்வன்மை இருப்பது இல்லை என்பது யாவரும் அறிந்த உண்மை எனவே கால மாற்ற விளைவுகளால் மனிதனின் உடல்வன்மையில் ஏற்படும் மாறுதல்களுக்கு ஏற்ப சிகிச்சையும் பலன்களும் வேறுபடலாம் என்பதை **MARC HERBAL CARE (P) LTD** நன்கு உணர்ந்துள்ளன.

கலந்து ஆலோசிக்க இப்போதே தொடர்பு கொள்க.
தொலைபேசி
0413-346683

காலை 9 மணி முதல், இரவு 7 மணி வரை
வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்.

MARC ஹெர்பல் கேர் (பி) லிமிடெட்
32, செயின்ட் தெரெஸ் வீதி, பாண்டிச்சேரி – 1
(ராமன் தியேட்டர் எதிர் வீதி, ஃபார்ச்சூன் பேக்கரி எதிரில்)
Fax : 91 - 0413 - 346683



S.V.முதியோர் இல்லம்



இங்கு முதியோர்களுக்கு இலவச மருத்துவமனை, ஆரம்பிக்கப்பட்டு அனைவரையும் தனித்தனியாக பரிசோதனை செய்து, உடல் ஆரோக்கியம் கண்காணிக்கப் படுகிறது. படுத்த படுக்கை யில் உள்ள முதியோர்கள் அனைவரையும் 24 மணி நேரமும் நர்சுகளும், உதவியாளர்களும் கவனித்துக் கொள்கிறார்கள். எமர்ஜென்சி உபகரணங்கள் உள்ளன.

மனச்சிதைவு, மனவளர்ச்சி குன்றிய முதியோர்கள் மற்றும் எல்லா வயது ஆண்/பெண் நோயாளிகளுக்கென்று தனி இல்லம் மருத்துவ வசதியுடன் செயல்பட்டு வருகிறது.

எல்லா வயது உட்பட்ட அதிக பட்ச மனநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு (ஆண், பெண் இருபாலரும்) சிறப்பு பாதுகாப்பு வசதியுடன் முற்றிலும் இலவச மருத்துவ வசதியுடன் தனித் தனி இல்லம் செயல்படுகிறது.

உங்கள் பிறந்த நாள் மற்றும் சிறப்பு நாட்களில் நீங்கள் அளிக்கும் ஒரு சிறிய நன்கொடைத் தொகை எங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்கள் மருத்துவ வசதிக்கு பயன்படுத்துவதுடன், அவர்கள் வாழ்க்கையை காப்பாற்றிய நல்லாசி உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கும் மிகப் பெரிய பரிசாகவும் அமையும்.

முதியோர் சேவை பெரியது!

நன்கொடைக்கு வருமானவரி விலக்கு (80G, Income Tax Excemption) உண்டு

S.V. HOME FOR AGED
#8, Janakiraman Colony, Near Arumbakkam Bus Stand,
Arumbakkam, Chennai - 600 106.
Phone: 475 5700; 475 1356; 475 5799
Web Page : www.svhome.org
Email: svhome@svhome.org

பொன்னியின் செல்வன்



எண்பத்து நான்காம் அத்தியாயம்

பட்டாபிஷேகப் பரிசு

சீனத்து வர்த்தகர்கள் இருவரும் தலையில் பெரிய பெரிய தலைப்பாகைகளுடனும் முகத்தில் அடர்த்தியாக வளர்ந்திருந்த தாடி மீசைகளுடனும் காட்சி அளித்தார்கள். அரண்மனை மேன் மாடத்தில் அச்சமயம் எரிந்து கொண்டிருந்த மங்கலான தீபத்தின் ஒளியில் அவர்களுடைய முகத் தோற்றங்கள் தெளிவாகப் புலப்படவில்லை. அவர்கள் என்ன பிராயத்தினர் என்பதைக் கூடத் தெரிந்து கொள்ள முடியவில்லை.

குந்தவையின் உள்ளத்தில் தோன்றியிருந்த ஐயங்கள் மேலும் வலுப்பட்டன. அறிவில் மிக்க அம்மாதரசி, "பட்டுப் பட்டாடைகளைப் பார்ப்பதற்கு இந்த வெளிச்சம் போதாது. பெரிய தீவர்த்தி ஏற்றிக் கொண்டு வா!" என்று அவ்வர்த்தகர்களை அழைத்து வந்த சேவகனுக்குக் கட்டளையிட்டாள்.

"நான் சென்று நல்ல விளக்கு அனுப்புகிறேன்!" என்று கூறிவிட்டு மதுராந்தகத் தேவர் அவ்விடத்திலிருந்து அகன்றார். அவருடன் செம்பியன் மாதேவியும் சென்றார்.

அவர்கள் சென்ற பின்னர் குந்தவை சீன வர்த்தகர்களை நோக்கி, "ஐயா! உங்களுக்கு ஏன் இத்தனை அவசரம்?

அமரர் கல்கி

உங்கள் சரக்குகளை நாளை பகல் வேளையில் கொண்டு வந்து காண்பிக்கக் கூடாதா? இரவுக்கிரவே வந்தீர்களே?'' என்றாள்.

''இளவரசிமார்களே! மன்னிக்க வேண்டும்! நாங்கள் தஞ்சைக்கு வந்து பல தினங்கள் ஆயின. எவ்வளவோ பிரயத்தனம் செய்தும் அரண்மனைக்குள் வந்து தங்களைப் பார்க்க முடியவில்லை. நாளை மறுதினம் நாகைப்பட்டினத்திலிருந்து நாவாய் புறப்படுகிறது. அதில் நாங்களும் புறப்பட வேண்டும். அதனாலேதான் அவசரப்பட்டோம்!'' என்று சீன வர்த்தகர்களில் ஒருவன் சொன்னான்.

அவனுடைய குரல் சிறிது விசித்திரமாக இருந்தாலும் அவன் பேசிய தமிழ் நன்றாக இருந்ததைக் குறித்து அங்கிருந்தவர்கள் அதிசயப்பட்டார்கள்.

"சீன வர்த்தகரே! உமக்குத் தமிழ் மொழி மிக நன்றாக வருகிறதே!'' என்றாள் குந்தவை.''

''நான் இச் சோழ நாட்டுக்கு வியாபார நிமித்தமாக வந்து தங்கிச் சில காலம் ஆயிற்று. அதனால் தமிழ் பேசச் சிறிது கற்றுக்கொண்டேன். தமிழும் தமிழ் நாடும் எனக்குப் பிடித்திருக்கின்றன'' என்றான் அவ்வர்த்தகன்.

"பின், ஏன், இப்போது உங்கள் நாட்டுக்குப் புறப்பட அவசரப்படுகிறீர்கள்? பட்டாபிஷேகம் வரையிலாவது இருந்து விட்டுப் போகக் கூடாதா? அவ்வளவு அவசரம் என்ன?''

"நாளை மறுநாள் புறப்படும் கப்பல் தவறி விட்டால், அப்புறம் எப்போது கப்பல் கிளம்புமோ தெரியாது. முன் போலவெல்லாம் இப்போது அடிக்கடி நாகையிலிருந்து கப்பல்கள் புறப்படுவதில்லை.''

"அது எதனால்?''

''தங்களுக்கு அதன் காரணம் தெரியாதா, தேவி! கடற்பிரயாணம் முன் போல இப்போது சுலபமாயில்லை; பத்திரமாகவும் இல்லை. கடற்கொள்ளைக்காரர்கள் அதிகமாகி விட்டார்கள். அரபு நாட்டிலிருந்து ஆவேச வெறி கொண்ட வீரர்கள் கப்பல்களில் ஏறி மேலைக் கடல்களிலும் கீழைக் கடல்களிலும் எங்கெங்கும் சஞ்சரித்து வருகிறார்கள். கடற்கரையோரங்களிலும் துறைமுகங்களின் சமீபத்திலும்கூட அவர்கள் வந்து காத்திருக்கிறார்கள். வர்த்தகக் கப்பல்களைக் கண்டதும் நெருங்கி வந்து பாய்கிறார்கள். மூர்க்காவேசத்துடன் போர் செய்து கப்பல்களில் உள்ளவர்களையெல்லாம் கொன்று, பொருள்களையெல்லாம் கொள்ளை கொண்டு போகிறார்கள். இது காரணமாக, இப்போதெல்லாம் வர்த்தகக் கப்பல்கள் தனித்தனியாகக் கிளம்பிச் செல்ல இயலுவதில்லை. பத்துக் கப்பல்கள், இருபது கப்பல்கள் சேர்ந்து புறப்பட வேண்டியிருக்கிறது. அவ்வாறு நாளை மறுநாள் புறப்படும் கப்பல்கள் போய்விட்டால், மறுபடி எத்தனை காலம் காத்திருக்க வேண்டுமோ, தெரியாது. தேவிமார்களே! பெரிய மனசு செய்து நாங்கள் கொண்டு வந்திருக்கும் பட்டுப் பட்டாடைகளைப் பாருங்கள்!''


இவ்வாறு சொல்லிக் கொண்டே அச் சீன வர்த்தகன் தான் கொண்டு வந்திருந்த மூட்டையைப் பிரிக்கத் தொடங்கினான். அம்மாதிரியே இன்னொருவனும் மூட்டையை அவிழ்த்தான்.

''வர்த்தகர்களே! இப்போது உங்கள் கடையை விரிப்பதில் பயனில்லை. உங்கள் பட்டாடைகளின் தரத்தை இரவு நேரத்தில் பார்த்து நன்கு தெரிந்து கொள்ள முடியாது. உங்களிடம் பட்டாடைகள் வாங்கினால் விலை கொடுப்பதற்கு வேண்டிய பொருளும் இங்கே நாங்கள் கொண்டு வந்திருக்கவில்லை!'' என்றாள் இளையபிராட்டி.

முதலில் பேசிய வர்த்தகன் உடனே

மிக்க வியப்படைந்தவனைப் போல் எழுந்து நின்று கரங்களை விரித்துக் குவித்து விட்டு, "இளவரசி! தங்களிடம் நாங்கள் விலை கூறிப் பெறுவோமா? நல்ல வார்த்தை சொன்னீர்கள்! தாங்கள் இந்தப் பட்டாடைகளை ஏற்று அணிந்து கொள்ள மனமுவந்தால், அதுவே நாங்கள் முன் ஜன்மங்களில் செய்த தவத்தின் பயன் என்று எண்ணி மகிழ மாட்டோமா? விலை கூறி விற்பதற்காக நாங்கள் இந்தச் சரக்குகளைக் கொண்டு வரவில்லை! பட்டாபிஷேகப் பரிசுகளாகக் கொண்டு வந்தோம்!" என்றான்.

"அப்படியானால், நீங்கள் தவறான இடந் தேடி வந்தீர்கள். இங்கேயுள்ள எங்களில் யாருக்கும் பட்டாபிஷேகம் இல்லை. முடிசூட்டிக் கொள்ளப் போகிறவர் இளவரசர் பொன்னியின் செல்வர், அவரைத் தேடிக் கொண்டு போய் உங்கள் பரிசுகளைக்



கொடுங்கள்!''

"இல்லை, தேவி! சரியான இடந் தேடித்தான் நாங்கள் வந்துள்ளோம். எதற்கேனும் பொன்னியின் செல்வரின் தயவைப் பெற வேண்டுமானால், முதலில் இளையபிராட்டி குந்தவை தேவியின் தயவைப் பெறுவதுதான் அதற்கு உபாயம் என்று எல்லாரும் சொல்லுகிறார்கள்!'' என்றான் சீன வர்த்தகன்.

இதைக் கேட்டு அங்கிருந்த பெண்ணரசிகள் அனைவரும் நகைத்தார்கள்.

"எல்லாரும் என்றால் யார்? அவ்விதம் எங்கே யார் பேசியதை நீங்கள் கேள்விப்பட்டீர்கள்?''

"ஏன், தாயே? இன்றைக்கு இந்த நகரில் நடந்த உற்சவத்தின்போது கூடியிருந்த கூட்டத்தில்கூடப் பலர் பேசிக்கொண்டார்கள். 'தமக்கை சொல்லைத் தம்பி தட்டவே மாட்டார்' என்று சொல்லிக்கொண்டார்கள். இதோ இருக்கும் என் தோழனை வேண்டுமானாலும் கேளுங்கள்!''

இத்தனை நேரம் சும்மாயிருந்த அத் தோழன், "ஆம், இளவரசிமார்களே! அது உண்மைதான்! 'பொன்னியின் செல்வருக்குப் பட்டாபிஷேகம் என்றால், அது குந்தவைப் பிராட்டிக்குப் பட்டாபிஷேகம் செய்தது மாதிரிதான்!' என்று ஜனங்கள் பேசிக்கொண்டார்கள். 'இனி மேல் சோழ நாட்டில் பெண்ணரசுதான் நடக்கப் போகிறது! அது நல்லரசாகவும் இருக்கும்' என்று ஜனங்கள் சொல்லிக் கொண்டார்கள்.

மறுபடியும் இளவரசிகள் 'கலகல'வென்று சிரித்தார்கள்.

"ஆகையால், இளவரசிமார்களே! கருணை கூர்ந்து இந்தப் பட்டாபிஷேகப் பரிசுகளை ஏற்றுக் கொள்ள வேண்டும்!'' என்றான் ஒரு சீன வர்த்தகன்.

"ஏற்றுக்கொண்டு, பொன்னியின் செல்வரிடம் எங்கள் கோரிக்கையையும் சமர்ப்பிக்க வேண்டும்!'' என்றான் இன்னொரு வர்த்தகன்.

"என்ன கோரிக்கை? பொன்னியின் செல்வரிடம் உங்களுக்கு என்ன காரியம் ஆக வேண்டும்? முதலில் அதைச் சொல்லுங்கள்!'' என்றான் குந்தவைப்பிராட்டி.

"தேவி! அவரால் எத்தனையோ காரியம் ஆக வேண்டும். எங்களுக்கு மட்டும் அல்ல; சோழநாடு முதல் சீன தேசம் வரையில் உள்ள எல்லா நாட்டு வர்த்தகர்களும் பொதுமக்களும் அருள்மொழிவர்மரைத் தான் நம்பியிருக்கிறார்கள். பராந்தக சக்கரவர்த்தியின் காலத்தில் கடல்களெல்லாம் பத்திரமாயிருந்தன. கடற் பிரயாணத்தில் புயற்காற்றினால் நேரும் ஆபத்தைத் தவிர வேறுவித அபாயம் இல்லாமலிருந்தது. கடலில் கப்பல்களைத் தாக்கிக் கொள்ளையடிப்பது என்பது கனவிலும் கேள்விப்படாத காரியமாயிருந்தது. சோழ நாட்டு நாவாய்கள் வர்த்தகப் பொருள்களை ஏற்றிக் கொண்டு இராஜ பாட்டைகளில் செல்வது போல் நிர்ப்பயமாகச் சென்றுகொண்டிருந்தன. மாநக்கவாரம், மாயிருடிங்கம், மாபப்பாளம், இலாமுரி தேசம், ஸ்ரீவிஜயம், சாவகம், கடாரம், காம்போஜம் ஆகிய கடல் சூழ்ந்த நாட்டுத் துறைமுகங்களுக்குச் சோழ நாட்டுக் கப்பல்கள் சென்று ஆங்காங்கே இறக்குமதி ஏற்றுமதி செய்து கொண்டு எங்கள் சீன நாட்டுக்குச் சென்றன. அவ்விதமே எங்கள் சீன தேசத்திலிருந்து புறப்பட்ட கப்பல்களும் சோழ நாட்டுக்குத் தங்கு தடையின்றி வந்து கொண்டிருந்தன. அந்தக் காலம் இப்போது பழங்கனவாகப் போய்விட்டது. தேவி! தங்களிடம் உண்மையைச் சொல்லி விடுகிறோம். இந்தப் பட்டுப் பட்டாடைகளை நாங்கள் திரும்பக் கொண்டு போனால் பத்திரமாய் எங்கள் நாட்டுக்குக் கொண்டு போய்ச் சேர்ப்போம் என்பது நிச்சயமில்லை. வழியில்

அராபியக் கடல் கொள்ளைக்காரர்களிடம் இந்தப் பட்டாடைகளைப் பறி கொடுப்பதைக் காட்டிலும் சோழ நாட்டு இளவரசிமார்களுக்குப் பரிசாக அளிப்பது மிகவும் விசேஷமான காரியமல்லவா...?"

இவ்விதம் அந்தச் சீன வர்த்தகன் சொல்லி வந்த போது குந்தவை தேவியின் கருவண்டுகளையொத்த கண்கள் நன்கு விரிந்து அளவிலா ஆர்வம் ததும்பப் பெற்றவையாயின.

"பொன்னியின் செல்வரால் அந்தக் காரியம் நடைபெறும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? பராந்தக சக்கரவர்த்தியின் காலத்தில் இருந்தது போல், கடற் பிரயாணம் அபாயமற்றதாகும் என்று எண்ணுகிறீர்களா? மருநக்கவாரம், மாயிருடிங்கம், கடாரம், ஸ்ரீ விஜயம் முதலிய நாடுகளில் பொன்னியின் செல்வரின் புகழ் பரவும் என்று நம்புகிறீர்களா?" என்று கேட்டான்.

"நாங்கள் நம்புவது மட்டும் என்ன? இந்தச் சோழ நாட்டு வர்த்தகப் பெருமக்கள் எல்லாரும் நம்புகிறார்கள். ஏன்? சற்று முன் நாங்கள் ஒரு சோதிடரிடம் போயிருந்தோம். அவருங் கூடச் சொன்னார்."

"என்ன சொன்னார்?"

"பொன்னியின் செல்வர் பெரிய பெரிய கப்பல் படைகளைத் திரட்டிக் கொண்டு கடல்களைக் கடந்து செல்வார்; கொள்ளைக்காரர்களின் கூட்டங்களை ஒழித்து விடுவார்; கடற் பிரயாணத்தை முன்போல் நிர்ப்பயமானதாகச் செய்து விடுவார்; சோழ நாடு பராந்தக சக்கரவர்த்தியின் காலத்தில் அடைந்திருந்த பெருமையை மீண்டும் அடையும் என்றெல்லாம் ஜோசியர் சொன்னார். ஆனால் இதற்கெல்லாம் சோழ நாட்டு இளவரசிகள் குறுக்கே நின்று தடைகிளப்பாமல் இருக்க வேண்டும் என்றும் கூறினார்!"

"இவ்வளவுதான் சொன்னாரா? இளவரசிகளைப் பற்றி இன்னும் ஏதாவது அவதூறு கூறினாரா?"

"ஆகா! அவதூறா? அப்படியெல்லாம் ஒன்றுமில்லை, தேவி! பழையாறை இளையபிராட்டியைப் பற்றியும் கொடும்பாளூர்க் கோமகளைப் பற்றியும் அவதூறு சொல்கிறவர்கள் இந்தச் சோழ நாட்டில் யாருமே இருக்க முடியாது. அப்படியிருக்க, இளவரசிகளின் தயவை எதிர்பார்த்திருக்கும் ஜோசியர் மட்டும் துணிந்து சொல்லுவாரா?"

"வேறு என்னதான் அந்தச் சோதிடர் எங்களைப் பற்றிச் சொன்னார்?"

"இளவரசிமார்கள் இருவரும் சற்று முன் அவரிடம் வந்துவிட்டுப் போனதாகக் கூறினார். இரண்டு பேருக்கும் விரைவில் திருமணம் நடக்கும் என்றும் சொன்னார். தேவிமார்களே! பட்டாபிஷேகத்துப் பரிசாக ஏற்றுக் கொள்ளாவிட்டால் திருமணப் பரிசிலாகவாவது இந்தப் பட்டு ஆடைகளை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்!" என்றான் முதலில் பேசிய சீன வர்த்தகன்.

இதைக் கேட்ட வானதி, "அக்கா! இந்தச் சீன வர்த்தகர்கள் வெறும் வம்புக்காரர்கள். இவர்களைப் போகச் சொல்லுங்கள்!" என்றாள்.

"கொஞ்சம் பொறு வானதி! இவர்களுடைய வம்பு இன்னும் எவ்வளவு தூரம் போகிறது, பார்க்கலாம்!" என்று குந்தவை சொல்லிவிட்டு, "வர்த்தகர்களே! சோதிடர் வீட்டு வாசலில் யானையின் மீது வந்து நின்றவர்கள் நீங்கள்தானே?" என்றாள்.

"ஆம் தேவி! சோதிடர் வீட்டைத் தேடிப் போனதற்குப் பயன் உடனே கிடைத்து விட்டது. நீங்கள் வந்திருப்பதைத் தெரிந்துகொண்டோம். உங்களைச் சந்திக்கும் பாக்கியம் இன்று எங்களுக்குக் கிடைக்கும் என்று சோதிடர் கூறியதும் பலித்துவிட்டது.




மாபப்பாளம்
தலைத்
தக்கோலம்
மாயிருடிங்கம்
மாநக்கவாரம்
இலங்காசோகம்
இலாமுரி
தேசம்
கடாரம்
மாதமலிங்கம்
பண்ணை
மலையூர்
ஸ்ரீ விஜயம்
சாவகம்

அம்மாதிரியே கொடும்பாளூர் இளவரசியைக் குறித்து அவர் கூறியதும் பலித்து விட்டால் எங்கள் கவலையெல்லாம் தீர்ந்து விடும்!''

வானதி மீண்டும் ''அக்கா! இவர்களைப் போகச் சொல் லுங்கள்!'' என்றாள்.

''வர்த்தகர்களே! உற்சவக் கூட்டத் தினிடையே யானை ஏறி வந்தவர்களும் நீங்கள்தானே? அடிக்கடி நீங்கள் யானை மேலிருந்து கீழிறங்கி ஜனக் கூட்டத்தில் கலந்து கொண்டீர்கள்



அல்லவா?'' என்று குந்தவை கேட்டாள்.

''ஆம், தேவி! வரப் போகும் பட்டாபிஷேகத்தைப் பற்றி ஜனங்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள விரும்பி அவ்வாறு கூட்டத்தில் புகுந்து சுற்றி வந்தோம்.''

''ஜனங்கள் என்ன பேசிக்கொண்டார்கள்? பொன்னியின் செல்வர் முடி சூட்டிக் கொள்ளப் போவதைப் பற்றித் திருப்தியாகத்தானே பேசினார்கள்?''

''இல்லை; முடி சூட்டு விழாவைப் பற்றியே யாரும் பேசவில்லை.''

''பின்னர், ஜனங்கள் எதைப் பற்றிப் பேசினார்கள்?''

''மதுராந்தகத் தேவரின் பக்தி மகிமையைப் பற்றியே பேசிக்கொண்டார்கள்.''

''அப்படி நல்ல விஷயமாகச் சொல்லுங்கள். பூங்குழலி! கேட்டாயா?'' என்று குந்தவை பூங்குழலியைப் பார்த்துச் சொல்லிவிட்டு, ''மதுராந்தகத் தேவரைப் பற்றி இன்னும் என்னவெல்லாம் சொன்னார்கள்?'' என்றாள்.

''மதுராந்தகருடைய தியாகப் பண்பைப் பற்றிப் பேசினார்கள். சோழ ராஜ்யத்தில் அவருக்குப் பாத்தியதை கொண்டாடும் உரிமை இருந்தும், 'இராஜ்யம் வேண்டாம்' என்று சொல்லி விட்டதை மிகவும் பாராட்டினார்கள்.''

''மதுராந்தகத் தேவர் யாரோ ஒரு படகுக்காரப் பெண் மீது காதல் கொண்டு அவளையே பட்டமகிஷியாக்கிக் கொள்ளுவேன் என்று பிடிவாதம் பிடித்தாராம். அதனால் ஏற்கெனவே அவர் கட்சியிலிருந்த சிற்றரசர்களின் மனம் மாறி விட்டதாம். 'அப்படியானால் மதுராந்தகருக்குப் பட்டம் கிடையாது; பொன்னியின் செல்வருக்கே பட்டம்' என்று சிற்றரசர்கள் சொல்லி விட்டார்களாம். இம் மாதிரி ஜனங்கள் பேசிக் கொண்டார்கள். இளவரசிமார்களே! அந்தப் பாக்கியசாலியான ஓடக்காரப் பெண் இங்கே இருந்தால், அவருக்கும் பட்டாடைப் பரிசு கொடுக்க விரும்புகிறோம்.''

பூங்குழலி இப்போது ''தேவி! கொடும்பாளூர் இளவரசி கூறியது சரிதான். இந்த வர்த்தகர்கள் வெறும் வம்புக்காரர்கள். இவர்களை உடனே போகச் சொல்லுங்கள்!'' என்றாள்.

''கொஞ்சம் பொறு, பூங்குழலி! உனக்கு என்ன கோபம்? இவர்கள் உன்னைப் பற்றி ஒன்றும் தவறாகப் பேசவில்லையே? புகழ்ச்சியாகத்தானே பேசுகிறார்கள்?'' என்றாள் குந்தவை.

''இவர்கள் என்னைப் பற்றிப் புகழ்ச்சியாகவும் பேச வேண்டாம்; இகழ்ச்சியாகவும் பேச வேண்டாம்! எனக்குப் பரிசு கொடுக்கவும் வேண்டாம்!'' என்று பூங்குழலி கிளம்பினாள்.

''அம்மணி! தாங்கள்தானா அந்தப் பாக்கியவதி? ஆகா! ஜனங்கள் பேசிக்கொண்டது ரொம்ப சரி!'' என்றான் சீன வர்த்தகர்களில் ஒருவன்.

''இன்னும் வேறு என்ன பேசிக்கொண்டார்கள்?'' என்று பூங்குழலி புன்னகையுடன் கேட்டாள்.

''மதுராந்தகத் தேவர் தங்களை முன்னிட்டு இந்தச் சோழ ராஜ்யத்தையே தியாகம் செய்துவிட்டார் என்று கூட்டத்தில் ஒருவர் சொன்னபோது, அதற்கு மறுமொழியாக இன்னொருவர், 'பூங்குழலி தேவிக்காக ஒரு இராஜ்யத்தைத் தானா தியாகம் செய்யலாம்? என்னிடம் ஒன்பது இராஜ்யங்கள் இருந்திருந்தால் அவ்வளவு இராஜ்யங்களையும் தியாகம் செய்திருப்பேனே?' என்று சொன்னார். அவர் கூறியதை நானும் ஆமோதிக்கிறேன்!'' என்றான் அச் சீன வர்த்தகன்.

பூங்குழலி கள்ளக் கோபத்துடன், ''அக்கா! இந்த அதிகப்பிரசங்கி வர்த்தகரை உடனே தண்டிப்பதற்குத் தாங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்; இல்லாவிட்டால் நானே பொன்னியின் செல்வரிடம் சொல்லி இவருக்குத் தண்டனை வாங்கிக் கொடுப்பேன்!'' என்றாள்.

இதைக் கேட்டுக் கொண்டு அப்போது மேன்மாடத்துக்கு வந்தார் மதுராந்தகத் தேவர். மாலை நேரத்துப் பூஜை



செய்து விட்டுக் கையில் மலர்ப் பிரஸாதம் எடுத்துக்கொண்டு வந்தவர், பூங்குழலியின் வார்த்தைகளைக் கேட்டு, "இந்த வர்த்தகர் கூறியதில் தவறு ஒன்றுமில்லையே? எதற்காக அவரைத் தண்டிக்க வேண்டும்? அவர் கூறியதை நானும் ஆமோதிக்கிறேன், பூங்குழலி!" என்றார்.

இவ்விதம் சொல்லிக்கொண்டு வந்தவரை அந்தச் சீன வர்த்தகன் திரும்பிப் பார்த்தபோது, பூங்குழலி, "உண்மையான வர்த்தகர் சொன்னால் சரிதான்; வேஷதாரி வர்த்தகரை எப்படி ஆமோதிக்க முடியும்?" என்று சொல்லிக் கொண்டே, அந்த வர்த்தகர் தலையில் அணிந்திருந்த சீனத்துத் தலைப் பாகையைப் பிடித்து இழுத்தாள்.

தலைப்பாகை கீழே விழுந்தது; தலைப் பாகையுடன் அவனுடைய முகத்திலிருந்த தாடி மீசை எல்லாம் கீழே விழுந்தன!

சாக்ஷாத் வந்தியத்தேவனுடைய திருமுகம் காட்சி அளித்தது.

"ஐயா! காப்பாற்றுங்கள்!" என்று அலறிக்கொண்டே வந்தியத்தேவன் மற்றொரு சீன வர்த்தகனின் கழுத்தைக் கட்டிக் கொள்ள முயன்றபோது, அவனுடைய தலைப்பாகையும் தாடி மீசையும் கழன்று விழுந்தன.

பொன்னியின் செல்வர் புன்னகை பொலிந்த முகத்துடன் தோற்றமளித்தார்.

மூன்று பெண்மணிகளும் குலுங்கக் குலுங்க நீண்ட நேரம் சிரித்தார்கள்.

செம்பியன் மாதேவி மேன் மாடத்துக்கு வந்தபிறகு அவரிடம் ஒரு தடவை சொல்லிவிட்டு மறுபடியும் சிரித்தார்கள்.

பூங்குழலி! "அம்மா! இவர்களைக் கோயிலின் அருகே பார்த்தபோதே ஒரு மாதிரி எனக்குச் சந்தேகம் தோன்றிவிட்டது. அதனாலேதான் தைரியமாக இவர்களை அரண்மனைக்கு வரச் சொன்னேன்!" என்றாள்.

மதுராந்தகத் தேவர், "ஆமாம்; எனக்கு என் நண்பனைத் தெரிந்து போய்விட்டது. ஆகையினாலேதான் இவர்களை இங்கே விட்டு விட்டு நான் பூஜை செய்யச் சென்றேன்!" என்றார்.

"வானதி! நீயும் நானும்தான் புருஷர்களின் கள்ள வேடத்தைக் கண்டு பிடிக்க முடியாத அசடுகள் போலிருக்கிறது!" என்றாள் குந்தவை.

"இவர்கள் எதற்காக இந்த மாதிரி வேஷம் போட்டுக் கொண்டு வந்து நம்மை ஏமாற்றப் பார்த்தார்கள்? அதைக் கேளுங்கள், அக்கா!" என்றாள் கொடும்பாளூர்க் கோமகள்.

"கேட்பானேன், வானதி! என் சகோதரன் இப்படியெல்லாம் கள்ள வேஷம் போடத் தெரிந்தவன் அல்ல. சகவாச தோஷத்தினால்தான் இவ்வாறெல்லாம் வேடம் போடவும் பொய் புனைந்துரைக்கவும் கற்றுக் கொண்டிருக்கிறான்!" என்றாள் குந்தவைப் பிராட்டி.

"தேவி! இந்தக் காரியத்துக்கு வந்தியத்தேவர் மீது பழி சுமத்த வேண்டாம். சீன வர்த்தகர்கள் மாதிரி வேஷம் தரிக்கும் அபூர்வ யோசனை என் மனத்திலேதான் தோன்றியது!" என்றார் அருள்மொழி.

"இம்மாதிரி யோசனை உன் மனத்தில் தோன்றியதற்குக் காரணந்தான் சகவாச தோஷம் என்று சொல்கிறேன். போகட்டும்! இந்த மாதிரி பொய் வேஷம் இனி மேல் நீ போட வேண்டாம்!"

"அக்கா! திருவள்ளுவர் வாய்மையின் பெருமையைப் பற்றி எவ்வளவோ சொல்லியிருக்கிறார். ஆனால் அவர் கூட,

'பொய்ம்மையும் வாய்மை இடத்த; புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்!'

என்று சொல்லியிருக்கிறார் அல்லவா?"

"திருவள்ளுவர் அந்தக் குறளைப் பாடியபோது இப்படி நீ அதை உபயோகப்படுத்தப் போகிறாய் என்று கனவிலும் கருதியிருக்க மாட்டார்."

"திருவள்ளுவரை விட்டு விடலாம்.

இராமர் வனத்துக்குப் புறப்பட்டபோது தம்மைத் தொடர்ந்து வந்த அயோத்தி மக்களைத் திரும்பி அயோத்திக்குப் போகும்படி செய்வதற்குக் கொஞ்சம் பொய்மையைக் கையாளவில்லையா? ஜனங்கள் தூங்கும்போது எழுந்து ரதத்தை அயோத்தியை நோக்கிச் சிறிது தூரம் செலுத்தி விட்டுப் பிறகு கங்கைக் கரையை நோக்கிச் செலுத்தும்படி சுமந்திரரிடம் சொல்லவில்லையா?''

''தம்பி! நீ எல்லாக் காரியங்களிலும் இராமரைப் பின்பற்றுவதாயிருந்தால் எனக்கு மிக்க மகிழ்ச்சிதான்! போகட்டும்! நீங்கள் இந்தப் பொய் வேஷம் பூண்டதால் 'புரை தீர்ந்த நன்மை' என்ன உண்டாயிற்று? அதைச் சொல்வாயா?'' என்று கேட்டாள் குந்தவை.

''நாங்கள் இன்னார் என்பதைக் காட்டிக்கொள்ளாமல் குடிமக்களின் கூட்டத்தில் புகுந்து அங்குமிங்கும் அலைந்து அவர்களுடைய உண்மையான மனக் கருத்துக்களை அறிய முடிந்தது!''

குந்தவை சிறிது ஆர்வத்துடன், ''மக்கள் மனக் கருத்தைப் பற்றி என்ன தெரிந்து கொண்டாய், தம்பி!'' என்று கேட்டாள்.

''எத்தனையோ தெரிந்து கொண்டேன். அக்கா! முக்கியமாக, இந்தச் சோழ சாம்ராஜ்யம் பராந்தக சக்கரவர்த்தியின் காலத்தில் இருந்தது போல் மகோந்நதமடைய வேண்டும் என்பதை மக்கள் எல்லாரும் விரும்புகிறார்கள் என்று அறிந்தேன். சற்று முன்னால் நானும் என் நண்பரும் சீன வர்த்தகர்கள் போல் வேஷம் போட்டுக் கொண்டு இருந்தோமல்லவா? வேஷம் பொய்யாக இருந்தாலும் நாங்கள் கூறியதெல்லாம் மெய்தான்! உங்களிருவரையும் சாலையில் சந்தித்து விட்டுத் தஞ்சைக்கு நாங்கள் சென்றோம். தஞ்சைக் கோட்டை வாசலுக்கு அருகில் உண்மையாகவே இரண்டு சீன வர்த்தகர்களைக் கண்டோம். அவர்களிடம் விலை கொடுத்து இந்தப் பட்டு மூட்டைகளை வாங்கிக் கொண்டோம். அவர்களைப் போல் வேஷம் போட்டுக் கொண்டு திரும்பி வந்தோம். அராபியக் கடல் கொள்ளைக்காரர்களைப் பற்றி நான் சற்று முன் சொன்னதெல்லாம் அந்த வர்த்தகர்கள் எங்களிடம் கூறியதுதான். அராபியக் கடல் கொள்ளைக்காரர்களின் மூர்க்கத்தனத்தை நானும் என் நண்பரும் நேரிலேயே அனுபவித்திருக்கிறோம். தேவி! எது எப்படியானாலும், பட்டாபிஷேக வைபவம் முடிந்ததும் நானும் என் நண்பரும் ஈழ நாட்டுக்குப் புறப்படுவது நிச்சயம். அங்கே எங்கள் காரியம் முடிந்ததும், கடல்களுக்கு அப்பாலுள்ள இன்னும் பல நாடுகளுக்கும் செல்ல உத்தேசித்திருக்கிறோம். உயிருடன் திரும்பி வருவோமா, அல்லது போகுமிடங்களில் போர்க் களத்தில் உயிரை விட்டு வீர சொர்க்கம் எய்துவோமா என்று தெரியாது. ஆகையால் நாங்கள் புறப்படும் வரையில் நீங்கள் எல்லாரும் எங்களுடனேயே இருக்க வேண்டும் என்றும், எங்களுக்கு ஆசி கூறி விடை கொடுத்து அனுப்ப வேண்டும் என்றும் கேட்டுக் கொள்வதற்காகவே அவசரமாகத் தங்களைப் பின் தொடர்ந்து வந்தோம்!''

இவ்வாறு பொன்னியின் செல்வர் கூறி வந்தபோது, குந்தவை தேவியின் கண்களில் நீர் ததும்பியது.

பூங்குழலி தழதழத்த குரலில், ''யுத்தம் என்று எதற்காக ஏற்படுத்தியிருக்கிறார்களோ, தெரியவில்லை. மனிதர்கள் ஒருவரையொருவர் நேசித்துக்கொண்டு ஆனந்தமாயிருக்கக் கூடாதா?'' என்றாள்.

''மகளே! அப்படியல்ல! உலகம் உள்ள வரையில் யுத்தம் இல்லாமல் தீராது. பரமசிவனும் பரமேசுவரியும் யுத்தம் செய்ய வேண்டியிருந்ததே! உலகத்தில் தர்மத்தை நிலை நாட்டுவதற்காகப் பிறந்தவர்கள் சிலர் உண்டு. அவர்கள் யுத்தம் செய்யத்தான் வேண்டும்!''

இவ்விதம் சிவபக்த சிரோமணியும் பரம சாதுவுமான செம்பியன்மாதேவி கூறியதைக் கேட்டு அனைவரும் ஆச்சரியக் கடலில் ஆழ்ந்தார்கள்.

(தொடரும்)

அசத்தல்

விஜை வேல்தாசன்



அழுத்தமான காதல், உருக்கமான சென்டிமென்ட், மிரட்டலான செட்டுக்கள் இதுதான் வழக்கமான டி. ராஜேந்தர் படம். ஏனோ தெரியவில்லை, தமது பாணியையே தப்புத்தப் பாய்க் காப்பியடித்த மாதிரி ஒரு லைமா சினிமா!

தமது அலுவலக சகி, ரோஜாவைப் பிடிவாதமாகக் காதலிக்கிறார் முரளி. குடும்பச் சுமை காரணமாக 'காதல் நமக்குச் சரிப்படாது; வழியை விடு' என்று முன்னாகக் குத்தும் ரோஜா, முடிவில் முரளியை ஏற்கிறாரா? இல்லையா? என்பதுதான் தலைப்பிற்கு நியாயம் கற்பிக்கிற பிரதான கதை!

இன்னொரு டிராக்கில் பத்திரிகையாளர் கம் இசை

டைட்டில் மாதிரியே படமும் இருக்கும் என்று நம்பிப் போனால் 'நாங்கள் பொறுப்பல்ல' என்றுதான் 'வார்னிங்' தர வேண்டியிருக்கிறது.

திருமணம் என்றாலே அலர்ஜியாக அலறும் சத்யராஜ் கோஷ்டி, ஒரு குழந்தையை வீட்டில் வளர்க்கப்போய், கடைசியில் கல்யாணம் ஒகே என்பதுதான் கதை. "அடடே... விஷயம் புதுசா இருக்கே" என்று நிமிர்ந்து உட்கார்ந்தால், கண்மண் தெரியாமல், இஷ்டத்திற்கு மசாலாவைத் தூவி, அது அடிபிடித்து ஒரே கருகல் நெடி. கடவுளே எப்போது வணக்கம் போடுவார்கள் என்று ஏங்க வைத்துவிட்டது சொதப்பல்; சாரி... அசத்தல்.

வழக்கமான கோணங்கி சத்யராஜ். சரி வடிவேலுவும், ரமேஷ்கண்ணாவும் சிரிக்க வைத்துவிடுவார்கள் என்று நம்பிக் கொண்டிருந்தால் அதிலும் இடி... காரணம் அறுவை நகைச் சுவைகளில் அவர்களுக்கே சிரிப்பு வரவில்லை.

நாயகி ரம்யா கிருஷ்ணன் பாத்திரத்தில் இருந்த அழுத்தம், பலவீனமான திரைக்கதையால் தொபுக்கடீர் என்று கீழே விழுந்துவிடுகிறது.

சத்யராஜ் மனத்தை மாற்ற மணிவண்ணன் பெரிதாக எந்தத் திட்டமும் போடாததால் அவரது கேரக்டரும் அவுட்.

பாவம்... ரமணி பரத்வாஜுக்கு என்ன ஆயிற்றோ தெரியவில்லை. பாடல்கள்

சொன்னால்தான் காதலா

யமைப்பாளர் டி.ஆர். தமது தங்கை சுவாதி மேல் காட்டும் பாசம். இவற்றுக்கு இடையில் படத்தோடு தொடர்பு இருப்பது போல தெரிந்தாலும் வலிய திணிக்கப்பட்ட விஷயங்களை ஒரு பட்டியலே போடலாம். இந்தப் பட்டியலில் மூச்சுத் திணறிப் படுத்து விடுவது முரளி - ரோஜாவின் நடிப்பு மட்டு மல்ல, அவர்களின் காதலும்தான்.

ஒவ்வொரு பிரேமிலும், கும்பல் கும்பலாக நடிகர்களைக் காட்டும் இயக்குனர், காட்சி களை நம்பாமல் வெறும் வசனங்களை வைத்தே நகர்த்துவதால் அடிக்கடி நாடக வாடை.

ஓவர் ஆக்டிங் நிபுணர் கரணின் நடிப்பு வெறிக்குத் தீனி போடுவது போல வெயிட் டான கேரக்டர். அம்மா, தங்கையின் உசுப் பேத்தலில் ஆத்திரப்பட்டு, மனைவியை அடித்துக் கொன்றுவிட்டுப் பிறகு, 'அய்யய்யோ... தப்புப் பண்ணிட்டேனே' என்று கதறும்போது மிரட்டல்.

வடிவேலுவின் குடிப் பழக்கத்தை முடிவுக்குக் கொண்டு வர, கோவை சரளா கொடுக்கும் அதிரடி ட்ரீட்மெண்ட் இருந் தாலும் நடுங்க வைக்கிறது.

தமது நடிப்புப் பாணியை வழக்கமாக மற்ற பாத்திரங்கள் மீது திணித்து விடும் இயக்குனர், அந்தத் தவறைச் செய்யாமல் இந்த முறை தவிர்த்திருப்பது பெரிய ஆச்சர்யம்.

வழக்கம்போல் இசையில் தனி ஆவர்த்தனம் என்றாலும் எம்டிவி வாசனை ஆங்காங்கே அடிக்கிறது.

ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம் மாதிரி, சிலம்பரசனின் மின்னல் வேக நடனமும், குறளரசனின் மனத்தைத் தொடும் நடிப்பும் அடிஷனல் டச்.

அரைகுறையாய் உடுத்தி, அசைவமாய் சிரித்து, அவ்வப்போது தலை காட்டும் மும்தாஜ் ஏன்? எதற்கு? எப்படி? எதனால்? என்பது மட்டும் புரியவேயில்லை.

● ஆவரெஜ்



ஒன்று கூடத் தேரவில்லை.

'தூவல் பரிசம்' மலையாளப் படத்தை அப்படியே ரீமேக் செய்திருந்தால்கூட இயக்குனர் வாசுவை வாய்விட்டுப் பாராட்டி யிருக்கலாம்.


● ஆவரெஜ்

தேன்கூடு

'பால்' டிக்ஸ்!

'எருமைப் பால் குடிக்காதே. மந்தி ஆயிடுவே' என்று சொல்வார்கள் சிலர்; எருமைத் தயிர் சாப்பிட்டால் நிறையத் தூக்கம் வரும் என்றும் சொல்வார்கள்! சில மருத்துவர்கள் தினமும் ஒரு டம்ளர் பசும்பால் குடிக்கச் சொல்வார்கள். இது ஏன்?

தாவரத் திசுக்களில் வைட்டமின் 'ஏ' யின் முன்னோடியானக் 'கரோட்டின்' என்ற நிறமிச் சத்துக்கள் காணப்படுகிறது. இது தனிப்பட்ட வகைகளில் வைட்டமின் 'ஏ'வாக கிடைப்பதில்லை. 'கரோட்டீன்' என்ற நிறமிச் சத்தாகக் கிடைக்கிறது. இது மனித உடலில் புகுந்தவுடன் வைட்டமின்




'ஏ'வாக மாற்றப்படுகிறது. இதை புரோ-வைட்டமின் என்றும் சொல்வார்கள். வைட்டமின் 'ஏ' பற்றாக்குறையினால் கண் சம்பந்தப்பட்ட வியாதி வரும். மேலும் இது குறைந்தால் மாலைக்கண் நோய் வரும். பொதுவாக இவ் வைட்டமின் கண்ணுக்கு மிகவும் நல்லது.

மற்ற வைட்டமின்போல தொற்றுநோய் எதிர்ப்புத் திறன் கொண்டது. உயர்ந்த வெப்ப நிலையிலும் நிலைத்து நிற்கக் கூடியது. பால் - தயிர் - வெண்ணெய் - நெய், மீன், முட்டை - மஞ்சள், இவற்றில் அதிக அளவு காணப்படுகிறது.

பச்சைக் காய்கறிகள், மஞ்சளான பழங்கள், முருங்கை, புதினா, முளைக் கீரைகள், கொத்தமல்லி இவற்றில் அதிக அளவு உள்ளது. இது சிறு நீர் மூலம் வெளியேறாது. கல்லீரலில் சேமிக்கப்படுகிறது.

வைட்டமின் 'ஏ'யும் தாவரங்கள் மூலம்




முதன் முதலாக சுசீந்திரம் கோயிலைக் கட்டி முடிக்க ஐம்பதாயிரம் ரூபாய் தேவைப் பட்டது. அதைப் பொது மக்களிடம் வசூலிக்க முதன் முதலாக லாட்டரி சீட்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கான பொறுப்பு அப்போதைய சுசீந்திரம் மடத்தின் ஸ்தாபகர் பரமேஸ்வர சர்மாவிடம்

மிகப் பெரிய நூல்

உலகத்திலேயே மிகப் பெரிய நூல் "தென்னாட்டின் கதை" என்ற அமெரிக்க நூலாகும். இது 1925ம் ஆண்டில் வெளியானது. இதன் உயரம் 6 அடி 10 அங்குலம். அகலம் 9 அடி 2 அங்குலம். கனம் ஒரு அடி. இந்த நூலின் மேலட்டை மாட்டுத் தோலால் ஆனது. ஒரு முழு மாட்டின் தோலே இதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த நூலை ஒரு தனி நபரால் தூக்கிச் செல்ல முடியாது.

- பி. ருக்மணி, சிதம்பரம்.



ஒப்படைக்கப்பட்டது. பெயிண்ட் அறிமுகம் இல்லாத அக்காலகட்டத்தில், கோபுரத்தின் எழிலை அதிகரிக்க, நீலி, அவரை இலை, வேப்பிலை, மஞ்சள், சுண்ணாம்பு, செம்பருத்தி இலை உமிக்கரி, முட்டைக்கறி ஆகியவற்றை உபயோகித்து விதவிதமான நிறங்களில் தற்போதுள்ள ஓவியக் கலையையும் மிஞ்சுமளவு படங்கள் வரையப்பட்டன. இயற்கையின் மாறுதலுக்கு உட்பட்டு, அதற்கு ஈடும் கொடுத்து 450 ஆண்டுகள் எவ்வித மாற்றமும் இல்லாமல் காண்போரை வியக்க வைக்கும் விதமாக இந்த ராஜகோபுரம் உள்ளது.

- யோகானந்தம்,
ஔவையார்பாளையம்.

கிடைக்கும் கரோட்டின் சத்தும் பால் சுரப்பிக்குச் சென்று அங்கிருந்து பால் மூலம் வெளியேறுகிறது. ஆகவே தான் குழந்தைக்கு (பசுவின் கன்றுக்கும் கூட) மறக்காமல் சீம்பால் தரச் சொல்லுகிறார்கள்.

எருமைப் பாலில், மாட்டுப் பாலில் உள்ளது போல அதிக அளவு வைட்டமின் 'ஏ', கரோட்டின் மிகுதியாக இல்லை. இதைத் தவிர வேறு பெரும் வித்தியாசம் எருமைப் பாலுக்கும், மாட்டுப் பாலுக்கும் கிடையாது.

- பி. தங்கவேல்,
கோவை-6

நவபிருந்தாவனம்

கன்னட ராவ் பரம்பரையைச் சேர்ந்த தீர்தருக்கள் (சுவாமிகள்) ஒன்பது பேர் 1670வது வருடம் உயிருடன் சமாதியான "நவ பிருந்தாவனம்" நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் காவிரிக்கரையில் உள்ளது. ஸ்ரீமத்வாச்சாரியாரை குருவாகக் கொண்ட இந்த நவ பிருந்தாவனத்திற்கு ஒரு காலத்தில் 60 கிராமங்கள் சொந்தமாக இருந்தன. வெவ்வேறு கால கட்டங்களில் இதன் மூதாதையர்கள் விற்று விட்டார்கள். இப்பொழுது இருப்பவை இந்த நவ பிருந்தாவன கோயிலும் கொஞ்சம் இடமும்தான். இதில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய முக்கிய அம்சங்கள் இரண்டு உண்டு. ஒன்று - ஸ்ரீசுவாமி ராகவேந்திரர் இவர்கள் வரிசையில் வந்தவர்.

இரண்டு : இக்கோயிலில் அமர்ந்து மனத்தை ஒரு நிலைப்படுத்தி தியானம் செய்யும்போது நவபிருந்தா வனத்தின் "வைப்ரேஷனை" தெளிவாக உணரலாம்.

- பள்ளி பாளையம்,
ரஞ்சனிப்ரியன்









வெள்ளிக்கிழமை விருந்து!

மாலை மணி 5.30. ஐந்து தொழிலாளர்களின் குடும்பங்களை அள்ளிப் போட்டுக் கொண்டு சீறிப் பாய்கின்றன கார்கள். கார்களின் ஹாரன் ஒலி கேட்டு அந்த நூற்பாலையின் வாயில் கதவுகள் வேகமாகத் திறக்கப்படுகின்றன.

மாலை 5.45. வரிசையாகப் போடப்பட்டுள்ள சேர்களில் பவ்யமாய் ஐந்து தொழிலாளர்களின் குடும்பங்கள் அமர்கின்றன. எதிரில் எளிமையான ஒரு பெரிய மனிதரும் அவரது மனைவியும்!

"சொல்லுங்க... உங்க வீடுகள்ல என்னென்ன பிரச்னை... புள்ளைங்க என்ன படிக்கிறாங்க... செலவுகள்லாம் எப்படியிருக்கு? வெளியில் கடன்கள் எவ்வளவு வாங்கியிருக்கீங்க?"

பெரியவர் அமைதியாய்க் கேட்க, அங்கே ஒரு கலந்துரையாடல். தொழிலாளர்களின் பிரச்னைகள் தீர ஒரு வழி பிறக்கிறது.

ஏழு மணி. அருகில் இருக்கும் கோயிலில் அனைவரும் ஆஜர். இரண்டு பெரிய ஐந்து முக குத்துவிளக்கில் ஐந்து தொழிலாளர் குடும்பங்களும் ஒவ்வொரு முகமாகத் தீபம் ஏற்ற, ஒரு சின்ன பிரார்த்தனை. பிறகு பதினைந்து கிராம் எடையுள்ள வெள்ளி டாலர் அணிவிக்கப்படுகிறது ஒவ்வொரு தொழிலாளருக்கும்.

இரவு 7.45.

அனைவரும் டைனிங் டேபிளில் அமர, மூக்கைத் துளைக்கும் வாசனையுடன் ஹைகிளாஸ் உணவு பரிமாறப்படுகிறது. சாப்பாடு முடிந்ததும் மனநிறைவுடன் தொழிலாளர்களோடு குரூப் ஃபோட்டோ.

- அட இதெல்லாம் எங்கே நடக்கிறது?... என்றுதானே கேட்கிறீர்கள்?

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை ஸ்ரீராமலிங்கா நூற்பாலையில்தான் இதெல்லாம்.

ஒவ்வொரு வாரமும் ஆலைத் தொழிலாளர்களில் ஐந்து பேரை அழைத்து இப்படி சகஜமாகப் பேசி அவர்களின் பிரச்னைக்குத் தீர்வு ஏற்படுத்தும் இந்த நிகழ்ச்சிக்கு

'வெள்ளிக் கிழமை விருந்து' என்று பெயரும் வைத்திருக்கிறார் இவ்வாலையின் உரிமையாளர் டி.ஆர். தினகரன்.

"இந்த நூற்பாலையை 1965ல் ஆரம்பித்தேன். ராஜபாளையத்துல நல்லா ஓடிட்டிருந்த ஒரு நூற்பாலை 67-68ல் திடீரென்று தொழிலாளர் பிரச்னையால் மூடப்பட்டது.

"எங்க தொழிற்சாலையிலே முதலாளி தொழிலாளி உறவு நல்லா இருக்கணும்னு நினைச்சேன்.

"என் மனைவி நிர்மலா, சுமங்கலிப் பெண்களை ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் வரவழைச்சு மஞ்சளும் பூவும் கொடுத்திட்டிருந்தாங்க. அதோட, தொழிலாளர்களைச் சந்திக்கறதையும் அதே கிழமைல வச்சா நல்லதுன்னு எண்ணினேன். இதுக்கு வெள்ளிக் கிழமை விருந்துன்னு பெயர் வைச்சேன். இருபத்தியாறு வருஷமா இது நடந்துட்டிருக்கு.

"நான் எந்த அரசியல் கட்சியையும் சாராதவன். ஆனால் காந்தியக் கொள்கையில் ரொம்ப ஈடுபாடு உண்டு. அதைத்தான் பின்பற்றுகிறேன். ஆலை ஆரம்பிச்சு இருபத்தி ஆறு வருஷத்துல ஒருத்தருக்குக் கூட மெமோ கொடுத்ததில்லை. யாரையும் சஸ்பெண்ட் செய்ததில்லை. ஒரு தொழிலாளி தப்பு பண்ணினார்னா அதை அவரை ஒப்புக் கொள்ள வைக்க வேண்டும். அவரைத் திருத்த வேண்டும். இதுதான் காந்தி வழி" என்று சொல்லும் தினகரன், ஆலையின் வளர்ச்சிக்கும், தமக்கும் ஆலோசனைகள் வழங்கிய, மறைந்த தமது நண்பர்களைப் புகைப்படமாக்கி ஆலையின் விருந்தினர் அறையில் மாட்டி வைத்திருக்கிறார்.



• தினகரன்



• வெள்ளி டாலருடன் தொழிலாளர்கள்

தொழிலாளர்கள் சிலரைச் சந்தித்தோம்.

"இங்க முதலாளி, தொழிலாளி பாகுபாடு கிடையாதுங்க. கூட்டுக் குடும்பம் மாதிரிதான். முதலாளியே ஒரு சேமிப்புப் பிரிவு வச்சிருக்காங்க. வெளியில வட்டிக்குக் கடன் வாங்காம இருக்க இந்த ஏற்பாடு. நான் பெருமைக்காகச் சொல்லலைங்க. எங்க முதலாளி எந்தக் குறையுமில்லாம பாத்துக்கறாரு; இதைவிட தொழிலாளிக்கு வேறென்ன வேணும்?" என்கிறார் இங்கு வேலை செய்யும் சீனிவாசன்.

"இங்க வேலை பார்க்கறவங்க வேலையை விட்டுட்டு வெளியே போய், அப்புறம் ரொம்பக் கஷ்டப்பட்டுத் திரும்பவும் இங்கேயே வேலைக்கு வருவாங்க. அவங்களை எந்தவித மனக்கஷ்டமுமில்லாம வேலைக்குச் சேர்த்துக்குவாரு எங்க முதலாளி. அவங்க வேலையை விட்டுப் போகும்போது என்ன சம்பளம் வாங்கினாங்களோ அதே சம்பளத்தைக் கொடுப்பார். வேற எங்கயாவது இப்படி பார்க்க முடியுமா?" என்கிறார் வெங்கட்ராமன்.

இந்த வெள்ளிக்கிழமை விருந்தில் திருமணமாகாதவர்களுக்குத் தடா! திருமணமாகி குடும்பம் வரும்வரை வெயிட்டிங் லிஸ்ட்தான்!

— கி. சிங்காரவடிவேல்

பித்ர்களுக்கு சிராத்தம் ஏன்? அவசியம் செய்ய வேண்டும்



சிராத்தம் போன்ற சடங்குகள் உண்மையில் பிராண ஜீவனுக்காகவே செய்யப்படுகின்றன, ஜீவனுடைய பிராண அதிர்வுகள் அதைப் பிராண லோகங்களுடன் அல்லது பூலோகத்துடன் தளைப்படுத்துகின்றன. அந்த அதிர்வுகளை நீக்குவதற்கு இந்த சடங்குகள் ஜீவனுக்கு உதவுகின்றன. இதனால் ஜீவன் சைத்திய சாந்தத்தில் ஓய்வெடுக்க விரைவாகச் செல்வது இயலும்.

—ஆதாரம் வைகறை 1991-92



இத்துடன் கிராண்ட் ஸ்வீட்ஸ் வாங்கி நல்லோர்களுக்கு விநியோகம் செய்யவும்.

திருமண வைபவங்களுக்கு:

சீர் முறுக்கு, சீர் அதிரசம், திரட்டுப் பால், முள்ளு தேன்குழல், பருப்புத் தேங்காய், அப்பம் வகைகள் முதலியவைச் செய்துத் தரப்படும்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

நெ. 24, 2வது
மெயின் ரோடு
காந்தி நகர்
அடையாறு
சென்னை - 20
போன்: 4915662
4914213

"ஆரத்திப் பணத்தை மறுத்தார்கள்!"

வெறும் இரண்டாயிரத்துச் சொச்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்திருக்கிறார் திருவாடானைத் தொகுதி சுயேச்சை வேட்பாளரான ஜோன்ஸ் ரூசோ!

மூன்றாண்டுகளுக்கு முன்பு படுகொலை செய்யப்பட்ட சிவகங்கை மாவட்ட தி.மு.க இளைஞரணித் தலைவர் ரூசோவின் மனைவிதான் இந்த ஜோன்ஸ்!

தேர்தல் முடிந்து அ.தி.மு.க ஆட்சி பீடத்தில் ஏறிய பின்பு, ஒரு மாலைப் பொழுதில் மனம் திறந்து பேசினார் ஜோன்ஸ்.



• பிரசாரத்தின்போது மகளுடன் ஜோன்ஸ்

"என் கணவர் கொலை செய்யப்பட்டு இன்றோடு (மே.25) 930 நாட்கள் ஆச்சு. அவர் உடலைப் பார்க்க சென்னையிலிருந்து வந்த என் அம்மாவும், மூத்த மகளும் அன்றைக்கே கார் விபத்துல இறந்துட்டாங்க. ஒரே நேரத்துல மூன்று பேரையும் பலி கொடுத்த துக்கம். இந்த நிலையில என் கணவர் கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டவங்க எல்லாரும் ஜாமீன்ல வெளியில வந்து, ''எங்கிட்ட யாராவது வாலாட்டினா ரூசோவுக்கு ஏற்பட்ட கதிதான் ஏற்படும்னு மிரட்டியிருக்காங்க. இதையெல்லாம் பொறுத்துக்கிட்டு நாம ஏன் அடங்கி வாழணும்னு தோன்ற ஆரம்பிச்சது. எனக்காக நீதி கேட்டுப் போராடிய மனித உரிமைகள் கூட்டமைப்பினர் என்னைத் தேர்தலில் போட்டியிடச் சொன்னாங்க. முதலில் எனக்கு விருப்பமில்லை. அப்புறம், ஏன் போட்டியிடக் கூடாதுன்னு யோசிச்சேன். தி.மு.கவில சீட் கேட்டேன். தரலை. சுயேச்சையா நின்னேன்.

"எனக்காக வேலை பார்த்தவங்களை மிரட்டினாங்க ஃபோன்லயும் நேர்லயும். அதையெல்லாம் மீறிதான் பல பேர் எனக்குத் தேர்தல் வேலை செஞ்சாங்க.

"தேர்தல் பிரசாரத்தப்போ பெண்கள் மத்தியில் எனக்கு நல்ல வரவேற்பு. என்னோட குழந்தைகள் நிக்பி, நிஷாந்த் இரண்டு பேரும் தேர்தல் பிரசாரம் பண்ணினாங்க.

"மறவமங்கலம்னு ஒரு ஊர்ல ஆரத்தி எடுத்தவங்களுக்குப் பணம் கொடுத்தேன். வாங்க மறுத்துட்டாங்க. ஏன்னு கேட்டப்போ அந்தப் பெண்ணோட குழந்தை உடல் நலமில்லாம இருந்த நேரம் என் கணவர்தான் மருத்துவ உதவி செஞ்சார்னு தெரிந்தது. நெகிழ்ந்து போயிட்டேன். இது மாதிரி நிறைய அனுபவங்கள்.

"ஒரு கட்சியோட கூட்டணி வேட்பாளர் என்னை வாபஸ் பெறச் சொன்னார். மறுத்துட்டேன்.

"இந்தத் தேர்தல்ல எனக்குத் தோல்வியில்லை. வெற்றிதான். உயிரைக் கொடுத்துத் தேர்தல் பிரசாரம் செய்தோம். ''சுயேச்சை வேட்பாளர் ஜெயிச்சா எதுவும் செய்ய முடியாது. அந்தம்மா சென்னைக்குப் போயிடுவாங்க. தொகுதிப் பக்கம் வர மாட்டாங்க''ன்னு சொல்லி எதிர்க்கட்சிக்காரங்க பிரசாரம் பண்ணினாங்க; அதையெல்லாம் பொருட்படுத்தாமல்தான் மக்கள் எதிர்பார்ப்புகளோட எனக்கு வாக்களிச்சிருக்காங்க. வரும் உள்ளாட்சித் தேர்தல்ல கட்சி சார்பா இல்லாம தனி ஆளா நின்னு ஜெயிச்சு மக்களுக்காகப் பாடுபடப் போறேன்."

— முருகு

9

டாக்டர் மாகியின் கணவர் இரு நாட்களுக்கு முன் இறந்திருக்கிறார்! அடிவயிற்றிலிருந்து ஒரு கலக்கம் தோன்றி சிவப்ரியாவின் உடல் முழுவதும் ஆட்டுவித்தது.

இப்போதுதான் டாக்டர் மாகியையே நேரில் முதன் முறையாகப் பார்க்கிறாள் என்றிருக்க, அவள் கணவர் குறித்த எந்தக் குறிப்பான எண்ணமும் சிவப்ரியாவுக்கு இல்லை. எனினும் மருத்துவத் தகவல்களே எல்லையற்று அடைத்துக் கொண்ட அவர்களது தகவல் தொடர்புக்கு நடுவே என் அன்புக் கணவர் உன்னை விசாரித்தார்'. 'என்





ஆனந்தத்தின் அடிப்படைக் காரணமான என் துணைவர் உனக்குத் தமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கச் சொன்னார்' என்பது போன்று எட்டிப் பார்க்கும் ஓரிரு வாக்கியங்களே அவர்களது இனிமையான இல்லறத்தை உணர்த்த போதுமானதாக இருந்தது.

கலக்கத்தைத் தொடர்ந்து எல்லையில்லா வியப்பும் உண்டானது. எத்தகைய இழப்பு! இப்போது பார்க்கும்போது முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க மாகியின் கண்களில் விவரிக்கவே இயலாத சோகச் சுமை தெளிவாகவே புலப்பட்டது. ஆனாலும் இத்துடன் நாளை ஒரு மருத்துவக் கருத்தரங் கத்தில் கலந்து கொள்ளப் போவதாக அறி விக்கிறாள்!

வார்த்தைகளால் காட்ட முடியாத சிவப்ரியாவின் உணர்வுகளை அவன் கண்களிலிருந்து வழிந்த நீர் அடிக் கோடிட்டுக் காட்டியது.

'ஐயையோ மேடம் அழறாங்களே' என்று சில யூனிட்காரர்களின் குரல்கள் கிசுகிசுப்பாக ஒலித்தன. மனிதாபிமானம் எந்தத்துறையிலுமே உண்டு என்றாலும் அப்போதைய மனநிலை யில் 'இவர்கள் வருத்தப்படுவது தமது கண்ணீருக்காகவா அல்லது அந்தக் கண்ணீர் முக ஒப்பனையை சற்றே கலைத்து புகைப் படச் கருவுக்குள் அவர்கள் எதிர்பார்க்கும் தன் அழகைப் பதிவு செய்ய முடியாதோ என்ற சுயநலத்தாலா?' என்ற எண்ணம் தோன்றியது.

'ரிலாக்ஸ் ப்ரியா' என்று மாகி அவளது தோளைத்தட்ட, 'எப்படி?' என்ற ஒற்றை வார்த்தையைத்தான் உதிர்க்க முடிந்தது சிவப்ரியாவால்.

எப்படி இறந்தார் உங்கள் கணவர் என்

மனம், மனிதம்
திவல்



பதைத்தான் அவன் அந்த வார்த்தையின் மூலம் வெளிப்படுத்த விரும்பினாள். ஆனால் 'எப்படி உங்களால் இப்படியொரு இடிக்குப் பிறகும் இயல்பாக இருக்க முடிகிறது?' என்று அவள் கேட்பதாகப் புரிந்துகொண்டாள் மாகி.

'எங்கள் முன்னாள் பிரதமருக்கும் என் பெயர்தான். மார்கரெட். அவரை இரும்புப் பெண்மணி என்பார்கள். நானும்தான். என் கணவரை அழைத்துக் கொண்டதற்காக ஜீசஸை நிந்திக்க மாட்டேன். அப்படியொரு மனிதரை என் வாழ்வில் இணைத்ததற்காக அவருக்கு நன்றி கூறுவதுதான் நியாயம். அது சரி, இனி என்ன செய்வதாக இருக்கிறாய்? இன்னும் சில திரைப்படங்களில் நடித்து விட்டுப் பிறகு டாக்டர் தொழிலைத் தொடரப்

அருண் சரண்யா

போகிறாயா? தப்பாக நினைத்துக் கொள்ள வில்லையென்றால் ஒரேயொரு ஆலோசனை. நடிப்பு, மருத்துவம் இரண்டையும் ஒரே சமயத்தில் செய்யாதே."

சிவப்ரியாவின் மனம் நிறைந்திருந்தது. எந்த ஒரு அந்தரங்கத் தலையீடோ அனாவசிய ஆவலோ இல்லாமல் அன்பான ஆலோசனையைக் கூறுவதும் இவ்வளவு இயல்பாக இருப்பதும் கூட சாத்தியமா!

"கவலைப்படாதீர்கள் டாக்டர் மாகி. நடிப்பு முடிந்தவுடன் நான் டாக்டராகப் பணிபுரிவேன். அது இருக்கட்டும். நாளைக்குக் கருத்தரங்கில் எதைப் பற்றி நீங்கள் பேசப் போகிறீர்கள்?"

"மிகவும் சுவையான தலைப்புதான் ப்ரியா. மின்னஸோடா இரட்டையர் ஆராய்ச்சிப் பற்றி உனக்குத் தெரிந்திருக்கும். அதையே இன்னும் கொஞ்சம் ஆழமாகத் தொடப் போகிறேன்."

சிவப்ரியாவை ஏற்கெனவே பெரிதும் கவர்ந்த ஆராய்ச்சிகளில் ஒன்றுதான் இதுவும். இரட்டைக் குழந்தைகள் இருவிதங்களில் உருவாகலாம். ஒரே சினை முட்டைக்குள் இரண்டு ஆண் உயிரணுக்கள் ஒரே கணத்தில் நுழைந்து கருத்தரிப்பதால் இருக்கலாம். அல்லது இரண்டு சினை முட்டைகள் ஒரே கணத்தில் கருத்தரிப்பதாலும் இருக்கலாம். இந்த இரு வகைகளிலும் பிறந்த இரட்டைக் குழந்தைகளுக்கிடையே குறிப்பிடத்தக்க ஒற்றுமை மற்றும் வேற்றுமை உண்டா? குறிப்பாக அறிவாற்றலில் இந்த இருவகை இரட்டையர்களுக்கு நடுவே கணிசமான ஏற்றத்தாழ்வு உண்டா என்பது குறித்த ஆராய்ச்சி அது.

"என்ன முடிவுக்கு வந்திருக்கிறீர்கள் டாக்டர் மாகி?"

"ஒரே சூழலில் வளரும் இரட்டையர்களுக்கிடையே பெரும்பாலும் ஒரே மாதிரி குணநலன்கள் இருக்க வாய்ப்பு அதிகம். ஆனால் அந்த இருவரும் தனித்தனியான வித்தியாசமான சூழலில் வளர்ந்தால் அவர்கள் குணநலன்கள் மாறுபடுமா? என்பதுதான் என் ஆராய்ச்சி. இது குறித்து உனக்கு ஏதாவது கருத்து இருக்கிறதா?"

"முதலில் எங்கள் இந்தியத் திரை உலக ஆராய்ச்சியின் முடிவைச் சொல்லிவிடுகிறேன். தனியாக வளரும் இரட்டையர்கள் மிகவும் நேரெதிரான குணங்கள் கொண்டவர்களாகத்தான் இருப்பார்கள். ஒருவன் கோழையென்றால் மற்றவன் வீரன். ஒருவன் உத்தமன் என்றால் மற்றவன் தீயவன். ஒருவன் ஏகபத்தினி விரதனென்றால் மற்றவன் பெண் பித்தன்."

டாக்டர் மாகி தாம் கூறுவதை உன்னிப்பாகக் கேட்பதை அறிந்ததும் தவறான செய்தியைத் தான் அவன் மனத்தில் பதிய வைத்துவிட்டோமோ? என்ற பதற்றம் ஏற்பட்டது சிவப்ரியாவுக்கு.

"ஹீரோக்களின் இமேஜுக்காகவும், கதைச் சுவைக்காகவும் அப்படி வைப்பது எங்கள் சினிமாவில் வழக்கம். மற்றபடி பெரிய ஆராய்ச்சியின் விளைவு இது என்று நினைத்துக் கொள்ள வேண்டாம். இப்போது உங்கள் ஆராய்ச்சி தொடர்பான வேறொரு மிக சீரியஸான தகவலை உங்களுக்குச் சொல்லப் போகிறேன்."

"ஷாட் ரெடி மேடம்' என்றது ஒரு



"என்னதான் கபாலிகிட்ட நாம கை நீட்டி மாமூல் வாங்கினாலும், அவன் இவ்வளவு உரிமை எடுத்துக்கக் கூடாது?"

"ஏன், என்ன ஆச்சு?"

"அவன் பொண்ணு கல்யாணத்துக்கு மாப்பிள்ளை ஊர்வலத்துக்காகப் போலீஸ் ஜீப்பை இரவல் கேட்கிறானே..."

– ஜெ. சற்குணன்

குரல். மரியாதை தெரிந்த அந்த உதவி இயக்குனர் டாக்டர் மாகியைப் பார்த்து 'மன்னிக்கவும். உங்கள் பேச்சுக்கு இடையூறு செய்கிறோம்' என்றார்.

டாக்டர் மாகி அதை மறுக்கும் விதமாகத் தலையசைத்து "இதில் தவறாக எடுத்துக் கொள்ள எதுவும் இல்லை. சொல்லப் போனால் உங்கள் படப்பிடிப்புக்கு நான்தான் இடையூறு" என்றாள். பின் சிவப்ரியாவை நோக்கி "நான் சிறிது காத்திருக்கிறேன் ப்ரியா. உன் ஷாட்டை முடித்துவிட்டுவா. ரொம்ப முக்கியமான இடத்தில் பேச்சை நிறுத்தியிருக்கிறாய். அதனால் என்னால் எப்படியும் நகர முடியாது" என்றாள் சற்றே நகைச்சுவையுடன்.

பிரிட்டிஷ் ராணுவத்தை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்ற தளபதி நெல்சனின் சிலையில் பதிந்த புகைப்படக் கருவி சீரான வேகத்தில் இறங்கி சிவப்ரியாவின் மீது பதிந்தது.

மிகவும் பிஸியான அந்த ட்ரஃபால்கர் சதுக்கத்தில் நிறம்பட இயங்கியது திரைப்படக் குழு. தனிப்பட்ட முறையில் இயக்குனர் வேணு குறித்து உயர்ந்த கருத்து இல்லையென்றாலும் அவனது தொழில் திறமையை அவள் மனத்துக்குள் பாராட்டவே செய்தாள்.

காட்சி எடுக்கப்பட்டதும் வேணு, சிவப்ரியாவிடம் கிசுகிசுத்தான். "உங்க தோழி லண்டன்வாசிதானே. வேற ஏதாவது நல்ல லொகேஷன் இங்கே இருக்குதான்னு கேளுங்களேன்."

கேட்டவுடன் டாக்டர் மாகி சிரித்தாள். "ஒரு வேடிக்கை தெரியுமா ப்ரியா? இங்கே யாரும் தன்னை லண்டன்வாசின்னு நினைப்பதில்லை. செல்ஸியாவாசி, ஸோஹோவாசி, ஹாம்ப்ஸ்டெட்வாசி இப்படி லண்டனில் தாங்கள் வசிக்கும் தனிப்பட்ட பகுதிகளைத்தான் மனசிலே வச்சிப்பாங்க. ஸோஹோவிலே நிறைய வித்தியாசமான ரெஸ்டாரன்ட்டுகள் இருக்கு. கலைப் படைப்புகளைப் படம் பிடிக்கணும்னா ஹாம்ஸ்டெட் போகலாம்" என்ற மாகி, தனது கைக்கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டாள். "சஸ்பென்ஸை சீக்கிரம் கலைத்துவிடு ப்ரியா. அகதா கிறிஸ்டியையே மிஞ்சிடுவே போலிருக்கே." "நான் அடிக்கடிக் குறிப்பிடுவேனே எங்கள் சீஃப் டாக்டர் ராம்ஷேகர்; அவரும் இந்த விஷயத்திலே கொஞ்சம் ஆராய்ச்சி



"புது வேலைக்காரி விஷயத்தில் கொஞ்சம் ஜாக்கிரதையா இரு..."

"எதனால சொல்றீங்க...?"

"இதற்கு முன் வேலை பார்த்த இடத்தில் ஐஎஸ்ஓ சர்டிபிகேட் வாங்கி இருக்கேன் என்கிறாளே!"

— எஸ். மோகன்

செய்திருக்கிறார். மொத்தம் இருபது ஜோடி இரட்டையர்களைக் கண்காணித்தார் இதற்காக." தொடர்ந்து அது குறித்துச் சிவப்ரியா பேசப்பேச, டாக்டர் மாகியின் சுவாரஸ்யம் கூடிக்கொண்டே போனது.

"டாக்டர் ராம்ஷேகர் என்னுடன் தகவல் தொடர்பு வைத்துக் கொள்ள விருப்பப்படுவாரா?" என்று மாகி கேட்க, "இந்தியா போனதும் நான் அதற்கு நிச்சயம் முயற்சிக்கிறேன்" என்று உறுதியளித்தாள் சிவப்ரியா.

மேலும் சில நிமிடங்கள் பேசியபிறகு டாக்டர் மாகி கிளம்பினாள். கிளம்பும்போது "ஒரு வேடிக்கைத் தெரியுமா ப்ரியா. எங்களுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறக்கணும்னு என் கணவர் ரொம்ப ஆசைப்பட்டார். கடைசியிலே அவருக்கு மலர்வளையம் வைக்க ஒரு குழந்தை கூட இல்லாமல் போய்விட்டது. சரி இருக்கட்டும். கடவுளின் ஒவ்வொரு செயலுக்கும் ஒரு காரணம் இருக்கும்."

அழுத்தமாகக் கைகுலுக்கிவிட்டு டாக்டர் மாகி நகர, தனது வருங்கால வாழ்வில் இவள் ஏதோ ஒரு விதத்தில் ரோல்மாடலாக இருக்கப் போகிறாள் என்றது சிவப்ரியாவின் உள்ளுணர்வு.

(தொடரும்)

தாத்தா அற்ற பகல்

ஓடி ஆடும் ஆட்டத்தில்
ஆடாத நாற்காலியில் அமர்ந்தவாறு
பந்து உருட்டி அவுட் கொடுக்கும்
தாத்தா இல்லை.

அவரின் அனுமதி பெற்றே
இடவலமாய் மிகப் பெரிதாய்
சுவரெங்கும் ஓடிய பென்சில்
கிறுக்கல்கள்
தனித்துவிடப்பட்டுள்ளன.

அடிப்பது போல அடித்தும்
ஏசுவது போல ஏசாமலிருந்தும்
வார்த்தை வீசிய அவரின் பொய்க்
கோபத்தைக்
கேளாத காதுமடல்கள்
பள்ளிக்கூடத்தில் தனியே வருந்தும்.

ஆதரவாய் அருகே படுத்து தலைநீவி
இருமல் எண்ணிக்கையுடன்
குறும்புகளை எண்ணிக்காட்டும்
தாத்தாவின் குரல்
பேருந்தில் சன்னலோரத்தில்
விடைபெற்ற தினத்தில்
ஏன் கம்மிற்று?

அம்மாவின் புடைவை நுனியோரம்
நின்று
தாத்தா வரமாட்டாரா? எனக் கேட்டதற்கு
இனி இல்லை என்கிறாள்.

தாத்தா அற்ற பகலும் சுவரும்
குடும்பமும்
அம்மா அப்பாவுக்கு
எப்படி சாதாரணமாய்த் தோன்றுகிறது?
எனக்குப் புரியவேயில்லை.

— பா. சத்திய மோகன்



ஓவியம்: பி.ஆர். ராஜன்

நரிக்குறவர்களின் கனவுக் குறிப்புகள்!

கடந்த நான்கு வருடங்களாக நரிக்குறவர்களோடு வட்டமடித்துக் கொண்டிருக்கிறார் அயாகோ இவதானி! அவர்களோடயே தங்கி, சாப்பிட்டு (ஊசி பாசி மட்டும் விற்கவில்லை!) பொழுதைக் கழிக்கும் இந்த அயாகோ ஒரு ஜப்பானிய இளங்குமரி. திருச்சி–தஞ்சை சாலையில் உள்ள தேவராயநேரியில் இவரை நரிக்குறவ நண்பர்களுடன் பார்க்கலாம்.

"என் அப்பா பள்ளி ஆசிரியர். அம்மா டெய்லர். இரண்டு தம்பி. ஒருத்தன் வேலை பார்க்கிறான். இன்னொருத்தன் பி.ஏ. பிரெஞ்ச் இலக்கியம் படிச்சிட்டிருக்கான். நான் எம்.எஸ்.சி. யில் இரண்டு பட்டங்கள் பெற்றிருக்கேன். க்யோட்டோ (Kyoto) பல்கலைக் கழகத்தில் பி.ஹெச்.டி. பண்றேன். என்னோட தீசிஸ் நரிக்குறவர்களைப் பற்றியது. அதான் அவர்களைத் தேடி இங்கே..." என்று கொஞ்சு தமிழில் பேசும் அயாகோவுக்கு நரிக்குறவர்கள் மொழியும் அத்துபடி!

ஆராய்ச்சிக்காக வந்திருக்கும் இவர், தனியாகச் சமைத்துச் சாப்பிடுவதில்லை. அவர்களின் மரத்தடி சமையலையே (அசைவம் உட்பட) ஒரு பிடிபிடிக்கிறார். இது பற்றிக் கேட்டால், "இதிலென்ன இருக்கு; அவங்களைப் பற்றி ஆராய்ச்சிப் பண்ண வந்திருக்கேன். முழுதும் கூட இருந்து பழகினா தான் அவங்களோட வாழ்க்கையை இன்னும் நன்றாகப் புரிந்து கொள்ள முடியும்" என்கிறார் புன்னகையுடன்.

தமிழகத்தில், நரிக்குறவர்களை மலை ஜாதியினர் பிரிவில் சேர்க்காமல், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்திருப்பதைப் பெரும் குறை என்கிறார் அயாகோ.

"ஆந்திராவிலும், கர்நாடகாவிலும் நரிக்குறவர்கள் மலைஜாதியினர். தமிழ்நாட்டில் மட்டும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இவர்களைச் சேர்த்திருக்கிறீர்களே" என்று தலைமைச் செயலகத்தில் அயாகோ வாதாட, "நாடோடிகளாக வாழ்ந்து வரும் இவர்களை மலைஜாதியினராக அங்கீகரிக்க முடியாது" என பதில் வந்ததை வருத்தத்துடன் சொல்கிறார் இவர்.





● அயாகோ

நரிக்குறவர்களின் நாடோடி வாழ்க்கை. இறை வழிபாடு. குடும்ப நடைமுறைகள் குறித்து நிறைய பதிவு செய்துள்ளாராம். இதில் அவர்களின் கனவுகள் பற்றிய குறிப்புகளும் உண்டாம்!

"இப்படி இந்தியாவுக்கு வருவோம்; நரிக்குறவர்களோடு சுற்றுவோம்; ஆய்வு செய்வோம் என்று நான் நினைத்துக் கூட பார்க்கவில்லை; ஆனால் இந்த வாழ்க்கை, பூக்கள் மத்தியில் வாழ்கிற மாதிரியான ஓர் உணர்வை ஏற்படுத்துது" என்று சொல்லும் இந்தப் பூவின் வயது இருபத்தியெட்டு!

- திருநாவுக்கரசு



"இந்து சட்டத்தை சர் ஹென்றி மெயின் என்கிற ஆங்கிலேயர்தான் முதலில் எழுதினார். பிறகு சர் தினுஷா முல்லா என்ற இஸ்லாமியர் எழுதினார். ஆனால் முறையாக ஆராய்ச்சி செய்து, அதற்கு இன்றைய வடிவத்தைக் கொடுத்தவர் என்.ஆர். ராகவாச்சார்யார்தான்" என்கிறார் நீதிபதி மோகன்.

இந்து சட்ட மேதை!

மனு, யாக்ஞவல்கியர் என்று பல இந்து இதிகாச நூல்களில் சிதறிக் கிடந்தவற்றைச் சட்டமாக, நீதிமன்ற மொழியில் தந்த ராகவாச்சார்யாரின் நூற்றாண்டு விழா ஜூன் ஏழாம் தேதி கொண்டாடப்படுகிறது.

"வெள்ளையர்கள் ஆண்ட காலத்தில், அவர்களுக்கு இந்து சட்டம் புரியாத புதிராகவே இருந்தது. அதைப் புரியும் வகையில் எழுதிப்பதிப்பிக்கச் செய்தவர் ராகவாச்சார்யார்" எனறு பாராட்டுகிறார் நீதிபதி கிருஷ்ணசாமி ரெட்டியார்.

நீதிபதி மோகன் மேலும்விளக்குகிறார். "உதாரணத்துக்குச் சொல்ல வேண்டுமானால், 'அப்பா வழியில் ஏழு தலைமுறை உறவுக்குள்ளேயும் அம்மா வழியில் ஐந்து தலைமுறை உறவுக்குள்ளேயும் திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்று ஆரம்ப கால இந்து சட்டம் சொன்னது. ஆனால், நடைமுறையில் மாமன் மகள் - அத்தை மகன் திருமணம் மிகவும் அதிகம். அத்தனை திருமணங்களும் சட்டரீதியாக அங்கீகாரம் பெறாமல் அல்லவா போய்விடும். அதனால் யதார்த்தத்தைப் பார்த்து, பழக்க வழக்கங்கள் அடிப்படையில் சட்டத்தை அணுகி ஏற்கவேண்டும் என்று துணிந்து திருத்தித் தந்தவர் ராகவாச்சார்யார்தான்... மேலும் இந்து சட்டப்படி விதவைகளுக்கு கணவன் சொத்தில் அனுபவ பாத்தியதை இருந்தபோதும் அச் சொத்தை விற்கும் உரிமை இல்லாமல் இருந்தது. இதை மாற்றி விற்கும் உரிமையையும் பெற்றுத் தந்தவர் ராகவாச்சார்யார். அனைத்துப் பெண்களுக்கும் சொத்துரிமை இருக்க வேண்டும் என்று அப்போதே குரல் கொடுத்தார்... அவர் ஒரு சீர்திருத்தவாதி!"

"இன்றைக்கு ராகவாச்சார்யாரின் புத்தகம் இந்து சட்டம் குறித்த கையேடாக இருக்கிறது. ஆனால் அன்றைக்கு - அவர் வாழ்ந்த காலத்தில் - அவரிடமேதான் இந்து சட்டம் தொடர்பான சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவுபடுத்திக் கொள்வோம். ஒழுக்க சீலராக, பண்பாளராக வாழ்ந்தார் அவர்..." என்று நினைவு கூர்கிறார் கிருஷ்ணசாமி ரெட்டியார்.

"இளம் தலைமுறையினருக்கு ராகவாச்சார்யார் ஓர் எடுத்துக்காட்டு" என்று கூறும் மோகன், "அவர் காண்பித்த ஆர்வத்தை இன்று பின்பற்றுவதுதான் அவருடைய நினைவுக்கு நாம் செய்யக்கூடிய சிறந்த அஞ்சலியாக அமையும்" என்கிறார்.

- அப்பு

முத்து, பவழம், மரகதம், கெம்ப், வைரம், வைடூர்யம், நீலம்,

இந்த மாதம் முத்து மாதம்!

ஸ்ரீ லக்ஷ்மி முத்து மாளிகை

அழகு மிளிரும்
அருமையான
அணிகலன்களின் விற்பனை

பரிசு இலவசம்

இலவசம்

ரூபாய்.1,000/- நகை வாங்குபவர்களுக்கு 1 பவழ விநாயகர் இலவசம்
ரூபாய்.1,500/- 1 கிராம் தங்க வளையல் இலவசம்
ரூபாய்.2,000/- 1 நவரத்ன மாலை (அமெரிக்கன் டைமண்ட்) இலவசம்
ரூபாய்.2,500/- 1 பஞ்ச லோக குந்தன் பெண்டன்ட் செட் இலவசம்

மிக நேர்த்தியான
பாரம்பர்யமிக்க
ஆபரண மாளிகை

லக்ஷ்மியின் பிரதான வகைகள்

ஹைதராபாத் முத்துக்கள் (கருப்பு, ரோஸ், வெள்ளை, தட்டை, உருண்டை, மிக்கிமோட்டோ, பட்டன், அரிசி வகைகள்) **இத்தாலியன் பவழம்** (உருளை, தட்டை, ரோஸ், பூக்கள்) **சீனத்து ஜேட் மாலைகள், கெம்ப், மரகதம், நீலக்கல், நவரத்ன மாலைகள், அமெரிக்கன் டைமண்ட், வெள்ளி நகைகள்** (வளையல்கள், மோதிரங்கள், பெண்டெண்ட் செட், மாலைகள், ஹாரம், ராணி ஹாரம் வகைகள்) **ஒரு கிராம், மற்றும் இரண்டு கிராம் தங்க வளையல்கள், மிக பழமையான நாற்பது வண்ண மணிகள், முத்து, நவரத்ன மாலைகள் மற்றும் முத்துக்கள் பதித்த கைகடிகாரங்கள்.**

இலவச ஜோதிட ஆலோசனை

இந்த குறிப்பைக் கொண்டு வந்தால் 5% தள்ளுபடி கொடுக்கப்படும்

கடை எண்-8, கீழ் தளம், காசி ஆர்க்கேட்,
116, தியாகராயா சாலை (வடக்கு போக் சாலை சந்திப்பு),
தியாகராய நகர், சென்னை-600 017. ✆ 822 08 56

நீங்கள் பிறந்த தேதி, இடம், மாதம், பெயர், வருடம் முதலியவற்றைக் குறிப்பிட்டு எங்களுக்கு ரூ.100/- ஒரு D.D. எடுத்து அனுப்பவும் (வெளிநாட்டவர்களுக்கு U.S. $10) நாங்கள் உங்களுக்கு நல்ல, நேரத்தியான ஆலோசனை வழங்கி, உங்களுக்கு எந்த கல் மிக பொருத்தமானது என்பதையும் குறித்து தபாலில் அனுப்புவோம்.

வீடு ✆ 827 79 23

எல்லா கிரெடிட் கார்டுகளும் ஏற்கப்படும்.

கோமேதகம், ஜேட், கார்னெட், ஓர்காஸ், லாபிஸ்லஜுலி, டூபல், அமெதிஸ்ட், ஸ்படிகம், ருத்ராக்ஷம், ரீர்மலைன், மூன்ஸ்டோன்,

ஜேட், கார்னெட், ஓர்காஸ், லாபிஸ்லஜுலி, டூபல், அமெதிஸ்ட், ஸ்படிகம், ருத்ராக்ஷம், ரீர்மலைன், மூன்ஸ்டோன், பெரிடாட்,

நான்காவது பெயர்

பெ. நாயகி

ஏற்கெனவே தாமதமாகிவிட்டது என்கிற அவசரத்துடன் நான் அலுவலகத்தினுள் நுழைய, முதலில் எதிர்ப்பட்டான் ப்யூன் மாணிக்கவேல்.

"விஷயம் தெரியுமா சார்? நம்ம பூபதிக்கு ஹார்ட் அட்டாக்காம். அஸ்பத்திரில சாகப் பிழைக்கக் கிடக்காராம்."

திடுக்கிட்டேன்.

"என்ன சொல்ற? நல்லாத் தெரியுமா? தவறுதலா எதையாவது உளறி வைக்காதே" என்றேன் பதற்றமாக.

"என்னா சார்? இந்த விஷயத்தில போய் யாராவது தப்பாச் சொல்லுவாங்களா? நேத்து ராத்திரிதான் திடீர்னு வந்ததாம். மங்கை ஆஸ்பிடல்லதான் அட்மிட் பண்ணியிருக்காங்களாம். நம்ம சேகர் சார், மணி சார், சுந்தர் சார் மூணு பேரும் காலைல ஆஃபீஸ் வந்து இதைக் கேள்விப்பட்டதும் அவசரமா அங்கே தான் போயிருக்காங்க."

என்னால் நம்பவே முடியவில்லை. இந்தச் சின்ன வயதிலும்கூட ஹார்ட் அட்டாக் வருமா? அதுவும் பூபதி மாதிரியான எந்த விதக் கெட்டப் பழக்கங்களும் இல்லாத ஒருவனுக்கு இது வரலாமா? ஒழுக்கமாக, நேர்மையாக, நல்லவனாக வாழும் ஒருவனுக்கு இந்த மாதிரியான கஷ்டங்கள் வந்தால் அது மற்றவர்களை நம்பிக்கை இழக்கச் செய்து விடாதா?

மனம் நிஜமான துக்கத்தில் கனமாயிற்று.

அவசரமாக லீவு லெட்டர் எழுதினேன். மாணிக்கவேலிடம் தந்துவிட்டுக் கிளம்பும் போது சேகரும் மணியும் சுந்தரும் வந்து விட்டார்கள்.

எல்லோரும் அவர்களைச் சூழ்ந்து கொள்ள, "இப்போது பரவாயில்லை. நல்ல நேரத்தில் கொண்டு போய்ச் சேர்த்து விட்டார்கள் போலும். இன்னும் ஐ.சி.யூ.வில் இருந்தாலும் அபாய கட்டத்தைத் தாண்டி விட்டானாம். பிழைத்துக் கொள்வான்னு டாக்டர் சொல்லிட்டார். நோ ப்ராப்ளம்" என்றார்கள்.

எல்லோரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டபடி நகர, அவர்கள் மூவரின் முகங்களில் மட்டும் எதையோ பறி கொடுத்த உணர்வு தென்பட்டது. நான் ஆஸ்பத்திரிக்குக் கிளம்பிச் சென்றேன்.

வாசலிலேயே கண்களில் பட்டான் வாடிய முகத்துடன் நின்றிருந்த பூபதியின் தம்பி ரகுபதி. என்னை அடையாளம் கண்டு புன்னகைக்க முயற்சி செய்தான். நான் அவன் அருகில் சென்றுத் தட்டிக் கொடுத்தேன்.

"பூபதியைப் பார்க்க முடியுமா?" என்று மெல்லக் கேட்டேன்.

கண்ணாடி ஜன்னலின் வழியே தெரிந்தான் பூபதி.

பரிதாபமான காட்சி. அவனுடைய கட்டிலின் அருகில் சிவந்து வீங்கிய கண்களுடன் அமர்ந்திருந்த அவனுடைய மனைவியைக் காண சங்கடமாக இருந்தது. திருமணம் முடிந்து இரண்டு வருடங்கள் ஆகி இருக்குமா? இவ்வளவு இள வயதில் கணவனுடன் இண்டென்ஸிவ் கேரில் உட்காரும் நிலை கொடியது. சே!

அங்கிருந்து நகர்ந்து எப்படி இது நேர்ந்தது என்று ரகுபதியிடம் விசாரித்துக் கொண்டிருந்தேன்.

பதற்றமான கணங்கள் கடந்து விட்டபடியினால் அவனும் கொஞ்சம் தெளிவாகவே விளக்கத் தொடங்கினான். இடையிடையே உடைந்து அழ இருந்தவனைத் தேற்ற வேண்டி இருந்தது.

"நல்ல வேளையாக நான் நேற்று ஊரில் இருந்து வந்திருந்தேன் சார். இல்லாவிட்டால் மதினி தனியாக என்ன செய்திருக்க



முடியும்? பாவம். அண்ணனுக்கு இந்த வயதில் இப்படி ஒரு கஷ்டம் அவசியம் தானா? நாங்கள் யாருக்கு என்ன தீங்கு செய்தோம்?''

எவராலும் முழு எஃபக்டோடு உணர்ந்து கொள்ள முடியாத, பதில் அவசியப்படாத கேள்வி இது. அமைதி காத்தேன்.

என்னிடம் நிறையக் கொட்டியதில் அவனுக்கும் ஆறுதல் ஏற்பட்டிருந்தது.

''நீங்க இரண்டு பேர் மட்டும் தான் இருக்கிறீர்களா? வேறு யாரும் துணைக்கு இல்லையா?'' என்று கேட்டேன்.

''அப்பாவுக்கும் மாமாவுக்கும் சொல்லியிருக்கிறேன். வந்து கொண்டிருக்கிறார்கள்.''

சட்டைப் பையில் இருந்து பணம் எடுத்து அவனிடம் நீட்டினேன். ''செலவுக்கு இருக்கா? இன்னும் வேணும்னா சொல்லு'' என்றேன்.

''ஐயோ, வேண்டாம் சார். ரொம்ப தேங்க்ஸ். நேத்து நான் ஊரிலிருந்து வந்தப் போவே நெல் வித்த பணம் நிறைய வச்சிருந்தேன். அது தான் சமயத்துக்கு உதவிச்சு'' என்றான் நெகிழ்ந்தபடி.

பூபதியின் மனைவி அங்கே வந்தாள்.

''தம்பி! டாக்டர் ஏதோ கேட்கிறார். என்னன்னு புரியலை. உங்களைக் கூப்பிட்டார்'' என்றாள். என்னைத் தயக்கமாக ஏறிட்டாள்.

என்னை அவளுக்குத் தெரிய வாய்ப்பு இல்லை.

ரகுபதி அறிமுகம் செய்து வைத்தான். ''மதினி! இவர் அண்ணனுடைய ஆஃபீஸில் தான் இருக்கார். அண்ணனுக்கு சீனியர்.''

"உறுதியான பிரதமர் இந்திராதான்!"

'மூன்றாம் உலகிலிருந்து முதல் நிலைக்கு' (From third world to first - The Singapore story - 1965-2000) என்ற புத்தகத்தை எழுதியிருக்கிறார் சிங்கப்பூர் முன்னாள் பிரதமர் லீ குவான் இயூ.

"சிறிய நாடான சிங்கப்பூர் பெரிய நாடுகளுக்கு இடையே



போராடி முன்னேற என்னென்ன சிரமங்களை எதிர்கொண்டது என்பதை இளம் தலைமுறையினருக்கு உணர்த்தவே இந்தப் புத்தகத்தை எழுதியிருக்கிறேன்" என்பது லீயின் முன்னுரை.

இந்தப் புத்தகத்தில் சரித்திரச் சிகரங்களாகத் தாம் கருதும் தலைவர்களைப் பற்றி லீ குறிப்பிட்டிருக்கிறார். அதில் இந்திய முன்னாள் பிரதமர் இந்திரா காந்திக்குச் சிறப்பிடம்.

"தெற்கு ஆசியாவில் நான் சந்தித்த உறுதியான பிரதமர் இந்திரா காந்தி. மார்கரெட் தாட்சர், பண்டார நாயகா, பேனாசிர் புட்டோ ஆகியோரை விட இந்திரா உறுதியானவர். திட்டவட்டமாகச் செயல்படுபவர். தவறு செய்தவர் யாராக இருந்தாலும் தயவு தாட்சண்யம் பார்க்காமல் நடவடிக்கை எடுக்கக் கூடிய தலைவர் இந்திரா. எந்த விஷயத்திலும் திடமாகவும் உறுதியாகவும் நடைமுறைக்கு ஏற்ப செயல்படுவர் அவர்" என்று குறிப்பிட்டிருக்கும் லீ, மறைந்த முன்னாள் பிரதமர்கள் ஜவாஹர்லால் நேரு, ராஜீவ் காந்தி ஆகியோரைப் பற்றியும் விரிவாக எழுதியிருக்கிறார்.

— ஜே.எம்.சாலி

அவளுக்குக் கும்பிடக் கூடத் தோன்றவில்லை. வெறுமனே வெறித்தாள்.

"தைரியமா இருங்க. பூபதி நல்லவர். அவருக்கு ஒண்ணும் ஆகாது. டாக்டரே சொல்லிட்டார்." என்றேன் தேற்றும் முயற்சியாக.

அவள் விரக்தியும் நிம்மதியும் கலந்து புன்னகை செய்தாள்.

"நான் போய் டாக்டரைப் பார்த்திட்டு வந்திடறேன் சார்" என்றபடி அங்கிருந்து நகர்ந்தான் ரகுபதி.

பூபதியின் மனைவி என்னை ஏறிட்டு நோக்கினாள். "என் வீட்டுக்காரர் உங்களுக்கு ஏதும் பணம் தரணுமா?" என்று கேட்டாள் மெல்லிய குரலில்.

திடுக்கிட்டேன்.

"இல்லையே, எதற்குக் கேட்கிறீர்கள்?"

"அவருக்கு நேற்று ராத்திரி உடம்பெல்லாம் வியர்த்து வலி வந்தவுடன் அவசரமா என்ன செஞ்சார் தெரியுமா? ஒரு பேப்பர் எடுத்து வரச் சொல்லி அவர் கொடுக்க வேண்டிய கடன் பாக்கிகளைக் குறிச்சுக்கச் சொன்னார். மூன்று பெயர்களும், ஆயிரம், மூவாயிரம், ஆயிரத்து ஐந்நூறுன்னு தொகைகளையும் சொன்னார். நாலாவதா ஒரு பெயர் சொல்ல வாய் திறந்தார். அதுக்குள்ள மயக்கமாயிட்டார். அது ஒரு வேளை நீங்க தானோன்னு தெரிஞ்சுக்கக் கேட்டேன்." என்றபடி ஜாக்கெட்டின் தோள் பட்டைப் பகுதிக்குள் கையை விட்டு கசங்கி இருந்த ஒரு காகிதத்தை எடுத்துப் பிரித்தாள். எனக்குப் பார்க்க அவசியப்படவில்லை.

"நீங்க ரொம்பவும் கலங்கிப் போய் இருக்கீங்கன்னு நினைக்கிறேன். இந்தப் பேச்செல்லாம் இப்போ எதற்கு?" என்றேன் மென்மையாக ஆனால் கண்டிக்கும் குரலில்.

சிறிது நேரம் எங்கோ வெறித்தாள். "அவருக்கு இந்த மாதிரி ஆகிப் போச்சுன்ன உடனே அந்த மூணு பேரும் தான் காலைல ஓடி வந்திருக்காங்க. நான் உள்ளே இருந்ததால அவருடைய தம்பிகிட்ட பேசிட்டிருந்துட்டுப் போயிருக்காங்க. அவங்களோட அக்கறை அவருக்கு என்ன ஆச்சு? எப்படி ஆச்சுன்னு தெரிஞ்சுக்கறதை விட டாக்டர் அவருடைய டிஸ்சார்ஜ் சம்பந்தமா என்ன சொன்னார்ங்கறதைத் தெரிஞ்சுக்கறதில்தான் இருந்திருக்கு..."

உடைந்து அழத் தொடங்கினாள் அவள்.

நான் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருக்க, சிறிது நேரத்தில் தன்னைத் தேற்றிக் கொண்டு முந்தானையில் முகத்தை அழுந்தத் துடைத்துக்கொண்டாள். "அவங்களைச் சொல்லியும் குற்றமில்லை. எங்களுக்குத் தூக்கிக் கொடுக்கவா அவங்க சம்பாதிச்சு வச்சிருக்காங்க? கடன் பாக்கி இருக்கும் போது நோய்வாய்ப் படக்கூடாது. கடவுளுக்கு எங்கே தெரியுது? அதில இருக்கிற தர்மசங்கடத்தைப் பத்தில்லாம்? எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா சார். அவருக்கு ஏதாவது ஒண்ணு ஆயிட்டாலும்கூட அவங்க மூணு பேருடைய பணமும் பத்திரமா திரும்பக் கிடைச்சுடும்னு சொல்லுங்க. அதோட அந்த நாலாவது ஆள் யாருன்னு கொஞ்சம் கண்டு பிடிச்சு சொன்னீங்கன்னா பெரிய உபகாரமா இருக்கும்."

ஆஸ்பத்திரியில் இருந்து திரும்பும்போது மிகவும் கனமாக உணர்ந்தேன். கொஞ்சம் தாமதத்தைப் பொருட்படுத்தாமல் சாயங்காலமாகவே பூபதியைப் பார்க்க வந்திருக்கலாம் என்று பட்டது. ○



* உங்கள் குழந்தைகளிடம் படிக்கும் பழக்கத்தை உருவாக்குங்கள்.

* கோகுலம் அவர்களுக்கு அன்பளிப்பாகக் கிடைக்கச் செய்யுங்கள்.

* கல்கி வார இதழுக்கு ஓராண்டு சந்தா ரூ.275/- செலுத்தினால் போதும்; ரூ.36/- பெறுமானமுள்ள தமிழ் அல்லது ஆங்கில கோகுலம் ஆறு மாதங்களுக்கு (ஆறு இதழ்கள்) உங்கள் குழந்தை பெயருக்கு இலவசமாக வந்து சேரும்.

* கல்கி வார இதழுக்கு இரண்டு ஆண்டு சந்தா ரூ.550/- செலுத்தினால் ரூ.72/- பெறுமானமுள்ள தமிழ் அல்லது ஆங்கில கோகுலம் ஓராண்டுக்கு (12 இதழ்கள்) உங்கள் குழந்தை பெயருக்கு இலவசமாக அனுப்பப்படும்.

கல்கி சந்தா செலுத்தினால்
கோகுலம்/GOKULAM
இலவசம்!

* ஏற்கெனவே சந்தாதாரர்களாக உள்ளவரும் தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொண்டு பயன்பெறலாம். சந்தா முடிவு தேதி நீடிக்கப்படும்.

* கல்கி என்ற பெயருக்கு மணி ஆர்டர் அல்லது டிமாண்ட் டிராஃப்ட் அனுப்பவும். வெளியூர் காசோலைகள் ஏற்பதற்கில்லை.

டி.டி. அல்லது எம்.ஓ. அனுப்ப முகவரி :
மானேஜர், கல்கி,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

என் பெயர் : ....

என் மகன் / மகள் பெயர் : ....

....

விலாசம் : ....

....

....

....

கல்கி வார இதழுக்கு ஓராண்டு / இரண்டு ஆண்டுகள் சந்தா ரூ. .... அனுப்பியுள்ளேன். என் மகன் / மகள் பெயருக்கு கோகுலம் தமிழ் / ஆங்கிலம் 6/12 இதழ்கள் * அன்பளிப்பாக அனுப்பவும்.

** தேவையற்றதை அடித்து விடவும்.*

கையொப்பம் : ....

ஜூலை இறுதி வரை மட்டுமே இந்தச் சலுகை! முந்துங்கள்!



• விஜயபாஸ்கர்



• சக்திவேல் முருகன்



• இராம்பிரபு

ஹாஸ்டலுக்குப் புதுசு!

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு பட்டதாரி எம்.எல்.ஏ.க்களைச் சந்தித்து, கல்லூரி ஹாஸ்டல் வாழ்க்கையுடன் ஒப்பிடும்போது சட்டமன்ற ஹாஸ்டல் வாசம் எப்படி? என்று கிளறினோம். ''இந்த ஹாஸ்டலுக்கு நாங்க புதுசுதாங்க'' என்று கூறிவிட்டு ஆரம்பித்தனர்.

இரா. இராம்பிரபு (த.மா.கா), பரமக்குடி தொகுதி

த.மா.கா.வின் கடைக்குட்டி எம்.எல்.ஏ இராம்பிரபு. மூன்று கல்லூரிகளில் படித்து பட்டப்படிப்பை முடித்திருக்கிறார்.''நானும் என் நண்பர்களும் பாஸ்கட் பால் பிளேயர்கள். அதற்காகச் சென்னை லயோலாவில் இடம் கிடைத்தது. ஏதோ லண்டனில் இருப்பது போன்று தாட், பூட் ஆங்கிலம். அந்த அலர்ஜி காரணமாக இரண்டே மாதத்தில் நண்பர்களுடன் தாம்பரம் கிறிஸ்துவக் கல்லூரிக்கு இடம் பெயர்ந்தோம். அங்கிருந்து ஒரே தூக்காக மதுரை கல்லூரியில் சரணடைந்தோம். லயோலா ஹாஸ்டலில் அப்போதெல்லாம் எமர்ஜென்ஸி. இப்போது எப்படியோ? வார்டன் கண்கொத்திப் பாம்பு போல நோட்டம் விட்டுக் கொண்டிருப்பார். எந்த அறையிலிருந்தும் பத்து மணிக்கு மேல் விளக்கு எரிந்தால் காலடித் தடம் ஓசை கேட்காமல் பார்த்துச் செல்வார். கிறிஸ்துவக் கல்லூரி ஹீபர் ஹாஸ்டல் ஜனநாயகம் தவழும் இடம். அந்த பரந்துபட்ட காட்டில் யார், யாரைக் கண்ட்ரோல் செய்வது? ஹாஸ்டல் சமையல்காரரைப் 'பாசத்துடன்' மிரட்டி ஆம்லெட், பாயா போடச் சொல்வோம். (கல்லூரி விளையாட்டு வீரர்கள் ஆயிற்றே!) ஐயா... மதுரைக் கல்லூரி ஹாஸ்டலைப் பற்றி கேட்காதீங்க. வண்டு போன்ற கொசுக்களை நினைக்கும்போதே நடுங்குது. ஒரே நாள்தான் அங்கு ஹாஸ்டல் வாசம். அதன் பின் இறையியல் கல்லூரி ஹாஸ்டலில் தங்கி விட்டேன். ரொம்ப ஸ்டிரிக்ட். பட்டப்படிப்பு முடித்த பின் பெங்களூரில் சட்டம் படித்தேன். நண்பர்களுடன் தனியாக வீடு எடுத்து தங்கிப் படித்தேன். என் சமையல் திறமைக்கு அங்கேதான் டிகிரி வழங்கப்பட்டது.

இப்போது இந்த சட்டமன்ற ஹாஸ்டல் வாசம் எப்படி என்கிறீர்களா? நிறைய படிச்சுத் தெரிஞ்சுக்க வேண்டியிருக்கு. மறுபடியும் காலேஜ் ஞாபகம் வந்துடுச்சு. சமையல் செய்ய அம்மாவைக் கூப்பிட்டு வரணும். காற்றுதான் உப்பு காற்றா நச, நசன்னு இருக்கு. ஸார்... ஒரு விஷயம் எழுத மறந்துடாதீங்க... எந்த கஷ்ட காலம் வந்தாலும் ஐயா மூப்பனாரோடத்தான் இருப்பேன். சோ. பாலகிருஷ்ணன் நமக்குக் குரு மாதிரி. அவர் சிபாரிசு இல்லாட்டி சீட் கெடைச்சிருக்காது.

மகேஸ்வரி (காங்கிரஸ்), கோவை மேற்கு

'**யு**வர் ஆனர்' என்று நீதிமன்றங்களில் குரல் விட்டுக் கொண்டிருந்த மகேஸ்வரி இனி 'மாண்புமிகு சபாநாயகர் அவர்களே' என்று பேசக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருக்கிறார். "நான் சின்ன பொண்ணா இருக்கும்போது ஒரு வருடம் நீவில் விட்டுட்டாங்க ஸார்' என்று வருத்தத்துடன் சொல்கிறார். அவர் அப்பா உடல் நலமில்லாமல் சென்னையில் ஆஸ்பத்திரியில் இருந்தபோது மகேஸ்வரியை உடுமலைபேட்டை விசாலட்சுமி வித்தியாலயாவில் எட்டாவது சேர்த்து, ஹாஸ்டலில் தள்ளி விட்டார்களாம். "எங்கள் வீட்டில் நாங்கள் மூன்று சகோதரிகள். மூத்த சகோதரிகள் சமையல் செய்ய, நான் ஒரு பிடி பிடிப்பேன். புகுந்த வீட்டில் மாமியார் என்னைச் சமையல் அறைக் குள்ளேயே விட மாட்டார். அப்படியொரு நல்ல உள்ளம். இப்போது ரிசல்ட் எனக்குச் சமையல் தெரியாது... ஹையா!" என்கிறார். சட்டமன்ற ஹாஸ்டலில் சமைத்துப் போட ஆளைத் தேடிக் கொண்டிருக்கிறார் மகேஸ்வரியின் கணவர் நந்தகுமார். "ஆள் கிடைக்காட்டி இருக்கவே இருக்கு நமக்குப் பிடித்த சரவணபவன்" என்று சொல்லி சிரிக்கிறார். "அது சரி காங்கிரஸில் சீட் வாங்குவதே குதிரைக் கொம்பாயிற்றே..!" என்றவுடன் "எங்க (மாஜி) எம்.பி (பிரபு) தயவு தாங்க காரணம்' என்று தயங்காமல் சொல்கிறார்.


இனி வழக்கறிஞர் தொழிலுக்குக் குட்பையா?

"நோ... நோ... நிரந்தரமாக நமக்குச் சோறு போடற தொழில் அதாங்க" என்கிறார். இவரது தொகுதியில் தான் பிரச்னைக்குரிய, நெருக்கடியான, கோட்டைமேடு பகுதி இருக்கிறது. "எங்க ஊரு நல்ல ஊரு... நல்ல ஜனங்க... இடையில் கொஞ்சம் தடுமாற்றம்; எல்லாம் சரியாயிடும்" – நம்பிக்கை தொனிக்கும் குரல்.

எம். சக்திவேல் முருகன் (அ.தி.மு.க), அம்பாசமுத்திரம்

"**ஆ**ழ்வார்குறிச்சி பரம கல்யாணி கல்லூரியில் அறிவியலில் பட்ட மேற்படிப்பு படித்தபோது ஹாஸ்டலில் ஐயா வைத்ததுதான் சட்டம். ஏன் தெரியுமா? நான்தான் ஹாஸ்டல் சேர்மன்" என்று சிரித்தபடி சொல்கிறார் சக்திவேல் முருகன். "எந்தவிதமான அடாவடித்தனமும் இல்லாமல் மக்கள் குரலுக்கு மதிப்பு கொடுத்து, சிறு குறைகளையும் சரி செய்து கொடுத்து விடுவேன்." தனது 25வது வயதில் அடையக்கருங்குளம் பஞ்சாயத்துத் தலைவர். பின்னர் ஒன்றிய கவுன்ஸிலர் என்று பொதுவாழ்வில் குதித்து விட்டவர். இப்போதும் மதுரா கோட்ஸ் ஊழியர் (ஐந்து வருடம் லீவு போடணும்!) "பி.யு.ஸி நெல்லை ஜான்ஸ் கல்லூரி. பிறகு, பட்டப்படிப்பு சவேரியார் கல்லூரி... அங்கேயெல்லாம் படிக்கும்போது வாலைச் சுருட்டிக் கொண்டு இருந்தேன். காரணம் என் மூத்த சகோதரரும், பாளையங்கோட்டையிலேயே படித்துக் கொண்டிருந்தார்" என்று சொல்லும் ச.வே. முருகன் ஜெ. பேரவை செயலாளரும்கூட.





"இங்கு எம்.எல்.ஏ ஹாஸ்டல் மற்றும் சட்டமன்றம் கண்ணைக் கட்டி விட்டாப்பல இருக்குங்க... கொஞ்சநாள் போனாதாங்க சரியாகும். புதுசா

• மகேஸ்வரி



"வாஸ்து சாஸ்திர நிபுணரைப் பார்க்கப் போனியே பர்வதம்... என்ன சொன்னார்?"

"உங்க அம்மாவோட வாயை மட்டும் இரண்டு இஞ்ச் குறைச்சா எல்லா தோஷமும் நிவர்த்தியாயிடுமாம்!"

— புளியரை கணேசன்

● ● ● ● ● ● ● ● ● ● ● ● ●

வீட்டுக்கு வந்த மருமகப் பொண்ணு சமையல் ரூமில் தடுமாறுமே... அது போலத்தாங்க நான் இருக்கேன்'' என்கிறார். சாப்பாடு பற்றி அவருக்கு எந்தப் பிரச்னையும் இல்லையாம். 'கிடைக்கறதைச் சாப்பிடுவேன்'. 'தேர்தலில் நெல்லை மாவட்ட தி.மு.க மாவட்டச் செயலாளரைத் தோற்கடித்திருக்கிறார் சக்தி வேல் முருகன். குடி தண்ணீருக்காகப் போராடியபோது சாலை மறியல் செய்தார்' என்று கைது செய்யப்பட்டார். இவர் "பெண்களுடனும், குழந்தைகளுடனும் இரண்டரை ஆண்டு காலம் இந்த வழக்கிற்காக நீதிமன்றத்திற்கு அலைக்கழிக்கப்பட்டதை மறக்க முடியாது" என்கிறார் சக்திவேல் முருகன்.

ஜி. ரவிராஜ் (பா.ம.க) திருத்தணி

பள்ளிக்குச் செல்வதைப் போல காலையில் வீட்டை விட்டுக் கிளம்பும்போதே டிபன் பாக்ஸில் தயிர் சாதத்துடன் கிளம்பி விடுகிறார் ரவிராஜ். "கண்ட இடங்களில் சாப்பிட்டால் ஒத்துக் கொள்ளவில்லை" என்று சொல்லும் இவர் சென்னை வந்தால் மட்டும் வேலு மிலிட்டரியில் ஒரு வெட்டு வெட்டி விடுவாராம். "நமக்குப் பார்டர் பக்கங்க. திருப்பதியில் ஹாஸ்டலில் தங்கிப் படித்தபோது மிளகாய்ச் சாப்பாடு சாப்பிட்டு நாக்கு காரத்துக்குப் பழக்கமாயிட்டுதுங்க" என்கிறார். இந்த இளங்கலை பட்டதாரி, பல போராட்டங்களில் கலந்து கொண்டு வேலூர், சென்னை என்று ஜெயில் சாப்பாட்டையும் ருசி பார்த்த அனுபவம் ரவிராஜுக்கு உண்டு. "பிரசாரத்துக்குப் போனபோது கிராமங்களில் உள்ள கோயில்கள் உட்பட எல்லா கோயில்களுக்கும் போயாகி விட்டது. கொஞ்சம் தயங்கினால் "ஸார் இந்தக் கோயிலுக்கு வந்து வழிபட்டால் வெற்றி நிச்சயம்" என்று பல கோயில்களுக்கு அழைத்துச் சென்றுவிடுவார்கள்" என்று சொல்லிச் சிரிக்கிறார். "ஹாஸ்டல் சூப்பரா இருக்கு. மனைவியையும் குழந்தைகளையும் அழைத்து வந்து விட வேண்டியதுதான்" என்று சொல்லும் ரவிராஜ், டாக்டரின் மகன் அன்புமணியை நன்றியுடன் குறிப்பிடுகிறார்.

விஜயபாஸ்கர் (எம்.பி.பி.எஸ்) அ.தி.மு.க, புதுக்கோட்டை

பார்வைக்கு முதலாண்டு கல்லூரி மாணவரைப் போல தோற்றமளிக்கும் இவருக்கு இருபத்து ஏழே வயது என்றால் நம்பித்தான் ஆக வேண்டும். ஆவின் முகத்தில் பளீரென்ற குழந்தைச் சிரிப்போடு சட்டமன்றத்தில் வளைய வரும் இவரை, சக எம்.எல்.ஏக்கள் ஆச்சர்யமாய்ப் பார்க்கிறார்கள். "விவரம் தெரிந்தது முதல் ஹாஸ்டலில்தான் எனது வாழ்க்கை" என்று சொல்லும் விஜயபாஸ்கர், அறையிலும், நண்பர்களோடு வெளியே செல்லும்போதும் ஜீன்ஸ் டீ ஷர்ட்தான் அணிகிறார். ஜீன்ஸ் அணிபவர் என்பதால், ஏதோ ஜாலி பேர்வழி என்று இவரைத் தவறாக எடை போட்டு விட முடியாது. "இந்த நிலையை எட்டுவதற்கு நான் ரொம்ப உழைச்சிருக்கேன். அதையும் தாண்டி எனக்கு இப்படியொரு அரிய வாய்ப்பைக் கொடுத்து, பொதுப் பணிக்கு அனுப்பியிருக்கும் அம்மாதான்... இந்த சின்ன வயசுல நான் எம்.எல்.ஏ ஆகக் காரணம்" என்று சொல்லும் விஜய பாஸ்கர், ஆறாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை திருச்சி அருகேயுள்ள பாலக்குறிச்சியில் விடுதியில் தங்கிப் படித்தாராம். பிறகு பிளஸ் ஒன், பிளஸ் டூ வகுப்புகளை, திருச்சி பிஷப் ஹெப்பர் ஸ்கூலில் படிக்கும்போதும் ஹாஸ்டல் வாழ்க்கைதான் என்கிறார்.

"என்னை அரசியல் ரீதியாக அதிக ஈடுபாடு கொள்ள வைத்தது கல்லூரி வாழ்க்கைதான். சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் எம்.பி.பி.எஸ் படித்தபோதும் விடுதி வாழ்க்கைதான்" என்று சொல்லும் விஜய பாஸ்கர், புதுக்கோட்டையை ஒரு தொழில் நகரமாக மாற்றிக் காட்டுவேன் என்கிறார். தற்போது மாநில மாணவரணி இணைச் செயலாளராகவும் இருந்து வரும் இவர், வோட்டுக் கேட்க, சென்றபோதும் கையில் மருந்துகளுடன் சென்று வாக்காளர்களுக்கு வழிநெடுக மருத்துவம் பார்த்திருக்கிறார். "நன்றி கூறச் செல்லும்போதும் நடமாடும் ஃபார்மசியோடு போவேன்" என்கிறார்!

— கௌசி, ஜெயந்தன்

அட்டை, படங்கள்: ராஜன்

ராசிக்கல் மோதிரம் வாங்க ராசியான கடை P.R. ஜுவல்லரி!

P.R. JEWELLERY

GOLD, SILVER, DIAMOND & BIRTH STONES

102, USMAN ROAD, T. NAGAR, CHENNAI - 600 017. PH: 4344442, 4327764

TUESDAY HOLIDAY (10.00 AM to 1.30 — 3.30 PM to 8.00 PM)

P.R. ஜுவல்லரியில் ராசிக்கல் மோதிரம் வாங்கி அணிந்துபயன்பெறுங்கள். ஒவ்வொரு ராசிக்கும் மோதிரம் ரூ. 400/-

நட்சத்திரம்	ராசி	ராசிக்கேற்றகல்	கல்லின் எடை	வெள்ளி மோதிரம் விலை	இன்சூர் தபால் செலவு
அசுவினி, பரணி, கார்த்திகை முதல் பாதம் முடிய	மேஷம்	பவழம்	2 CARAT	400/-	50/-
கார்த்திகை 2-ம் பாதம், ரோகிணி, மிருகசீரிஷம் 2ம் பாதம் முடிய	ரிஷபம்	வைரம்	5 CENT	2250/-	200/-
மிருகசீரிசம் 3-ம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் முடிய	மிதுனம்	மரகதபச்சை	20 CENT	400/-	50/-
புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயில்யம் முடிய	கடகம்	முத்து	2 CARAT	400/-	50/-
மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய	சிம்மம்	மாணிக்கம்	20 CENT	400/-	50/-
உத்திரம் 2ம் பாதம் முதல், அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் முடிய	கன்னி	மரகத பச்சை	20 CENT	400/-	50/-
சித்திரை 3-ம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3ம் பாதம் முடிய	துலாம்	வைரம்	5 CENT	2250/-	200/-
விசாகம் 4ம் பாதம் முதல், அனுஷம், கேட்டை முடிய	விருச்சிகம்	பவழம்	2 CARAT	400/-	50/-
மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் முடிய	தனுசு	புஷ்பராகம்	1 CARAT	400/-	50/-
உத்திராடம் 2ம் பாதம், திருவோணம் அவிட்டம் 2-ம் பாதம் முடிய	மகரம்	நீலம்	20 CENT	400/-	50/-
அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3ம் பாதம் முடிய	கும்பம்	நீலம்	20 CENT	400/-	50/-
பூரட்டாதி 4ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய	மீனம்	புஷ்பராகம்	1 CARAT	400/-	50/-
தனுசு, மீன ராசிக்காரர்கள் கனக புஷ்பராக மோதிரமும் அணியலாம்			50 CENT	1000/-	100/-
ராகு, கோமேதகம்			50 CENT	400/-	50/-
கேது, வைடூரியம்			20 CENT	400/-	50/-
அனைவரும் அணியக்கூடியது கார்னெட் வெள்ளி மோதிரம்			2 CARAT	400/-	50/-

✱ நவரத்தினம் மோதிரம் அணிந்தால் மிகவும் நல்லது. ✱ **WE ACCEPT MASTER CARD/VISA CARDS**

அனைவரும் அணியக்கூடியது கார்னெட் மோதிரம் ரூ. 400/- கார்னெட் மோதிரம் அணிந்தால் செல்வ வளம் பெருகும். வியாபாரம், படிப்பு, ஞாபக சக்தி அதிகரிக்கும்.

குறிப்பு : புஷ்பராகம், வைரம், நவரத்தினம், ஆகிய மோதிரங்கள் வெள்ளியிலும், தங்கத்திலும் அணியலாம்.

மீதி அனைத்து ராசிக்கல் மோதிரங்கள் வெள்ளியில் அணிய வேண்டும். வெள்ளியில் அணிந்தால் பலன் அதிகம். மேற்படி ராசிக்கல் மோதிரம் நம்பிக்கையுடன் அணிந்து முயற்சி செய்தால், கல்வி, தொழில், வேலை வாய்ப்பு, வியாபாரம், அனைத்திலும் 100 சதவீத வெற்றி கிடைக்கும்.

✱ எங்களிடம் நியூமராலஜி படியும் கல் மோதிரங்கள் கிடைக்கும் ✱ திருக்கணித பஞ்சாங்கப்படி கம்ப்யூட்டர் ஜாதகம் ரூ. 50/-

குறிப்பு: எங்கு ஜோதிடம் பார்த்தாலும் எங்களிடம் வந்து ரூ. 400/-க்கு ராசிக்கல் மோதிரம் வாங்கி பயன்பெறுங்கள். ஒரிஜினல் கல் என முழு உத்திரவாதம் தருகிறோம்.

முகவரி தெளிவாக எழுதவும். (எமது சிறப்புப் பேட்டியை விஜய் டி.வி.யில் சனிக்கிழமைதோறும் காலை 8.00 மணிக்கு காணத் தவறாதீர்கள்.

ADVT

22

'தேய்பிறை சூரியன்' கவிதைத் தொகுப்பு புத்தகத்தை வாசித்துக் கொண்டே காலை நேர டிபனை சாப்பிட்டுக் கொண்டிருந்த பார்வதா, வாசலில் எழுந்த அழைப்புமணி சப்தம் கேட்டு எழுந்து போய்க் கதவைத் திறந்தாள்.

வெளியே –

வியர்த்த முகமாய் வருண். மலர்ந்தாள் பார்வதா.

"ஹலோ... வருண்... குட்மார்னிங்...! வாங்க... உள்ளே வாங்க... என்னோட விசிட்டிங் கார்டை உங்ககிட்டே கொடுத்துட்டு வந்ததுக்கு உடனடியா பலன் கிடைச்சிருக்கே...!"

வருண் அந்தக் காலை வேளையிலும் வியர்த்துப் போயிருந்த தன் முகத்தை இரண்டு கைகளாலும் வழித்து விட்டுக் கொண்டான்.

"பார்வதா...! உன்கிட்ட கொஞ்சம் தனியாப் பேசணும்... வீட்ல யாராவது இருக்காங்களா?"

"ஒருத்தரும் கிடையாது! நான் மட்டுந்தான் இந்த அபார்ட்மெண்ட்ல இருக்கேன். எனக்குத்தான் ஃபேமிலி மெம்பர்ஸ் யாரும் கிடையாதே! இருந்த ஒரே உறவான அம்மாவும் ரெண்டு வருஷத்துக்கு முன்னாடிப் போய்ச் சேர்ந்துட்டா. இனிமே எனக்குக் கல்யாணம்ன்னு ஒண்ணு நடந்தாத்தான் புதிய உறவுகள் கிடைக்கும். ஸோ... நீங்க இப்போ உள்ளே வரலாம். தனியா எவ்வளவு நேரம் வேணும்ன்னாலும் பேசலாம். பத்து மணிக்குத்தான் ஆபீஸ். இப்போ மணி எட்டரைதான். தாராளமா ஒரு மணி நேரம் பேசலாம்..."

வருண் தயக்கமாய் உள்ளே நுழைய, கதவைச் சாற்றித் தாழிட்டாள் பார்வதா.

"டிபன் சாப்பிடறீங்களா வருண்?"

"வேண்டாம்... இப்பத்தான் சாப்டுட்டு வர்றேன்" சொல்லிக் கொண்டே அறையின் மையத்தில் இருந்த சோபாவுக்குப் போய்ச் சாய்ந்தான். பார்வதா டிபன் சாப்பிட்டக் கையை வாஷ்பேசினில் நனைத்துச் சிறிய டவலால் துடைத்துக் கொண்டே வருணுக்கு எதிரே வந்து





உட்கார்ந்தான்.

''சொல்லுங்க வருண்... ஏதாவது பிரச்னையா?''

''யெஸ்...! தயானந்த் ஸாரை நான் உடனடியா பார்க்கணும்...''

''எதுக்கு...?''

''ராத்திரி நடந்த சில வேண்டாத சம்பவங்களை அவர்கிட்டே சொல்லணும்...''

''நேத்து ராத்திரி அமுதசுரபி ஹோட்டலில் உங்களுக்கு ஒருத்தன் கொடுத்துட்டுப் போன மிரட்டல் கடிதம் பற்றித்தானே தயானந்த் ஸார்கிட்டே சொல்லப் போறீங்க...''

''அது மட்டுமல்ல... இன்னும் சில விஷயங்கள் இருக்கு.''

''என்ன...! என்கிட்ட மொதல்ல சொல்லுங்க. தீர்க்கமுடியாத பிரச்னையாக இருந்தா தயானந்த் ஸார்கிட்டே சொல்லுவோம்...''

''பார்வதா...! தயானந்த் ஸார் எனக்குக் கொடுத்த பத்து லட்ச ரூபாய் இப்ப என்கிட்ட இல்லை.''

பார்வதா முகம் மாறினாள்.

''இல்லைன்னா...?''

''யாரோ எடுத்துக்கிட்டுப் போய்ட்டாங்க.''

''எப்படி...?''

வருண் சில நிமிஷங்களைச் செலவழித்து முந்தைய ராத்திரி நடந்த சம்பவங்களைக் கோர்வையாய்ச் சொல்லி முடிக்க, பார்வதாவின் முகம் கலக்கத்துக்குப் போயிற்று.

''ஜெனிஃபர்க்கும் உங்களுக்கும் கல்யாணம்?''

''இன்னிக்குக் காலையில் ஆபத்சகாய சுந்தர விநாயகர் கோயிலில் நல்லபடியா முடிஞ்சுது. பதினோரு மணிக்கு ரெஜிஸ்டர் ஆபீஸில் பதிவுத் திருமணம்...''

''இப்படியொரு அவசர கல்யாணத்தை நான் எதிர்பார்க்கலை வருண்...''

''நானே எதிர்பார்க்கலை...! ஜெனிஃபர் காரணம் இல்லாம எந்த முடிவையும் எடுக்க மாட்டா. அதுதான் கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டேன்.''

பேய் நிழல்

ராஜேஷ் குமார்

"சரி... அந்த பத்து லட்ச ரூபாய் பணத்தை யார் எடுத்துட்டுப் போயிருப்பாங்கன்னு நினைக்கறீங்க?"

"தெரியலையே...! ஜெனிஃபரை பஸ் ஏத்தி அனுப்பிட்டு வீட்டுக்குத் திரும்பும் போது இன்ஸ்பெக்டர் பால்பாண்டியன் என்னைச் சந்திச்சு என் ஃப்ரெண்ட் லீலா கிருஷ்ணனைப் பத்தி விசாரிச்சார். நான் சொன்ன வார்த்தைகளை நம்பாமே என் வீட்டைச் சோதனை போடணும்னு சொன்னார். பணம் அவர் கைக்குக் கிடைச்சுடக் கூடாதேன்னு எகிறுகிற இதயத்துடிப்போடு போனேன். பூட்டு பூட்டினபடியே இருக்க, உள்ளே பணம் இருந்த ப்ரீப்கேஸைக் காணோம்..."

பார்வதா தன் இடதுகையின் ஆட்காட்டி விரலால் யோசனையாய் தன் புருவ மத்தியைத் தேய்த்தாள்.

"அமுதசுரபி ரெஸ்டாரெண்டில் உங்களுக்கு மிரட்டல் கடிதம் கொடுத்தானே... அவனோட வேலையாகத்தான் இது இருக்கணும்..."

"இதோ பார் பார்வதா...! இது யாரோட வேலையாக இருந்தாலும் பரவாயில்லை. இனிமே தயானந்த் ஸார்கிட்டே வேலை பார்க்க நான் விரும்பலை. அவரோட விவகாரத்துல ஏதோ ஒரு கண்ணுக்குத் தெரியாத ஆபத்து இருக்கு. அது என்னான்னு தெரியாமே ரிஸ்க் எடுக்க நான் விரும்பலை... இப்போ நான் தனிமனிதன் கிடையாது. ஒரு பொண்ணுக்குக் கணவன். ஜெனிஃபர் கிட்டே என்னோட மும்பை ஜெயில் வாழ்க்கையைப் பத்திச் சொல்லிட்டு...."

"ஒரு புது வாழ்க்கையை ஆரம்பிக்க எண்ணம் போலிருக்கு...?"

"அந்த பத்து லட்ச ரூபாயைத் தயானந்த் ஸார் திருப்பிக் கேட்டா என்ன பண்ணுவீங்க வருண்...?"


"எனக்கு என்ன பதில் சொல்றதுன்னு தெரியலை...! பார்வதா... இந்த விஷயத்துல நீதான் எனக்கு ஹெல்ப் பண்ணணும்..."

"தயானந்த் ஸார் இன்னமும் முட்டுக்காடு கெஸ்ட் ஹவுஸில்தான் இருக்கார். ஃபோன்ல பேசிப் பார்க்கலாமா?"

வருண் கலக்கமாய்த் தலையாட்ட, பார்வதா செல்போனை உயிர்ப்பித்துக் கொண்டு எண்களைத் தட்டினாள். சில விநாடிகளுக்குப் பிறகு பேச ஆரம்பித்தாள்.

"குட்மார்னிங் ஸார்..."

"......................."



"என்ன ஸார்... குரல் ஒரு மாதிரி இருக்கு. சிவியர் கோல்ட் மாதிரி தெரியுது...."

"....................."

"மாத்திரை எடுத்துக்கிட்டீங்களா?"

"......................."

"யெஸ்... ஸார்....! முக்கியமான விஷயம் தான்... வருண் இங்கே வந்திருக்கார்..."

"..........................."

"உங்ககிட்டே பேசணும்னு சொல்றார். ஃபோன்ல பேசச் சொல்லட்டுமா ஸார்?"

"....................."

"ஓ.கே. ஸார்... ஃபோன்ல எதுவும் பேச வேண்டாம். வருணும் நானும் உடனே புறப்பட்டு அங்கே வர்றோம் ஸார். இன்னும் ஒரு மணி நேரத்துல அங்கே இருப்போம் ஸார்."

பார்வதா செல்போனை அணைத்து விட்டு வருணை ஏறிட்டாள்.

"தயானந்த் ஸார், உங்களையும் என்னையும் அங்கேயே வரச் சொன்னார். டெலிபோனிக் கான்வர்சேஷனை என்னிக்குமே அவர் என்கரேஜ் பண்ண மாட்டார்."

"ப... பர்வதா...."

"என்ன வருண்...?"

"நேர்ல போய்த் தயானந்த் ஸாரைப் பார்த்துப் பேச பயமாயிருக்கு...."

பர்வதா தோள்களைக் குலுக்கினாள். "பயப்பட்டா பிரச்னை தீர்ந்துடுமா...?"

"பணத்தைப் பத்திக் கேட்டா என்ன பதில் சொல்றது...?"

"வருண்! எனக்கு ஒரு யோசனை தோணுது...! அந்த யோசனைப்படி நீங்க நடந்துக்கிட்டா தயானந்த் ஸாரோட கோபத்திலிருந்து தப்பிச்சுக்கலாம்."

"எப்படி...?"

"இப்போதைக்கு உங்களோட திடீர் கல்யாணத்தைப் பத்தியோ பணம் காணாம போனதைப் பத்தியோ தயானந்த் ஸார்கிட்டே எதுவும் சொல்ல வேண்டாம்."

"சொல்லலைன்னா... நான் அவரோட

"உனக்கு ஃபுட்பால் பிடிக்குமா? வாலிபால் பிடிக்குமான்னு கேட்டா பக்கத்துவீட்டு தனபால்தான் பிடிக்குங்கிறா...!"

– டி. என். 'சத்யா' முருகவேல்

திட்டத்துக்கு உதவி பண்ணியாகணுமே!"

"உதவி பண்ற மாதிரி நடிங்க. உடம்பு சரியில்லைன்னு ஒரு வாரம் லீவு போட்டுட்டு ஜெனிஃபரைக் கூட்டிக்கிட்டு வெளியூர் போயிடுங்க...! இப்ப நாம தயானந்த் ஸாரை எதுக்காகப் பார்க்கப் போறோம் தெரியுமா? உங்களுக்கு உடம்பு சரியில்லைன்னு சொல்லி பத்து நாள் லீவு கேட்கத்தான்."

"லீவு கொடுப்பாரா...?"

"நான் எதுக்காக உங்ககூட வர்றேன். நீங்க லீவு கேட்கும்போது நான் சிபாரிசு பண்ணத்தான்."

"எதுக்கு இப்படிப் பொய் சொல்லணும்... நடந்த எல்லா உண்மைகளையும் உள்ளது உள்ளபடி சொல்லிட்டா என்ன?"

"உண்மையைச் சொன்னா தயானந்த் ஸாரோட ரியாக்ஷன் எப்படியிருக்கும்ன்னு என்னால கெஸ் பண்ண முடியலை! சில உண்மைகளை உடனே சொன்னாச் சுடும். ஸோ... இந்த விஷயத்துல நீங்க நிதானமா செயல்படறது உத்தமம். இப்போதைக்குத் தயானந்த் ஸார்கிட்ட வந்து லீவு மட்டும் கேளுங்க போதும். மத்த விஷயங்களைப் பின்னாடி பார்த்துக்கலாம்..."


வருண் குழப்பமாய்த் தலையாட்டி வைக்க, பர்வதா தன் அறைக்குப் போய் வேறு சேலைக்கு மாறி, கார் சாவியோடு வெளியே வந்தாள்.

"போலாமா வருண்...?"

அபார்ட்மெண்ட்டைப் பூட்டிக் கொண்டு வெளியே வந்தார்கள். காரில் ஏறும் போது வருண் சொன்னான்.

"நான் பதினோரு மணிக்கு ரெஜிஸ்ட்ரார் ஆபீஸில் இருக்கணும். ஜெனிஃபர் எனக்காக வெயிட் பண்ணிக்கிட்டிருப்பா."

"டோண்ட் வொர்ரி வருண்...! பத்தரை மணிக்கெல்லாம் நீங்க ரெஜிஸ்ட்ரார்க்கு முன்னாடி இருக்கலாம்."



கார் கிளம்பியது.

மதுராந்தகம் போலீஸ் ஸ்டேஷன். காலை ஒன்பது மணி.

லாயர் மனோன்மணி தன் யூனோ பியட் காரை ஸ்டேஷனுக்கு முன்பாய் நிறுத்திவிட்டு உள்ளே போக, க்ரைம் அக்கரன்ஸ் ஃபைலைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் பால் பாண்டியன் நடைச்சப்தம் கேட்டு நிமிர்ந்தார்.

"குட்மார்னிங் இன்ஸ்பெக்டர்... நான் லாயர் மனோன்மணி..."

"வாங்க...! உங்களுக்காகத்தான் வெளியே எங்கேயும் போகாம வெயிட் பண்ணிட்டிருக்கேன். நேத்து ராத்திரி நீங்க எனக்கு


டெலிபோன் பண்ணி பேசும்போது நிலைமை சரியில்லாத இடத்துல இருந்தேன். அதான் உங்களை ஸ்டேஷனுக்கே வரச் சொன்னேன். உட்காருங்க... ப்ளீஸ் பி ஸிட்டட்..."

"தேங்க்யூ...." மனோன்மணி உட்கார்ந்ததும் கேட்டார். "உங்களுக்கு யமுனாவை எப்படித் தெரியும்?"

"நானும் அந்தப் பெண்ணும் ஒரே குடியிருப்புப் பகுதியில் இருக்கோம். யமுனாவோட மாமனார் சிவப்ரகாசம் ஹைகோர்ட்ல ஜட்ஜாய் இருந்து ரிடையரானவர். ரொம்பவும் மரியாதைப் பட்டக் குடும்பம். யமுனா அந்த வீட்டுக்கு மருமகப் பொண்ணு கிடையாது. மஹாலட்சுமி."

இருநூறு ரூபாய்க்குக் கம்ப்யூட்டர்!

திம்மாத்துண்டு போல்ட் நட்டிலிருந்து, மெகா சைஸ் டி.வி.வரைக்கும் காயலான் கடைக்கு வந்து விட்ட நேரத்தில் புதிதாக இப்போது என்ட்ரி ஆகியிருக்கிறது கம்ப்யூட்டர்.



திருச்சி கீழப்புலிவார்டு ரோட்டில் காயலான் கடை ஒன்றில் ஹாயாக அமர்ந்து மௌஸ் சகிதம் போஸ் தரும் இந்தக் கம்ப்யூட்டர்களை, ஒரு நிமிடம் நடைக்குப் பிரேக் கொடுத்து ஆச்சரியத்தோடு வேடிக்கைப் பார்க்கிறார்கள் இப்பகுதி மக்கள்.

"கம்ப்யூட்டர்ல புதுசு புதுசா பெண்டியம் மூனு நாலுன்னு வந்துக்கிட்டிருக்காம். இதெல்லாம் பழைய பாடாவதியாம். அதான் சேல்ஸ் பண்ற இடத்துல கொட்டேஷன் கொடுத்து ஏலத்துல விடறாங்க. விலை எவ்வளோன்னு நினைக்கிறீங்க. வெறும் இருநூறு ரூபாதான். ஆனா முந்நூறு ரூபாய்க்குத் தள்ளிவிட்டிருவேன்" என்கிறார் இதை விற்பனைக்கு வைத்துள்ள ராமர்! அடராமா!

– திரு

பால்பாண்டியன் தன் பெரிய மீசைக்குக் கீழே ஒரு சாக்பீஸ் கோடு மாதிரி சிரித்தார்.

"அந்த மஹாலட்சுமி என்கிட்டேயே பொய் சொல்லியிருக்காளே... லீலாகிருஷ்ணனைத் தெரியவே தெரியாதுன்னு சத்தியம் பண்ணாத குறையா சொன்னது சரியா?"

"தப்புத்தான்...! கொஞ்சம் பயந்த சுபாவம். லீலாகிருஷ்ணனாலே ஏதாவது பிரச்னை வருமோன்னு பயந்து போய் அப்படிச் சொல்லியிருக்கா... ஷி ஈஸ் இன்னஸன்ட் அண்ட் சைல்டிஷ்...!"

"ஸாரி மேடம்... நீங்க நினைக்கிற மாதிரி யமுனா கிடையாது. லீலாகிருஷ்ணனும் யமுனாவும் ஒருத்தரையொருத்தர் விரும்பியிருக்காங்க... யமுனா ஒரு பெரிய பணக்கார வீட்டுக்கு மருமகளான பின்னாடியும் அவங்களுக்குள்ளே தொடர்பு இருந்திருக்கு. லீலாகிருஷ்ணன் அவ்வளவு நல்லவன் கிடையாது. இல்லீகல் ஆக்டிவிட்டீஸும் நிழல் காரியங்களும் அதிகம். பணம் தேவைப்படும்போதெல்லாம் லீலாகிருஷ்ணன் யமுனாவிடம் கேட்க, யமுனாவும் பண உதவி பண்ணிட்டு வந்திருக்கா."

மனோன்மணி குறுக்கிட்டாள்.

"இதுக்கெல்லாம் ஆதாரம் இருக்கா?"

"ஆதாரம் இல்லாமே ஒரு அரசியல்வாதி பேசலாம். ஒரு போலீஸ் ஆபீஸர் பேச முடியாது. கல்யாணத்துக்கு முன்னாடி யமுனா, லீலாகிருஷ்ணனுக்கு வாழ்த்து அட்டைகளும் லெட்டர்ஸும் எழுதியிருக்கா. கல்யாணத்துக்கு அப்புறமும் எழுதியிருக்கா. கேட்டா அதில் இருக்கிற கையெழுத்துத் தன்னோடது இல்லேன்னு சொன்னா. ஆஞ்சநேயர் கோயில்ல அவள் கொண்டு வந்து கொடுத்த கையெழுத்து மாதிரியை ஃபாரன்ஸிக்கில் இருக்கிற க்ராஃபாலஜிஸ்ட்கிட்டே கொடுத்து கம்பேர் பண்ணச் சொன்னோம். ரிசல்ட் என்ன தெரியுமா?"

"சொல்லுங்க..."

"ரெண்டு கையெழுத்தும் ஒரே கையெழுத்துதான்."

"ஐ கான்ட் பிலீவ் திஸ்..."

"உங்களாலே நம்ப முடியாதுதான். ஏன்னா யமுனாங்கற குற்றவாளிக்கு ஒரு லாயரா வந்திருக்கீங்க. உங்ககிட்டே இப்பவே இன்னொரு விஷயத்தையும் சொல்லிடறேன். கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதான் லீலாகிருஷ்ணனின் போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் என் கைக்கு வந்தது. டாக்டர்ஸ் அந்த ரிப்போர்ட்ல ஆணித்தரமாக ஒரு விஷயத்தைச் சொல்லிட்டாங்க."

"என்ன....?"

"லீலாகிருஷ்ணனின் மரணம் தற்கொலை அல்ல. திட்டமிட்ட கொலை. கோல்ட் ப்ளட்டட் மர்டர்..."

(தொடரும்)

கண்ணீருடன் 'ராஜ' மரியாதை!

"ஹலோ... நான் காஷ்மீர்ல இருந்து ராஜா பேசறேன்..."

குரலைக் கேட்டதும் மனம் உற்சாகத்தில் துள்ள "எப்படி யிருக்கீங்க?" என்கிறார் இருபத்திமூன்று வயது வத்சலா.

திருமணமான ஆறாவது நாளே கணவரைக் காஷ்மீருக்கு அனுப்பிவிட்டு 'எப்போது வருவார்?' எனக் காத்திருக்கும் மனைவிக்கு இந்த உற்சாகத் துள்ளல் வராதா என்ன?

"கவலைப்படாதே ரெண்டு மாச லீவு சாங்ஷன் ஆயிருச்சு; கடனை அடைக்கப் போட்டிருந்த பிராவிடண்ட் பண்ட் லோன் கிடைச் சிருச்சு; ஜூன் பதினெட்டாம் தேதி காலைல உன் முன்னால நிற்பேன் ஓ.கே.வா...?" பேசிவிட்டு ஃபோனை வைத்தார் காஷ்மீரில் இந்திய ராணுவத்தின் 68வது பீல்டு ரெஜிமெண்டில் நாயக்காக பணிபுரியும் ராஜா.

திருச்சி மாவட்டம், சமயபுரத்தில் இருக்கும் மாமனார் வீட்டில் கணவரின் ஆசை வார்த்தைகளை அசைபோட்டபடி இருந்த வத்சலா வுக்கு அன்று இடியென வந்தது அந்தச் செய்தி. தீவிரவாதிகளின் குண்டுக்கு ராஜா பலி!

"அவன் ஃபோன் பண்ணிய அன்றைக்கு இரவு காஷ்மீர்ல புலுவா மாவட்டம் சக்குவாரா கிராமத்தில் தீவிரவாதிகளைத் தேடி இராணுவத்தினர் ரோந்து போயிருக்காங்க. திடீர்னு தீவிரவாதி கள் கும்பலா நின்னு துப்பாக்கியால சுட்டிருக்காங்க. நம்ம ராணுவத்தினரும் திருப்பிச் சுட்டிருக்காங்க. இந்தச் சண்டையில என் மகன் மேல குண்டுபாய்ஞ்சு..." சொல்லும் போதே இலேசாக மனம் உடைகிறார் ராஜாவின் தந்தை து. சுந்தரமூர்த்தி.

இவரும் முன்னாள் இராணுவ வீரர். தமது இருபது வருட இரா ணுவ வாழ்வில் 1965 பாகிஸ்தான் யுத்தம், 1971 பங்களாதேஷ் யுத்தத் திலும் பங்கு பெற்றிருக்கிறார். இவ ரின் இளைய மகன் பாஸ்கரும் இராணுவத்தில்தான் பணிபுரிகிறார்.

"என் மகன் ராஜா துணிச்சல் காரன். தீவிரவாதிகளை ஒடுக்கிய தற்காக பலமுறை அவன் மேலதிகாரிகளிடமிருந்து விருது வாங்கி யிருக்கான்." என்ற சுந்தரமூர்த்தி சிறிது நேர மௌனத்துக்குப் பின் தொடர்கிறார்.

"கல்யாணத்துக்கு ரெண்டு மாச லீவு கிடைக்கலை. பதினைஞ்சு நாள் லீவு எடுத்துட்டு வந்தான். ஏப்ரல் 29ம் தேதி கல்யாணம். ஆறு நாள் வீட்ல இருந்தான். மே 6ம் தேதி காஷ்மீருக்குத் திரும்பிட்டான்... என் மகன் இந்த தேசத்துக் காக உயிர் விட்டது துல எங்க குடும்பம் ரொம்ப பெரு மைப்படுது" என்கிறார் இந்த முன்னாள் இராணுவ வீரர்.

கலெக்டரிலிருந்து இராணுவ அதிகாரிகள் வரை வந்து ராஜா வின் உடலுக்கு மரியாதை செய்துவிட்டுச் சென்ற போது, 'வெறும் ஆறு நாட்கள் மட்டுமே கணவனின் முகம் கண்ட அந்த இளம்பெண்ணுக்கு என்ன ஆறுதல் சொல்வது?' என்றுதான் பேசிக் கொண்டார்கள்.

- திருநாவு



• இராணுவ முகாமில் ராஜா



வாக்காளர் பட்டியல்

வில்லிவாக்கம் தொகுதியில் சுயேச்சையாகப் போட்டியிட்டவர் வீரவான் விஸ்வநாதன். தேர்தல் நாளன்று அம்பத்தூர் நகராட்சித் தொடக்கப் பள்ளியில் வோட்டுப் போடப் போனவருக்கு ஷாக். "வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயர் இல்லை. நீங்கள் வோட்டுப் போட முடியாது" என்று சொல்லி விட்டார் அதிகாரி! "வாக்காளர் பட்டியலில் உள்ள பாகம் எண், வரிசை எண் எழுதித்தானே வேட்பாளர் மனு போட்டேன். அதை ஏற்றுக் கொண்ட பிறகு இப்போது பெயர் இல்லை என்றால் எப்படி?"- ஆத்திரம் பொங்கக் கேட்டதில் ஒரு பயனும் இல்லை. இது ஒரு சோறு தான். நடந்து முடிந்தத் தேர்தலில் சுமார் ஒரு கோடிக்கும் அதிகமான வாக்காளர்கள் பெயர், பட்டியலில் விடுபட்டுப் போனதாகச் சட்டசபையில் சொன்னார் முன்னாள் அமைச்சர் பொன்முடி.

காரைக்குடி நகரத்தில் மட்டும் சுமார் இருபதாயிரம் வாக்காளர்கள் பெயர் மிஸ்ஸிங். அங்கு மட்டுமா? திருவொற்றியூர், திருச்சி, கோவை மேற்கு, ஆலந்தூர், சேலம் நகரம், வீரபாண்டி ஆகிய தொகுதிகளில் ஆயிரக்கணக்கான வாக்காளர்கள் பெயர்கள் காணாமல் போய் விட்டன.

வோட்டுப் போடுவதில் உள்ள முறைகேடுகளை ஒழிக்கத்தான் வாக்காளர் அடையாள அட்டை கொண்டு வந்தார்கள். அதைக் கொடுப்பதிலும் ஆயிரத்தெட்டுப் பிரச்னைகள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை சுமார் அறுபது சதவிகிதம் வாக்காளர்களுக்குத்தான் அட்டை கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த அட்டை வைத்திருந்தும் பலருக்கு வாக்குரிமை மறுக்கப்பட்டதுதான் கொடுமை.

நெல்லை மாவட்டம் ராதாபுரம் தொகுதியைச் சேர்ந்த நதிப்பாறை கிராம வாக்காளர் கொலுவையா அடையாள அட்டை வைத்திருந்தும் வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லை. வந்த ஆத்திரத்தில் வாக்குச் சாவடிக்கு எதிரேயே அட்டையைத் தீயிட்டுக் கொளுத்தி விட்டார். சென்று பாராளுமன்றத் தேர்தலில் வோட்டு போட்டவருக்கு இந்த முறை ஏமாற்றம். ஒரே குடும்பத்தில் ஒருவருக்கு வாக்கு உண்டு, மற்றவர்களுக்கு இல்லை. ஒரே முகவரியில் வீட்டு உரிமையாளர்களுக்கு வோட்டு கிடையாது, குடித்தனக்காரர்களுக்கு உண்டு. தமிழ்நாடு முழுவதும் இப்படி குளறுபடிகள்.

எப்படி வந்தது இந்தக் கோளாறு? இதற்கு யார் பொறுப்பு? ஒவ்வொரு முறையும் தேர்தல் வருவதற்குச் சில மாதங்களுக்கு முன்பு பதினெட்டு வயதானவர்கள் தங்களைப் புதிய வாக்காளர்களாகப் பதிவு செய்து கொள்ளலாம் என்று அறிவிப்பு வரும். ஆனால் இந்த அறிவிப்பைப் பார்த்துவிட்டு பெரும்பாலும் எந்த தனிப்பட்ட நபரும் தன் வேலையை விட்டுவிட்டு தாசில்தார் அலுவலகத்தை நோக்கி ஓடுவதில்லை. கட்சிக்காரர்கள், குறிப்பாக தி.மு.க., அ.தி.மு.கவைச் சேர்ந்த உள்ளூர் தொண்டர்கள்தான் தாசில்சார் அலுவலக நமூனாவை எடுத்துக் கொண்டு தெருத்தெருவாகப் போய் ஆட்களைச் சந்தித்து, நமூனாவை நிறைவு செய்து சமர்ப்பிக்கிறார்கள். அப்படித்தான் இந்த முறை அண்ணாநகர் தொகுதியில் 48000 புதிய வாக்காளர்கள் சேர்க்கப்பட்டனர். உடனே அ.தி.மு.கவினர், 'தி.மு.கவினர் போலியாக ஆயிரக்கணக்கானவர்களைச் சேர்த்து விட்டார்கள். எனவே தேர்தல் கமிஷன் நேரடியாகத் தலையிட்டு வீடு, வீடாகச் சென்று சரிபார்த்துத்தான் வாக்காளர்களைச் சேர்க்க வேண்டும்' என்று புகார் கொடுத்தார்கள். இது போன்ற புகார்கள் வேறு தொகுதிகளில் இருந்தும் வந்ததால் தேர்தல் கமிஷன், தமிழகத்தில் நகர்ப்புறங்களைச் சேர்ந்த 42 சட்டமன்ற தொகுதிகளில் புதிய வாக்காளர் பற்றிய விவரங்கள் நூறு சதவீதம் சரி பார்க்கப்பட வேண்டும்' என்று ஆணையிட்டு விட்டது.

''எங்கள் அண்ணா நகரில் வாக்காளர் எண்ணிக்கை 3,42,000. 48000 பேரைச் சேர்த்தோம். வெரிஃபிகேஷனுக்குப் பிறகு 96000 பேரை எடுத்து விட்டார்கள். இதில் வேடிக்கை



என்னவென்றால் ஆற்காடு வீராசாமி பெயரையும், அவர் குடும்பத்தினர் பெயரையும் 'வீட்டில் ஆட்கள் இல்லை' என்று எடுத்து விட்டார்கள் என்றால் அவர்கள் செக் செய்த லட்சணத்தைப் பார்த்துக் கொள்ளுங்கள்! அப்புறம், மிகவும் போராடி, அத்தாட்சிகள் எல்லாம் கொடுத்து 78000 பேர்களை மீண்டும் சேர்த்தோம்'' என்கிறார் அண்ணாநகர் தொகுதி தி.மு.க. செயலாளர் சோ.மா. ராமச்சந்திரன்.

யலைத்தான் ப்ளாப்பி போடக் கொடுத்தோம்'' என்கிறார்கள். யாரும் இந்த அநியாயத்திற்குப் பொறுப்பு ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. இது ஒரு பக்கம் இருக்க, பல தொகுதியில் இணைப்புப் பட்டியல் என்ற ஒன்றைத் தனியாக தயாரித்து வைத் திருந்தார்கள். அந்தப் பட்டியலில் பென்ஸிலால் கோடு போட்டு 'D' என்று

தில்லுமுல்லு!

தேர்தல் கமிஷன் உத்தரவுபடி வீடு, வீடாக செக் செய்ய அனுப்பப்பட்டவர்கள் தங்கள் பணியை ஒழுங்காகச் செய்யவில்லை என்பதுதான் கட்சிக்காரர்களின் குற்றச்சாட்டு. ஒரு தெருவில் ஒரு இடத்தில் நின்று கொண்டு, தெரு முழுக்க இருப்பவர்களைப் பற்றி விசாரித்து முடிவு செய்தால் எப்படிச் சரியாக வரும் என்று கேட்கிறார்கள் அவர்கள். வீடு, வீடாக போய் செக் செய்யப்படாதது மட்டுமல்ல, சில இடங்களில் கட்சிக்காரர்கள் தவறான நோக்கங்களுடன் அவர்களை திசைத் திருப்பிவிட்டார்களாம்.

குறிப்பாக நகர்ப்புறங்களில் இருபது சதவிகிதம் கூட வெரிஃபிகேஷன் நடக்கவில்லையாம்.

''வெரிஃபிகேஷன் பணியில் ஈடுபட்ட அரசு ஊழியர்களின் கணக்கம் மற்றும் வழக்கமான சோம்பேறித்தனம் காரணமாகத்தான் பல நியாயமான வாக்காளர்கள் பெயர்கள் கூட பட்டியலில் விடுபட்டுப் போய்விட்டன'' என்று சட்டமன்றத்தில் சொன்னார் பேராசிரியர் அன்பழகன்.

இப்படிச் ''சரிபார்க்கப்பட்ட'' பட்டியல் அச்சடிக்கப்பட்டபோது அங்கும் ஏதாவது 'சொதப்பல்' நடந்ததா? என்று விசாரித்தோம். சென்னை நகர வாக்காளர் பட்டியலுக்குப் பொறுப்பானவர் மாநகராட்சியில் உள்ள வருவாய் கோட்ட அதிகாரி. ஆட்சி மாறிவிட்ட நிலையில் அதிகாரிகள் வாயைத் திறக்கவே யோசிக்கிறார்கள். இந்த முறை தொகுதி வாரியாகச் ''சரிபார்க்கப்பட்ட'' பட்டியல் அரசு நிறுவனமான எல்காட்டில் கொடுக்கப்பட்டு ப்ளாப்பியில் (floppy) அடக்கப்பட்டதாம். வேட்பாளர்களுக்குப் ப்ளாப்பிதான் கொடுக்கப்பட்டது. ''அதில் பெயர்கள் விடுபட்டுப் போனதற்கு நாங்கள் காரணமல்ல'' என்கிறார்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள்.

மாநகராட்சியில் கேட்டால் ''திருத்தப்பட்ட பட்டி

போடப் பட்டிருந்தவர்களுக்கு வோட்டுப் போட அனுமதியில்லை.

''இது போன்ற நிலைக்கு அரசை மட்டும் குறை கூறிப் பயனில்லை. மக்களும் விழிப்பாக இருக்க வேண்டும். ஒவ்வொரு முறை தேர்தல் வரும்போதும் முன் கூட்டியே வாக்காளர் பட்டியல் பற்றிய அறிவிப்புகளைப் பத்திரிகைகளில் வெளியிடுகிறோம். அதன்படி ஒவ்வொரு வாக்காளரும் சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் இறுதிப் பட்டியலை பார்த்து, தங்கள் பெயரை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். வரும் தேர்தலுக்குள் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைகளை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்'' என்கிறார் உயர் அதிகாரி ஒருவர். வெள்ளம் போன பிறகு அணைக்கட்டும் விவகாரம்தான் இது.

- ப்ரியன்



இடது சாரிகளுக்கு ஒரு பிரசார பீரங்கி!

மா நிலக் கல்லூரியின் மாணவியர் விடுதியில் 'ரோஜாக் கூட்டம்' படப்பிடிப்பு. ஆண்கள், பெண்கள் என்று ஒரு நூறு முகங்களுக்கு மத்தியில், பகலில ஒரு பௌர்ணமி மாதிரி ஒரு பளிச் முகம். அது, தர்மாவரம் பட்டுப்புடவையைத் தழையத் தழைய உடுத்தி, தலைநிறைய மல்லிகைப் பூ மணக்க, மணப்பெண் கோலத்திலிருந்த பூமிகாவின் முகம்.

'பத்ரி' படத்தில் விஜயின் காதலுக்காக ஒரு தலையாய் உருகி உருகி, தமிழ் ரசிகர்களையும் உருக்கிய இந்தக் கொல்கத்தா தேவதைக்கு, இந்தப் படத்தில் மணப் பெண்ணாகப் பதவி உயர்வு கிடைத்துவிட்டது போலும். படப்பிடிப்பு இடைவேளையிலும்கூட புதுமணப் பெண் போல சந்தோஷமும், வெட்கமும் சரிவிகிதத்தில் வழிந்தோடிக் கொண்டிருந்த பூமிகாவை க்ளோசப்பில் பிடித்தோம்.

"வடக்கேயிருந்து வரும் நடிகைகள் எல்லோரும் தமிழ்நாட்டு மருமகள் ஆகிவிடுவது என்று ஏதாவது விரதம் பூண்டிருக்கிறீர்களா?"

முதல் கேள்வியே கொஞ்சம் எடக்கு மடக்காக இருந்ததும், எழில்முகம் கொஞ்சம் இறுகிப் போயிற்று. இருந்தாலும் கொஞ்சமாய் உமிழ்நீர் விழுங்கி, "உங்கள் கேள்விக்கு என்ன அர்த்தம்" என்று தைரியமாகக் கேட்டார் பூமிகா.

குஷி பட தெலுங்கு ரீமேக்கின்போது, உங்களுக்கும் இயக்குனர் சூர்யாவுக்கும் காதல் கனிந்து விட்டது என்று செய்திமேல் செய்தி வருகிறதே...எப்போ கல்யாணம்?

இந்த முறை கேள்வி புரிந்துவிட்டதால், தவிர்க்க முடியாமல் பதில் வந்தது :

"நான் தமிழுக்குப் புதியவள். கிககிக்க புதிய முகமாக இருக்கிறேன் என்பதால் இப்படிச் செய்தி போடுகிறார்கள். இந்தச் செய்தியால், பத்திரிகையின் விற்பனை உயர்ந்ததோ இல்லையோ, நானும் ஒரு மனுஷி, எனக்கும் மனசு என்று ஒன்று உண்டு என்பதை, எழுதியவர் கொஞ்சம் யோசித்திருக்கலாம். நீங்களாவது இந்தச் செய்தியில் உண்மை இல்லை என்று எழுதுவீர்கள்தானே?" என்று வேண்டுகோள் விடுத்த பூமிகாவின் கைகளில் ஓர் ஆங்கிலப் புத்தகம் 'தி டைரி ஆஃப் மிஸஸ் ஜோன்ஸ்.'

"சரி விடுங்கள் இதென்ன புத்தகம்...?" - பூமிகாவை முற்றிலும் வேறு மனநிலைக்கு இழுத்து வரும் முயற்சியாக இந்தக் கேள்வி.

"இந்தப் பெண்மணி தமது நாற்பதாண்டு டைரிக் குறிப்புகளையே புத்தகமாகப் போட்டிருக்கிறார். ரொம்ப சுவாரஸ்யம். ரொம்ப தைரியமும்கூட." என்றவரை இடைமறித்து "புத்தகத்தில் அப்படி என்ன இருக்கிறது?" என்றோம்.

"சந்தோஷம், துக்கம், ஏமாற்றம், வீரம், காதல், சாதனை இன்னும் நிறைய." என்று சுருக்கமாகச் சொன்ன பூமிகாவிற்கு வாசிப்பதைத் தவிர மற்றொரு பொழுதுபோக்கு

அகாடமி விருது பெற்ற படங்களையும், நாமினேட் செய்யப்பட்ட படங்களையும் தேடிப்பிடித்துப் பார்ப்பதாம்.

" 'ஸ்லீப்பிங் வித் தி எனிமி', என்றொரு படம் சமீபத்தில் பார்த்தேன். சாடிஸ்ட் கணவனிடமிருந்து தப்பித்து ஓடி வந்து இன்னொரு நெருக்கமான நகரில் ஒரு ஒண்டுக் குடித்தனத்தில் ஜுலியா ராபர்ட்ஸ் தன்னம்பிக்கையோடு வாழ்க்கையைத் தொடங்குவாங்க. இதை மோப்பம் பிடித்து, கணவன் வந்துவிடுவான். இதில் இம்மியளவுகூட மசாலா தூவாமல் எத்தனை அருமையா காட்டியிருக்காங்க. எனக்கு 'ஹெலன் ஹண்ட்' நடிப்பு ரொம்ப பிடிக்கும். அவங்கள இமிடேட் செய்ய முடியுமான்னுகூட முயற்சி செய்து பார்க்கறேன்" என்று சொல்லும் பூமிகா அறிமுகமானது தெலுங்கில்.

"ஒரு அண்ணன், ஒரு அக்கா, ஒரு தங்கை. மிடில்க்ளாஸ் ஃபேமிலி. ப்ளஸ் டூ முடித்த பிறகு கம்ப்யூட்டர் கோர்ஸ் போய்க் கொண்டிருந்தேன். நடு ரோட்டில் என்னை வழிமறித்து ஒரு விளம்பரத்துக்கு மாடலிங் செய்யறியான்னு கேட்டாங்க. முதலில் விளம்பரம். பிறகு ஒன்றிரண்டு மியூசிக் வீடியோஸ் அதைப் பார்த்துவிட்டுத்தான் தெலுங்கில் வாய்ப்புக் கொடுத்தாங்க. அங்கே இரண்டே படம்தான். அதற்குள் தமிழில் அழைப்பு. கையிலிருக்கும் ஒரே படம் 'ரோஜாக் கூட்டம்' " என்று வாக்குமூலம் கொடுத்த பூமிகா "ஃபீலிங்ஸ், எமோஷன்ஸ் இருக்கிற கேரக்டர்ஸ் மட்டும் கொடுங்கன்னு டைரக்டர்கள்கிட்ட கேட்கிறேன். தேவையில்லாமல் கிளாமர் பக்கம் விழுந்துடமாட்டேன். காரணம் என்னோட இயற்கையான தோற்றம் எந்த மாநிலத்துக்குப் போனாலும் என்னோட முகம், அங்கே பொருத்திடும்ன்னு எல்லோரும் சொல்றாங்க. அதை நான் கெடுத்துக் கொள்ள விரும்பவில்லை"

நடந்து முடித்த சட்டமன்றத் தேர்தலில் வோட்டுப் போடுவதற்காக விமானம் பிடித்து மேற்கு வங்கம் போய் வந்தாராம். காரணம் "இது தான் எனது கன்னி வோட்டு. அதை எப்படிப் போடாமல் இருப்பது" என்று பொறுப்பாகக் கேட்கிறார்.

"அதெப்படி முப்பது வருஷமாக அரிவாள் சுத்தியலுக்கே ஓட்டுப் போடுறீர்கள் போரடிக்கவில்லையா.." என்றால்,

"சாப்பிடுவது, தண்ணீர் குடிப்பது எங்காவது போரடிக்குமா? இல்லை உணவு இல்லாமல்தான் உயிர் வாழ முடியுமா.. அப்படித்தான் அங்கே கம்யூனிஸ்டுகள் வங்காள மக்களோடு கரைந்துவிட்டார்கள்."

இடது சாரிகளுக்கு ஒரு செல்லுல்லாய்டு பிரசார பீரங்கி... சாரி... தேவதை - ரெடி!

சந்திப்பு : **ஆர்.சி. ஜெயந்தன்**

படங்கள் : **ராஜன்**





வினோத்

மெகா தொடர் என்று அறிவிக்கப் பட்டுள்ள 'அதிசய ராகங்கள்' முதல் எபிஸோடு was a bit of a damp squib. கல்யாண தினத்தைக் கொண்டாடும் இளம் தம்பதி (பிஸினஸ் சரியில்லாததால் கணவனின் சோகம் வேறு) பிள்ளையார் கோவிலுக்குப் போக, அஷ்டோத்திர அர்ச்சனையிலேயே சப்தோத்திர நேரம் செலவாகிவிடுகிறது. ஒரு சாமியாரிடம் ஆசி பெறுகிறார்கள். அவருடைய ஞானக் கண்ணில் ஏதேதோ விபரீதக் காட்சிகள் தெரிய, அவர்கள் போன பிறகு சீடர்களிடம், 'பாவம் இதுதான் இவர்களுடைய கடைசிக் கல்யாண நாள்' என்கிறார். வரும் வாரங்களில் விறுவிறுப்புத் தூறல் போடக் கூடும் என்பதற்கான மேக மூட்டம் தென்படுகிறது (விஜய்).

அது கிடக்கட்டும் பொழுது புலருகிறது என்பதைக் காட்ட, கௌசல்யா சுப்ரஜா ராமாவை விட்டால் வேறு பாட்டுக் கிடையாதா? ஸ்நானம் செய்து ஈரத் தலைக்கு வெள்ளைத் துணி கட்டிக் கொண்டுப் பூஜைத் தட்டுடன் போகும் பெண்ணை விட்டால் வேறு பாத்திரம் கிடையாதா? தட்சிணா மூர்த்திப் பெருமானே, உனக்குக் கொண்டைக் கடலை நைவேத்தியம் படைக்கிறோம். காலை நேரத்தைப் புதுமையாகக் காட்டத் தெரிந்த ஒரு டைரக்டரைப் படைத்துப் பூலோகத்துக்கு அனுப்பி வையேன்.



• ருத்ரன்





• மதன்

அழகிய தாடிக்கார டாக்டர் ருத்ரனைப் பார்த்து ரொம்ப நாளாகிறது. ஏதாவது ஒரு சேனலில் வந்து கொண்டிருக்கிறாரோ என்னவோ, கண்ணில் படவில்லை. எனவே நீட்டிய கையும் குடைகிற கண்களுமாய் அவருடைய பேச்சைக் கேட்டபோது சந்தோஷமாயிருந்தது.

பிளஸ் டு தேர்வுகளில் ஜெயித்தவர்களுக்கு எல்லாரும் வாழ்த்துச் சொல்லிக் கொண்டிருந்த நேரத்தில், தோல்வியடைந்தவர்களுக்குத் தைரியம் சொன்னவர் டாக்டர் ருத்ரன். வித்தியாசமான விஷயம். சில நிமிடங்கள் தான் என்றாலும் it spelt class from start to finish.


உபயோகமான காரியம்தான் ஜெயா டீவி செய்தது. ஆனால் பின்னணியில் 'தற்கொலையா?' என்று எதற்காக மகா கொட்டை எழுத்தில் ஒரு போஸ்டர் ஒட்டி வைத்திருந்தார்கள்? மனசைத் தேற்றிக் கொண்டு விட்ட மாணவ மாணவிகளுக்குக் கூட ஐடியா கொடுக்கிற மாதிரி இருந்தது.

யாரை யார் தாக்குகிறார் அல்லது தூக்குகிறார் அல்லது மோதுகிறார் என்று தெரியவில்லை. யார் விழுகிறார் யார் எழுகிறார் என்று புரியவில்லை. ஒரு நிமிடம் கால்களின் காடு. மறு நிமிடம் கைகளின் மாநாடு. மூன்றாவது நிமிடம் இடுப்புகளின் சுயராஜ்யம். இவ்வளவுக்கும் நடுவே ஒருவர் கெட்டுப் போன எதையோ தேடுகிறவர் போலத் தரையில் குனிந்து தவழ்ந்து எதையோ தேடுகிறார்.

புயல் அடித்து ஓய்ந்த மாதிரி இருந்தது பான் ஜோவி

குழுவின் புதிய பாட்டான one wild night பாட்டைக் கேட்டு முடிந்த போது ('வி' சேனல்), ஸந்தூர் கலைஞர் சிவ குமார் சர்மா ஒரு பேட்டியில், I want to create music that would make the audience forget to clap என்று சொன்னார். ஆனால் தாள வெள்ளத்தில் நம்மை மூழ்கவைக்கும் இந்த வசைப்பாட்டும் தேவைதான்.

The bill that will never be passed என்ற பட்டம் வந்துவிட்டது பெண்களுக்கான இட ஒதுக்கீடு மசோதாவுக்கு. ஆனால் டீ.வி. நிகழ்ச்சிகளைப் பார்க்கும்போது ஆண்களுக்கான இட ஒதுக்கீடு மசோதா வந்தால் தேவலை என்று தோன்றுகிறது. லேட்



கௌசல்யா, சுப்ரஜா, ரம்யா,

டஸ்ட் ஆக்கிரமிப்பு : குஷ்பூ Acquiring a new Avatar.

கோடீஸ்வரி மூலம் அவர் அமிதாப்களையும் சரத்குமார்களையும் வீழ்த்துகிறாரோ இல்லையோ, அறிவிப்புகளில் she performs with absolute ease. பேச்சு அட்டகாசம். வகைவகையான உடைகள் அதற்குமேல் அட்டகாசம். சுடிதார், சல்வார் கமீஸ்களை விடப் புடவையில் சாந்தமாகவும் பளிச்சென்றும் தெரிகிறார். அசல் நிகழ்ச்சியின்போதும் அப்படியே தோன்றுவாராக. செய்தி வாசிக்கிற, பேட்டி காணுகிற, போட்டி நடத்துகிற ஆண்கள் மொத்தப் பேரும் வியர்த்துக் கொட்டும் கோட் சூட், டையில் சகிக்க முடியாமல் வருவதால் ஒரு பெண்ணாவது தமிழ் உடையில் இருக்கட்டுமே?

ரஜினிக்கும் தனக்குமுள்ள சினேகம், ரஜினியின் பெருந்தன்மை, ரஜினியின் நடிப்புத் திறன், ரஜினியின் சுறுசுறுப்பு - இப்படி ஏராளமாக ஆகா ஓகோவென்று மதனுக்குக் கமல் தந்த பேட்டி முன்பே வேறொரு சேனலில் வந்ததுதான். அதை இப்போது பார்த்து சவிஸ்தாரமாக ஜெயா மறு ஒளிபரப்பு செய்தது தற்செயலாகவா அல்லது யாரையோ சந்தோஷப்படுத்துவதற்காகவா?

Let us give them the benefit of the doubt.

ரிமோட்

கிராஃபிக்ஸ் கலக்கல், அனிமேஷன் அசத்தல், பிரமிப்பூட்டும் கிராஃபிக்ஸில் அம்மன் ஆட்டம் என்று தெய்வங்களே (சினிமா தெய்வங்கள் தான்) கிராஃபிக்ஸ் தயவில் நிற்க வேண்டிய அளவிற்கு டைனோசராக வளர்ந்து விட்டது கிராஃபிக்ஸ் தொழில்.


உலகின் நம்பர் ஒன் அனிமேஷன் கம்பெனியாகத் திகழும் "பென்டா மீடியா கிராஃபிக்ஸ்"(Penta media Graphics)சின் கதவைத் தட்டினோம்.

அனிமேஷன் இன்டஸ்ட்ரி...

"அனிமேஷன் பெருந்தொழில், உலக அளவில் 2000 ஆண்டில் 32 பில்லியன் டாலராகயிருந்து 2002ல் 45 பில்லியன் டாலர்களை எட்டுமெனக் கணிக்கப்பட்டுள்ளது. (1 பில்லியன் டாலர் ரூ 4500 கோடி!) பெரிய திரை, சின்னத் திரை, அட்வர்டைசிங், கம்ப்யூட்டர் கேம்ஸ் என்று பல கிளைகள் கொண்ட இந்த பிசினஸின் பெரும் பங்கைப் பிடிக்க பிரதான தேவை தேர்ச்சி பெற்ற மனித வளம் (Trained Manpower)" என்றனர் அங்கிருந்த அதிகாரிகள்.

பென்டாமீடியா...

"சினிமாவில் 'ட்ராஃபிக் ஜாம்'



• வகுப்பறை

மேல்நாட்டுத் தொழில்நுட்பம், அதன் அசுர வளர்ச்சிதான் இதற்குக் காரணம் என்றாலும் அதற்கு நம்மூரில் வித்திட்டது யார்? தொழில்நுட்பம் கொண்டு வருவது எளிது. ஆனால் அதைத் திறம்பட கையாளத் தேர்ந்த மனிதவளம் (Human Resource) எப்படி எங்கே கிடைக்கிறது? படத்தில் ஒரு நிமிடமே வரக்கூடிய அனிமேஷன்/ஸ்பெஷல் எஃபெக்டிற்குப் பல ஆயிரம் மணி தயாரிப்பு நேரம் ஆகிறது என்கிறார்கள். இவற்றிற்கான படைப்பாளிகள் எங்கே கிடைக்கிறார்கள், எங்கு தயாராகிறார்கள்?

அனிமேஷன்/ஸ்பெஷல் எஃபெக்ட்ஸ் என்றதும் சட்டென நினைவிற்கு வரும் டிஸ்னி, ஸ்டீவன் ஸ்பீல்பெர்க், லூகாஸ். நிறுவனங்களைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, இன்று



• கம்ப்யூட்டர் கேம்ஸ்

செய்த பென்டாமீடியா, மல்டிமீடியாவில் வாழ்க்கைச் சாலை அமைத்துக் கொடுக்கும் பயிற்சிக் கூடமாக விளங்குவது பலருக்குத் தெரியாது. தங்கள் தேவைக்காகப் பயிற்சி அளிக்கத் தொடங்கிய பென்டாமீடியா இன்று மல்டி மீடியா/அனிமேஷனில் சிறந்த பயிற்சி நிறு




• லைப்ரரி

சித்திரமும் மௌஸ் பழக்கம்...!

வளமாக விளங்குகிறது. வருடம் சுமார் ஆயிரம் பேருக்குப் பயிற்சி அளிக்கக் கூடிய வசதி இங்கு உண்டு.

என்ன கற்கலாம்?

"2டி, 3டி டிஜிடல் அனிமேஷன், ஸ்பெஷல் எஃபெக்ட்ஸ், எடிட்டிங் என்று மூன்று வாரம் முதல் மூன்று மாதம் வரை போகும் பல பாடப் பிரிவுகள் அனைத்தும் குருகுல பாணியில் இங்கேயே தங்கியிருந்து படிக்கலாம். அதற்கேற்ப ஏராளமான வசதிகள். இருநூறுக்கும் மேற்பட்ட அறைகள் கொண்ட ஹாஸ்டல். 24 மணி நேரம் திறந்திருக்கும் கம்ப்யூட்டர் லேப். விளையாட்டு மைதானம், நீச்சல் குளம், ஜிம்... எல்லாம் இருக்கின்றன. பயிற்சிக் கட்டணம் ரூ. 24000. ஹாஸ்டல் உணவு உட்பட ரூ. 75,000.



யார் யார் பயிற்சி பெறலாம்?

"மல்டிமீடியா பயிற்சி பெற ஓவியராகவோ, கம்ப்யூட்டர் தேர்ச்சி பெற்றவராகவோ இருக்க வேண்டிய அவசியமில்லை. பட்டப் படிப்பு முடித்தவர்கள் வழக்கமாகப் பயிலும் கம்ப்யூட்டர் கல்வி போல இந்தப் பயிற்சி பெறலாம். சித்திரமும் கைப்பழக்கம் என்ற நிலை மாறி, சித்திரமும் மௌஸ் பழக்கம் என்றாகி விட்டது!

பயிற்சியின் பிரத்யேகம்...

பென்டாமீடியா வெறும் பயிற்சி நிறுவனமாக இல்லாமல் வர்த்தகரீதியாக அனிமேஷன் தொழில் செய்வதால் படிப்பவர்களுக்குப் பல அனுகூலங்கள். ஆயிரக்கணக்கான கம்ப்யூட்டர் ஒர்க் ஸ்டேஷன், லேட்டஸ்ட் தொழில்நுட்பம், அதோடு பாடங்களுக்குப் பயன்படுத்தும் சாஃப்ட்வேர், புரொடக்ஷன் சாஃப்ட்வேர் ஆக இருப்பது. இவற்றிற்கெல்லாம் மேலாக ஹாலிவுட் படங்களுக்கே ஸ்பெஷல் எஃபெக்ட்ஸ் செய்வதால் 'பென்டாமீடியா' எனும் பிராண்ட் இமேஜ் கூடுதல் சான்றிதழாக அமைகிறது" என்கிறார்கள் அந்த அதிகாரிகள்.

"சரி, இதையெல்லாம் படித்து விட்டு என்ன வேலை பார்க்கலாம்?"

"மல்டிமீடியா/ கிராஃபிக்ஸ் படித்தவர்களுக்கு, சினிமா, டீவி, விளம்பரக் கல்வித் துறைகளில் வேலை வாய்ப்பு நம் நாட்டில் மட்டுமின்றி மேல்நாடுகளிலும் இருக்கிறது. மாதம் எட்டாயிரம் ரூபாய்க்குக் குறைவில்லாத வருமானம். இது ஒரு வளரும் தொழில் என்பதால் வேலை வாய்ப்புகள் ஏராளம்" என்று கூறும் பென்டாமீடியா அதிகாரிகள், "JAVA, C, C++, UNIX போன்ற ஏனைய சாஃப்ட்வேர்களைப் போல மல்டி மீடியாவில் கண் சிமிட்டும் நேரத்தில் சாஃப்ட்வேர் காலாவதியாகிவிடுவதில்லை. நிரந்தரத் தன்மைக் கூடுதலாக இருப்பதால் தைரியமாகப் படிக்கலாம்" என்கிறார்கள்.

"சாஃப்ட்வேர் வியாபாரம் சறுக்கியிருந்தாலும் மல்டி மீடியா அனிமேஷன் துறை 'ஃபாஸ்ட் புட்' போல பாய்ச்சலில்தான் இருக்கிறது. சினிமா, டீ.வி. விளம்பரம் இருக்கும் வரை இதன் வளர்ச்சிக்குக் குறையொன்றுமில்லை" என்கிறார்கள்.

கொஞ்சம் படிப்பில் மூழ்கினால், பெய்யெனப் மழையைப் பெய்ய வைக்கலாம். நடுவானில் நில்லென மழையை நிற்க வைக்கலாம்!

ஜாலியாக வேலை பார்க்க கிராஃபிக்ஸ் படிக்கலாம் போல்தான் தோன்றுகிறது.

— நவீன்

நீங்க அல்வான்னா; நாங்க அல்ஃபான்ஸோ!

'அம்மா' ஆட்சிக்கு வந்த பிறகு பண விஷயமெல்லாம் உங்களுக்குத் தூசுதான்; இருந்தாலும் ஒரு பக்கம் என்றான்; ஒரு பக்கம் காலியான கஜானா என்று தவித்துக் கொண்டிருக்கும் எங்களுக்கு இதுபெரிய விஷயம்தான். பி.எம்.சியில் 'ஸ்வீப்பரான' காட்கே வீட்டிலிருந்து அதிகாரிகள் 80 லட்சம் ரூபாயைக் கைப்பற்றியிருக்கிறார்கள். காட்கே கைதானதில் 'எல்' வார்டு ஸ்வீப்பர்களுக்கெல்லாம் ஒரே குஷி. தம் சகோதரர்களுடன் இணைந்து அவர் நடத்திய 'கொடுக்கல்-வாங்கல்' பிஸினஸில், அவரிடம் வெற்றுப் பத்திரத்தில் கைநாட்டிட்டு கடன் வாங்கி அழியாதவர்களே இல்லையாம். சம்பளப் பட்டுவாடாவின் போது, அதிகாரியின் பக்கத்திலேயே நின்று, முக்கால் வாசியைத் தாம் வசூலித்துக் கொண்டு, மிச்சம் மீதியைத்தான் தொழிலாளர்களிடம் சேர்ப்பிப்பாராம். வாங்கத் தெரிந்தவர் இப்போது சிறையில் நன்றாக வாங்கிக் கட்டிக் கொண்டிருக்கிறார்.

பணத்துக்குப் பேயாய் அலையும் பழக்கம் எங்கிருந்து துவங்குகிறது என்று ஒரு ஆராய்ச்சியில் இறங்கினால், அதற்குப் பிள்ளையார் சுழி போட்டுக் கற்றுத் தருவதே பள்ளிகள்தான் என்ற உண்மை தெரியவரும். - ஊஹூம்... அப்படி ஒரு புதிய 'கோர்ஸெல்லாம்' அறிமுகப்படுத்தவில்லை. எல்.கே.ஜி. அட்மிஷனுக்கே ஆயிரக்கணக்கில் டொனேஷன் வாங்குவது ஒன்றும் புதிதல்ல. ஆனால் பணம் வசூலிக்கப்படும் காரணங்கள் இருக்கிறதே... அப்பப்பா! பயந்தரில் ஒரு பள்ளியில் 10,000 ரூபாய் கேட்கிறார்கள். 'ஸ்விம்மிங் பூல்' கட்டுவதற்கு! இத்தனைக்கும் அங்கே குடிநீருக்கே கஷ்டம். 'இரண்டு நாளாகத் தண்ணியில்லாமல் குளிக்கவேயில்லை. துணி துவைக்கவுமில்லை. இவர்களுக்கு ஸ்விம்மிங் பூலுக்குப் பணம் வேண்டுமாமே?' எனக் கொதிக்கிறார்கள் பெற்றோர்கள். ஸ்கூலில் நன்றாகத்தான் தண்ணி காட்டுகிறார்கள்!



மும்பை மசாலா

பணம் படுத்தும் பாட்டை என்னவென்பது? முகந்தெரியாத டெலிஸீரியல் நட்சத்திரங்களையெல்லாம்கூட ஹாலிவுட் ரேஞ்சுக்கு உயர்த்திவிடுகிறதே? "க்யூன் கீ ஸாஸ் பீ கபீ பஹூ தி" (மாமியாரும் ஒரு வீட்டு மருமகளே) படு பாப்புலர் ஆன பிறகு, அதில் வரும் விரானி குடும்பமும் ஃபேமஸாகிவிட்டது; மூன்று முக்கிய பாத்திரங்களில் தோன்றும் கேதகி தவே (தக்ஷா), ஸ்மிருதி மல்ஹோத்ரா (துளஸி) அமர் உபாத்யாயா (மிஹிர்) ஆகியோர் திடீரென்று ஸ்டிரைக்

பண்ண ஆரம்பித்துவிட்டார்களாம். இன்னும் ஒரு வருடத்துக்கு இந்தத் தொடர் தொடரப்போவது தெரிந்ததும், 'ரேட்டை' ஏற்றிவிட்டார்களாம். பாலாஜி ஃபிலிம்ஸின் இளம் தயாரிப்பாளர் ஏக்தா கபூர், மூடிய அறைக்குள் மூவரையும் உட்கார்த்தி, மூன்று மணி நேரம் பேசிய பின், ஒருவாறாக ஊதிய உயர்வை அறிவித்து, நிலைமையைச் சரிக்கட்டினாராம். ஆனால் சம்பந்தப்பட்டவர்கள் என்னமோ, "சீச்சீ... பணத்துக்காகப் போராடவில்லை, தேதி அட்ஜஸ்ட் செய்வது பற்றித்தான் பிரச்னை. ஆனால் சம்பளத்தை அவர்களாகக் கூட்டிக் கொடுத்தார்கள்'' என்ற ரீதியில் பேசுகிறார்கள். (டேட்ஸ் பிரச்னையா? இவர்களுக்கா? என்றெல்லாம் கேட்கக் கூடாது) ஒரு டெலி ஸீரியலின் வெற்றிக்குக் காரணமானவர்களே இந்தப் போடு போட்டால் ''முக்தா ஆர்ட்ஸ்'' என்றொரு திரைப் படத் தயாரிப்பு நிறுவனத்தின் வெற்றிக்கே காரணமான சுபாஷ் காய், என்ன போடு போடுவார்? அதுதான் பதினெட்டு கோடிகளுக்குத் தம்மை இன்ஷ்யூர் செய்து கொண்டுவிட்டார். தனி நபர் பாலிஸியில், மிக அதிகத் தொகைக்கு இன்ஷ்யூர் செய்யப்பட்டிருக்கும் முதல் இந்தியர் 'காய்' தான் என்கிறார் எல்.ஐ.சி. சேர்மனான பாஜ்பாய்.

இது, ஒரு நிறுவனத்தால், அதன் லாபத்துக்கு அடிப்படையான நபர் மீது எடுக்கப்படும் பாலிஸியாம்; வருடாந்தர ப்ரீமியம் 3.92 கோடிகள்தான்!

பணம் பண்ணுவதற்கு நூதன வழிகளைக் கண்டுபிடித்துக் கொண்டே இருப்பவர்கள் மும்பைக்காரர்கள். இதோ ஒரு புது வழி. உங்கள் வீட்டுக்கு மாம்பழ பார்சலுடன் ஒருவர் வந்து 'பெல்லை' அழுத்துகிறார். உங்கள் உறவினர், உங்களுக்கு அன்பளிப்பு அளித்திருப்பதாகச் சொல்கிறார். நீங்கள் புத்திசாலித்தனமாக சந்தேகப்பட்டு, "போய்ட்டு வாப்பா'' என்கிறீர்கள். "டெலிவரி செய்ய வேண்டியது என் கடமை; எடுத்துக் கொள்வதும் கொள்ளாததும் உங்கள் இஷ்டம்'' என்று அவர் மாம்பழக் கூடையை உங்கள் வாயிலில் வைத்துவிட்டு நடையைக் கட்டுகிறார். ஒரு பதினைந்து நிமிடமாகியும் கூடை அங்கேயே இருப்பதால், சபலப்பட்டு, அதை நீங்கள் உள்ளே கொண்டு வருகிறீர்கள். (நோ நோ... உள்ளே நோ பாம்.) அரை மணி கழித்து அதே நபர் மீண்டும் உங்கள் பெல்லை அழுத்தி, "ஸாரி மேடம்.. பார்சல் உங்களுக்கல்ல, அடுத்த பில்டிங்கில் விருப்பவருக்கு. மன்னிக்கவும். கூடையைக் கொடுக்கிறீர்களா? தவறு நடந்துவிட்டது'' என்கிறார். நீங்களும், "சரி உள்ளே வந்து எடுத்துப் போய்த் தொலை'' என்கிறீர்கள். அவர் உள்ளே நுழைகிறார். கத்தியைக் காட்டுகிறார். வீட்டைக் காலி செய்கிறார். இது எப்படி இருக்கு? நீங்கள் அல்வா கொடுத்தால் நாங்கள் அல்ஃபோன்ஸோவே கொடுப்போமாக்கும்.

எவ்வளவு பணம் வந்தாலும் அலட்டிக் கொள்ளாமல் இருக்கத் தெரிந்தவர்களும் உண்டு. நம் சச்சின் மாதிரி... 'வர்ல்ட்டெல்'லின் பாஸ், மார்க் மாஸ்கரென்ஹாஸ் இவருடன் தொண்ணூறு கோடிகளுக்கு (வருடம் பதினெட்டு கோடிகள்) ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருக்கிறார். 'எந்த தைரியத்திலய்யா இப்படிக் காசை வாரி இறைக்கிறீர்?' என்று அவரிடம் கேட்காதவர்களில்லை. 'சச்சின் எனும் மாமனிதன் பேரில் இருக்கும் [illegible]' என்கிறார்



• சுபாஷ் கய்

பதிலாக. 'லிட்டில் மாஸ்டரின்' மகிமை அவருக்குத் தெரிகிறது. நம்மவர்களுக்குத் தெரியவில்லை; வான்கடே ஸ்டேடியத்துக்கு அவர் பெயர் வைப்பதாயிருந்தது. அப்புறம் பெவிலியனுக்கு அவர் பெயரைச் சூட்டுவோம் என்றார்கள். எல்லாம் தகராறாகிப் போய்க் கடைசியில் ஒரு சின்ன என்க்ளோஷருக்குச் சச்சின் பெயரை வைத்திருக்கிறார்கள். இந்தப் பெயரால்தான் அவர் பெயர் எடுக்க வேண்டும் என்பதில்லை... ஆனால் பணத்தாலும் புகழாலும் மனிதர் மனம் பெயராமல் இருந்தால் சரிதான். சச்சின் கௌரவிக்கப்பட்ட விழாவில், இவரது "தேங்க்யூ'' லிஸ்டில் மனைவி அஞ்சலி பெயரை முதலில் மறந்து விட்டாரே!

- ஜெயஸ்ரீ ராஜ்

மூளையைப் பத்தி என்னென்னவோ ரிசர்ச் நடந்திருக்கு. பிரெயின் ஸ்கானிங் சாத்தியமானதிலேருந்து ஹ்யூமன் திங்கிங் பத்தி, பெரிய பெரிய விஷயங்களையெல்லாம் கண்டுபிடிச்சுருக்காங்க. அமெரிக்காவ லேட்டஸ்ட் ஸ்டடி என்ன தெரியுமா...? நியூரோ தியாலஜி. அதாவது ரிலிஜியஸ் ஆர் ஸ்பிரிசுவல் எக்ஸ்பீரியன்ஸஸ் ஏற்படறப்போ மூளையில என்ன மாற்றங்கள் ஏற்படுதுன்னு ஆராய்ச்சி.

தியானத்தில இருக்கும்போதும் சில அபூர்வமான 'ஆன்மிக' அனுபவங்கள் ஏற்படுற போதும் மூளையில சில பிரத்யேக மாற்றங்கள் ஏற்படுதுன்னு ஸ்கான் படங்கள்லேருந்து தெரியுது. ஆனால் இந்த ஆராய்ச்சியோட முடிவுல கடவுள் மனுஷனோட படைப்பா இல்லே மனுஷன் கடவுளோட படைப்பான்னு உறுதியாச் சொல்லவே முடியாதுன்ற முடிவுக்கு மட்டும் உறுதியா வந்திருக்காங்க ஆராய்ச்சியாளர்கள்!

இதுக்கு இவ்வளவு ஆராய்ச்சி பண்ணணுமா, 'விண்டவர் கண்டிலர்; கண்டவர் விண்டிலர்'ன்னு ரொம்ப சிம்பிளா நம்மவங்க என்னிக்கோ சொல்லிட்டுப் போய்ட்டாங்களே!

விண்டவர் கண்டிலர்ன்றது இன்னொரு விஷயத்துக்கும் கச்சிதமா அப்ளை ஆகும். சில பேருக்கு மட்டும் ஏன் சென்ஸ் ஆஃப் ஹ்யூமரே இல்லைன்றதைக் கரெக்டா கண்டுபிடிச்சு சொல்ல முடியுமா..? இதுலயும் விண்டவர் கண்டிலர்; கண்டவர் விண்டிலர் தான்! இந்த வாரம் சூப்பர் மார்க்கெட் ஷோ கேஸ்ல டிஸ்ப்ளே ஆகியிருக்கற சிம்புவோட கார்ட்டூனைப் பாருங்க... ஒரு நாய்க்குட்டி உள்பட குடும்பத்துல பதினோரு பேர் விழுந்து விழுந்து விதவிதமா சிரிக்கறப்போ கடைக்குட்டி பையன் மட்டும் கையைக் கட்டிக்கிட்டு 'சிரிக்கணும்னா காசு கொடு'ங்கன்ற மாதிரி எக்ஸ்பிரஷனோட உட்கார்ந்திருக்கு!



ஒரு நகைச்சுவை கட்டுரை தொகுப்போட முகப்பு அட்டைல வர படம் இது. புக் தலைப்பு : வாங்க சிரிக்கலாம். *(அமுதம் பதிப்பகம், ஏ11/4, மீனாட்சி அபார்ட்மெண்ட்ஸ், அண்ணா நகர், மதுரை - 20.)* எழுதினவர் கு. ஞான சம்பந்தன். யெஸ்! ஜெயா டீவி. புகழ்... சாரி! கல்கி இளைஞர் திருவிழா புகழ் ஞான சம்பந்தனேதான். மோஸ்ட் டிலைட்ஃபுல் ஹ்யூமர்!

சிரிப்புல பலவிதம் இருக்கு. கேலிச் சிரிப்பு, போலிச் சிரிப்பு, கோபச் சிரிப்பு



குபீரியாரிட்டி சிரிப்புன்னு எக்கச்சக்கம். பட்டி பெஸ்ட் இஸ் ஆனந்த சிரிப்பு! 'வாங்க சிரிக்கலாம்' வரவழைக்கிறது இந்த பெஸ்ட் காடகரி சிரிப்பைத்தான். பெரும்பாலும் கிராமத்து வாழ்க்கையின் நிஜ அனுபவங்கள் பத்திதான் எழுதிருக்கார் ஞானசம்பந்தன். சிசுவேஷனோட யதார்த்தமும் மொழியோட நேர்மையான லாகவமும் சேர்ந்து நம்மளை அப்படியே புழுதிபடிஞ்ச கிராமத்துக்குள்ளே தூக்கிப் போட்டுடுது. வலிந்து கிச்சு கிச்சு மூட்டாத நேடிவ் ஹ்யூமர்... எல்லாத்துக்கும் மேல... நோ ஆபாசம்! (சினிமா டயலாக் கெழுத ஞானசம்பந்தனைக் கூப்பிடவே மாட்டாங்க, அப்பாடி!) புன் முதல் குபீர் வரை அறுபது பக்கங்களிலும் தலா அரை டஜன் முறையாவது வகை வகையா சிரிக்கலாம்... காரணம், ஞானசம்பந்தன் பெரும்பாலும் சிரிக்கறது மத்தவங்களைப் பார்த்து இல்லே... தன்னைத் தானே பார்த்து என்கிறதால...



ஷோ கேஸ் இன்

புன் முதல் 'குபீர்' வரை!


னொரு படமும் இருக்கு, பார்த்திங்களா...? (ஹிந்து பேப்பர்ல வெளியானது). ஸ்வெட்டர் மாட்டிக்கிட்டு நிக்கற அந்த இரண்டு மொட்டைக் குஞ்சுகளும் பெங்குவின் பாப்பாக்கள்! டாஸ்மேனியா கடற்கரையோரத்துல திட்டுத் திட்டா பெரிய ஆயில் ஸ்பில்ஸ் மிதக்குதாம். (அதாவது சரக்குக் கப்பல் ஏற்றி வந்த பெட்ரோலிய கச்சா எண்ணெய் சிந்தியிருக்கு.) அந்த எண்ணெய், அங்கே வாழற சுமார் ஆயிரம் பெங்குவின்களோட உடம்புல படிஞ்சு போயிருக்கு. அதுங்க அலகுகளால சிறகுகளைக் கோதிக் கோதி விடறது வழக்கம். எண்ணெய் படிஞ்ச உடம்பை இப்படிக் கோதினா ஆயில்ல இருக்கற விஷத்தன்மை துளித்துளியா உடம்புக்குள்ளே போய், ஆயிரம் பெங்குவின்களையும் பாதிக்கும்றதால டாஸ்மேனியா சுற்றுச்சூழல் பாதுகாப்பு அறக்கட்டளை ஒரு காரியம் செஞ்சுருக்கு...

உலகம் பூரா இருக்கற பறவை சினேகிதர்கள்கிட்டே ஸ்வெட்டர் பின்னி அனுப்பச் சொல்லி கோரிக்கை விடுத்திருக்கு... அளவெல்லாம் குறிப்பிட்டு மாடலும் வரைஞ்சு 15 இஞ்ச் உயர ஸ்வெட்டர்கள் கேட்கப் போக, தேவைக்கும் அதிகமா வந்து குவிஞ்சு போச்சாம்! 'போதும் இனி அனுப்பாதீங்க'ன்னு இப்போ அறிவிக்க ஆரம்பிச்சிருக்காங்க.

இது டாஸ்மேனியாவுல நடந்த நல்ல காரியம். தருமமிகு சென்னையில என்னாச்சு தெரியுமா...? உலகத்துலயே நகர மையத்துல உள்ள ஒரே வனவிலங்கு பூங்காவான கிண்டி நேஷனல் பார்க்ல தெரு நாய்கள் நுழைஞ்சிருக்கு... அங்கே உள்ள மான்களை நாய்கள் 'வேட்டை' ஆட, நாய்களை வேட்டையாட நரிக்குறவர்களை எங்கேஜ் பண்ணி, சுட்டுத் தள்ளிட்டாங்க. ஒரு விலங்கைப் பாதுகாக்கப் போய் இன்னொண்ணுக்கு இப்படி குரூர முடிவான்னு கேட்டா, 'மான் மாமிச சுவைக்குப் பழக்கப்பட்டுப் போனா நாய்கள் தொடர்ந்து வேட்டையாடும்; அதனாலதான் இப்படி செஞ்சோம்'னு பதில்.

அதுக்காக இவ்வளவு குரூரமா...!ன்னு கேட்டா அதுக்குத்தான் இன்னும் பதிலே இல்லை.


— சுமி



மேஷம்: 'அட, இவ்வளவு புத்திசாலியா?' என்று எல்லாரும் மூக்கில் விரல் வைக்கும்படி காரியம் செய்வீங்க. வரவு கணக்கை எழுதி மாளாது. பணம் வந்துக்கிட்டே இருக்கும். ரொம்ப நாளா எதிர்பார்த்துக்கிட்டு இருந்த குட்நியூஸ் வந்திடும். அப்புறம் என்ன, பஜாஜ் விளம்பரத்தில் வர்ற மாதவன் மாதிரி உற்சாகமா சீட்டி அடிச்சிக்கிட்டே வலம் வருவீங்க. ஃபாரின் டிரிப் போக சான்ஸ் இருக்கு.



ரிஷபம்: ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலேம்பாங்க. இந்த ராசியைச் சேர்ந்த ஆடவர்களுக்குப் பெண்களாலே நிறைய அனுகூலம் ஏற்படப் போகுது. பேசிப் பேசியே எல்லாரையும் மயக்கிடுவீங்க. இது 'வியாபார ஸ்பெஷல்' வாரம். வியாபாரிகள் வளர்ச்சியோ வளர்ச்சி அடைவாங்க.



மிதுனம்: எந்தக் காரியத்தையும் எடுத்தமா, கவிழ்த்தமான்னு செய்யாம, ஒரு தடவைக்கு நாலு தடவை யோசிச்சு செய்யுங்க. 'எங்கே நிம்மதி'ன்னு பாலும் பழமும் சிவாஜி கணக்கா பாடிக்கிட்டே இருப்பீங்க. கிரக சஞ்சாரம் உங்களுக்கு அனுகூலமா இல்லே. அதுதான் காரணம். தூக்கம் சாமானியமா வராது. உடம்பு பாதிக்கப்படும். பணம் கையிலேயே நிற்காது. கடன்கூடப் படலாம். பெரியவங்க சொல்படி கேட்டு நடங்க.




கடகம்: எடுத்த காரியத்தை, கண்ணை மூடித் திறக்கறதுக்குள்ளே நிமிஷமா முடிச்சிடுவீங்க. அதுவும் வெற்றிகரமா. குடும்பத்தில் ஒரு சந்தோஷமான வைபவத்துக்கு அஸ்திவாரம் போடப்படும். அது 'டும் டும்' சத்தமாக இருக்கலாம். அல்லது 'குவாகுவா' சத்தமாக இருக்கலாம். ரியல் - எஸ்டேட் பிஸினஸ் டல்லா இருக்கேன்னு புலம்பாதீங்க. வீடு, நிலம் விஷயத்தில் பெரிய லாபம் வரப் போகுது. பணம் ஒரு பிரச்னையாவே இருக்காது.



சிம்மம்: ஐ.ஏ.எஸ் ஆபீஸர் கணக்கா உங்க நிர்வாகத் திறமை கொடி கட்டிப் பறக்கும். பேச்சில் வசீகரமும் சாமர்த்தியமும் சொட்டச் சொட்ட வழியும். உங்க தோளுக்கு ஒரு பொன்னாடை காத்திருக்கு. புது பதவியோ, பட்டமோ, விருதோ வரலாம். இத்தனை இருந்தும் உங்க மனசில் மட்டும் குழப்பம் இருந்துக்கிட்டே இருக்கும்.



கன்னி: காரைக்கால் அம்மையார் கணக்கா, காரியங்களைத் தலைகீழ நின்னாவது முடிச்சிடுவீங்க. வெற்றியும் பெறுவீங்க. உங்க மதிப்பும் அந்தஸ்தும் உயருவதற்குக் கேட்கவா வேணும்? எல்லாரும் உங்களைத் தலையில் தூக்கி வெச்சுக்கிட்டுக் கொண்டாடுவாங்க. பணத்தைப் பத்தின கவலையை விடுங்க. வரவு செலவு சீரா இருக்கும். உடம்பு ஆரோக்கிய விஷயத்திலும் கவனமா இருங்க.



கன்னி ராசிக்காரரான இன்பத்தமிழன் எம்.எல்.ஏவுக்கு மதிப்பும் அந்தஸ்தும் உயரப் போகுதாம்.

நடக்குமென்பார், நடக்கும்!

துலாம்: உங்களை உண்டு இல்லைன்னு பண்ணிக்கிட்டிருந்த பிரச்னைகள் மறைஞ்சு போயிடும். எதிர்ப்புகளை எல்லாம் நொறுக்கித் தள்ளிட்டு வெற்றியை அள்ளப் போறீங்க. அட்வான்ஸ் வாழ்த்துகள். ஆனால் எதிலும் அவசரமோ பதற்றமோ படாமல் நிதானமா செயல்படுங்க. குறுக்கு வழிகளில் எல்லாம் 'நோ-என்ட்ரி போர்டு'ஐ மானசிகமா மாட்டிடுங்க. உங்க மேலே ஒரு வீண் பழி வந்து விழ வாய்ப்பிருக்கு.

விருச்சிகம்: இந்த வாரம் பூராவும் உங்களுக்குப் பாராட்டு மழைதான் போங்க. வெயிலுக்கும் அதுக்கும் சும்மா ஜில்லுன்னு உணர்வீங்க. எந்தக் காரியத்தில் நீங்கள் ஈடுபட்டிருந்தாலும் வளர்ச்சி தெரியும். நோக்கம் நிறைவேறிக்கிட்டே வரும். நல்லவங்க, உங்களுக்கு உறுதுணையா இருப்பாங்க.

தனுசு: என்னுங்கிறதுக்குள்ளே எண்ணெயாய்க் காரியங்களைச் செஞ்சு முடிப்பீங்க. விஐபிங்களோட கடைக்கண் பார்வை உங்க மேலே வீசிக்கிட்டே இருக்கும். பெண்கள் நல்வி, குமரன், தங்கமாளிகைன்னு ஒரு ரவுண்டு வருவாங்க. பலன், அவங்க மனசில் உற்சாகம் கரை புரண்டு ஓடும். விருந்து, உபசாரம்னு எல்லாரையும் சந்தோஷப்படுத்துவாங்க. கோபத்தைக் கொஞ்சம் கன்ட்ரோல் பண்றது நல்லது.

மகரம்: உங்க முகராசியோட வால்யூ அதிகரிக்கப் போகுது. நண்பர்களும் உறவினர்களும் உங்ககிட்டே நடந்துக்கற விதத்திலிருந்தே இது தெரிஞ்சிடும். பண நடமாட்டம் சீராக இருக்கும், பாதிப் பிரச்னை அங்கே முடிஞ்சுப் போயிடுதில்லையா! உத்தியோகஸ்தர்களும் சரி, வியாபாரிகளும் சரி, ஒரு செழிப்பான சூழ்நிலையை உணர்வாங்க. பெண்களோட நீண்ட நாள் ஆசைகள் ஒவ்வொன்றாக நிறைவேறும்.

கும்பம்: 'ஜீ பூம்பா'ன்னு மந்திரம் போட்ட மாதிரி எதிரிகள் எல்லாம் காணாமல் போயிடுவாங்க. எடுத்த காரியத்தை ஜாம் ஜாம்னு முடிச்சிடுவீங்க. பூஜை புனஸ்காரமுன்னு பக்தி மார்க்கத்தில் ரொம்ப சுவாரஸ்யமா ஈடுபடுவீங்க. புதுசா ஏதாவது வாங்கும் பட்சத்தில், அது சிவப்பு கலரா இருக்கிற மாதிரி பார்த்துக்கங்க. நிச்சயம் ஆதாயம் உண்டு.

மீனம்: நீங்க செய்யற காரியங்களில் திறமையும் புத்திசாலித்தனமும் எல்லாருடைய கண்ணையும் பறிக்கிற அளவுக்குப் பளிச்சிடும். முக்கியமான பொறுப்புகளை டக்கு டக்குன்னு உங்க கையில தூக்கிக் கொடுத்திடுவாங்க. மாணவர்களுக்கு வெற்றி வாய்ப்பு இருக்கு. பிடிச்ச காலேஜில் அட்மிஷனாக இருக்குமோ? பெண்கள் மனசு நிறைஞ்சிருக்கும், குடும்பத்தில் மகிழ்ச்சிக்கு கேட்கவா வேணும்?

ஜூன் 6 முதல் 12 வரை



உட்சுகுஷி!

திரிசங்குக்காக ஒரு சொர்கத்தைத்தான் சிருஷ்டித்தார் விச்வாமித்ரர். ஆனால் விளையாட்டுப் போட்டிகளுக்காக மூன்று சொர்க்கங்களை சிருஷ்டித்துக் கொண்டிருக்கிறது ஜப்பான் அரசாங்கம்.

விஷயம் இதுதான். 2008 வருட ஒலிம்பிக் விளையாட்டுக்களை ஒசாகாவில் நடத்த விருப்பம் தெரிவித்திருக்கிறது ஜப்பான். அதற்காக அது செய்திருக்கும் முதல் காரியம், கடல் அரித்துக் கொண்டு போய்விட்ட ஓர் நிலத்தைப் பழையபடி மீட்டு மைஷிமா, யூமெஷிமா, சக்ஷிமா என்று மூன்று செயற்கைத் தீவுகளைப் படைத்திருப்பதுதான்.

மூன்று தீவுகள் எதற்காக?

பிரதான ஸ்டேடியத்திற்காக ஒன்று. வீரர்களுக்குத் தங்கும் வசதி செய்து கொடுப்பதற்காக ஒன்று. பத்திரிகையாளர்களுக்கென்றே பிரத்யேகமாக ஒன்று.

அடேங்கப்பா!

இத்தனை பிரும்மாண்ட ஏற்பாடுகளும் ஒலிம்பிக் கமிட்டியிடம் எப்படியாவது ஒப்புதல் வாங்கிவிட வேண்டும் என்பதற்காகவாம்.

அதென்ன அப்



• அடாச்சி சபுரோ

படி ஒரு ஆர்வம் என்று கேட்டால், தீவுகளை உருவாக்கியிருக்கும் கம்பெனியின் நிர்வாகி அடாச்சி சபுரோ சொல்கிறார் - "இதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று, எங்களுடைய நாட்டின் வருங்காலத்தை நிர்ணயிக்கப் போகும் ஜப்பானிய இளைஞர்கள், உலகத்தின் தலைசிறந்த வீரர்கள் பங்குகொள்ளும் ஒரு சர்வதேச விளையாட்டுப் போட்டியைப் பார்க்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்து, அதன் மூலம், அவர்கள் மனத்தில் பலவித லட்சியங்களையும் தன்னம்பிக்கையையும் வித்திட வேண்டும் என்பது. மைஷிமா என்பது வெகு 'உட்சுகுஷி'யான (ரம்மியமான) இடம். இரண்டு ஆறுகள் கடலில் சங்கமிக்க, காட்டு விலங்குகளும் பறவைகளும் பறந்து திரிய, அஸ்தமிக்கும் சூரியனைப் பார்க்க பார்க்க பரவசமாக இருக்கும் - இந்தப் பரவசத்தை உலகின் வெவ்வேறு பகுதிகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் பலரும் வந்து அனுபவிக்க வேண்டும் என்பது இரண்டாவது காரணம்..." என்கிறார்.

கேட்கவே உட்சுகுஷியாக... சாரி, குஷியாக இல்லை!

- கிருஷ்

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)



வர்த்தமானன் பதிப்பகம்

வழங்கும்

மாபெரும் முன்வெளியீட்டுத் திட்டம்

சலுகை, சலுகை மேல் சலுகை, தவணை முறை ஆகிய அனைத்தும் உண்டு.

ஆழ்வார்களின் அமுதப் பாடல்களான

நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

மூலமும் விளக்கவுரையுமாக - 9 தொகுதிகள்

(4,500 பக்கங்களில்) விலை ரூ. 1000.00

வர்த்தமானன் அறக்கட்டளையினரின் உதவித்தொகை ரூ. 250.00

ரூ. 750.00

முன்வெளியீட்டுச் சலுகை ரூ. 150.00

சலுகை விலை ரூ. 600.00

'மயர்வற மதிநலம் அருளப் பெற்ற' ஆழ்வார்களால் திருமாலின் சிறப்பியல்புகளைக் குறித்துப் பாடப்பட்ட தெய்வப் பனுவல் தான் 'நாலாயிர திவ்வியப் பிரபந்தம்' ஆகும். திருமாலின் உயர் நலங்களில் ஆழ்ந்தவரால் பாக்களாகப் பாடப் பட்டமையாலும், தெய்வத் தொடர்புடைமையாலும் இது திவ்வியப் பிரபந்தம் எனப்படுகிறது.

இந்நூலிற்கு உரைவகுத்த டாக்டர் இரா. வ.கமலக்கண்ணன் வித்துவான், பி.லிட், எம். ஏ (சிறப்புநிலை) பி.எட், பி.எச்.டி, முதலிய பட்டங்களைப் பெற்றவர். பல ஆண்டுகளாக மேல்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியராகவும், பின்னர் தலைமையாசிரியராகவும் பணியாற்றிய அனுபவம் மிக்கவர். இவரின் 'உலகப் பெருங்கவிஞர் கம்பர்' என்னும் நூல் தமிழக அரசின் முதற்பரிசைப் பெற்றது. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் தொகுத்து வரும் பேரகராதிக்கு 'முதலாழ்வார் பாசுரங்கள் முந்நூறுக்கும்' இவர் 'சொல்லடைவு' அமைத்துக் கொடுத்துள்ளார். திருமலை திருப்பதி தேவஸ்தான மாத வெளியீடான 'சப்தகிரி'யில் இவரது வைணவ சமயம் பற்றிய கட்டுரைகள் பல இடம் பெற்று வருகின்றன. 'ஆலய தரிசனம்' மாத இதழிலும் இவரது கட்டுரைகள் வெளிவருகின்றன.

இப்படியாக எழுத்தாற்றல் அனுபவமும், சென்னை வானொலியில் சமய இலக்கியப் பேருரைகள், பல வைணவ மாநாடுகளில் சிறப்புரையாற்றிய அனுபவமும், 40 ஆண்டுகளாக இவர் சேகரித்து வைத்த ஆய்வுச் செய்திகளுடன், சம்பிரதாய நூல்களை வல்லார் வாய்க் கேட்டும் பெற்ற அனுபவ அறிவும் சேர்ந்து உருவானது தான் இந்த நாலாயிர திவ்வியப் பிரபந்த விளக்க உரை.

4000 பாடல்களுக்கும் விளக்கவுரை மற்றும் சிறப்புரையும் என்று அமைக்கப்பட்ட இந்நூலின் தொடக்கத்தில், உரையாசிரியர் எழுதிய ''நூலினைப்பற்றிய செய்திகள்'' என்னும் பகுதி விரிவான முன்னுரையாக, நூலிற்கு முத்தாய்ப்பாய் அமைகிறது.

தபாலில் பெற

சலுகை விலையான ரூ.600 இல் ரூ.300 (M.O / DD) மட்டும் 7.7.2001 க்குள் அனுப்பிப் பதிவு செய்து கொள்க. 6.8.2001 லிருந்து பணம் வந்த வரிசைப்படி 9 தொகுதிகளும் V.P.P.யில் அனுப்படும். மீதித் தொகை ரூ.300, தபால் மற்றும் கட்டுச் செலவு ரூ.50 சேர்த்து ரூ.350 மட்டும் தபால்காரரிடம் செலுத்தி 9 தொகுதிகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

நேரில் பெற

எமது அலுவலகத்தில் ரூ. 300 மட்டும் செலுத்தி (7.7.2001 க்குள்) முன் பதிவு செய்து ரசீது பெற்றுக் கொள்க. ரசீதில் குறித்த தேதியில் மீதித் தொகை ரூ.300 மட்டும் செலுத்தி 9 தொகுதிகளையும் பெற்றுக் கொள்ளலாம். நேரம் : காலை 9.30 மணி முதல் மாலை 7.30 மணி வரை. ஞாயிறு விடுமுறை.

முகவரி: வர்த்தமானன் பதிப்பகம், ஏ.ஆர்.ஆர். காம்ப்ளக்ஸ், 141, வடக்கு உஸ்மான் சாலை, தியாகராய நகர், சென்னை - 17. (பனகல் பார்க் அருகில்) ✆ : 8142377 .

முக்கிய குறிப்பு : Cheque (Local உள்பட) ஏற்கப்படமாட்டாது M.O./DD அனுப்புவோருக்கு நூல்கள் தபாலில்தான் அனுப்பப்படும். நேரில் தரப்படமாட்டாது. ஒரே தடவையில் சலுகை விலையினைச் செலுத்துவோர்க்குச் சிறப்புச் சலுகை எதுவும் கிடையாது.

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2001 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka



இப்பெல்லாம் என் வீட்டில என் சமையலுக்கு ஏகப்பட்ட பாராட்டுக்கள். சாம்பார், ரசம், புளிக்குழம்பு, புளியோதரை எல்லாம் பிரமாதம். சூப்பர் டேஸ்ட். நான் உபயோகிப்பது **ரூபி புளியாச்சே.**

ரூபி புளி விதை, ஓடு, நார் நீக்கிச்சுத்தம் செய்யப்பட்டு முற்றிலும் சுகாதாரச் சூழலில் தயாரிக்கப்படுவது. ஜூஸ் நிறைந்தது. சிறிதளவு உபயோகித்தாலே போதும்.

எம்மனதையும் கொள்ளை கொள்ளும் அருமையான சமையலுக்கு **ரூபி புளி.**

A quality product by

O.M.S. AGRO FOOD PRODUCTS CORPORATION

3, Parangirinathapuram Compound, Pullalakottai Road
Virudhunagar - 626 001 Tamilnadu, India.

TAS VISION RT 747 / 01 (R)